www.tamilarangam.net

# முன்னணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


# யார் இவற்றைத் திரும்பிப் பார்ப்பது...?

## ஜனநாயகம் பேசுவோரின் வாய் ஏன் அடைக்கப்பட்டுள்ளது?

**-விடுதலைப் புலிகள்-**

மன்னார் கடற்கரை, குருநகர், யாழ்ப்பாணத் தீவுப்பகுதி, நாச்சிக்குடா ஆகிய குறுக்குக் கடற்பரப்பே இன்று முக்கியமானது. இவையே, இந்திய மீனவர்களினால் சூறையாடப்படுகின்றன. இனவாத அரசின் தலைவிரித்தாடும் பயங்கரவாதச் செயலால் ஒரு புறமும், இந்திய மீனவர்களின் சூறையாட்டம் இன்னொரு புறமுமாக தமிழ் மீனவர்களின் வாழ்வில் மேலும் சுமை அதிகரித்துள்ளது. இச்செயல் குறித்து ஜனநாயகம் பேசுவோரின் வாய் ஏன் அடைக்கப்பட்டுள்ளது?

**(நன்றி: வெளிச்சம் 2001)**




---

**MUNNANI** (FRONT)

Issue No.01, Feb- March 2011

**முன்னணி**

இரு மாத இதழ்

Publishers: NDPF - Org.No. 996 514 749

International Standard Serial Number: **(ISSN) 1892 - 6347**

சர்வதேச பதிவு இல: ISSN 1892 - 6347

**International Bank Account Number**
**IBAN: NO4965660545608**

அன்பளிப்பு: 1ஈரோ, 1டொலர், 10 குரோணர்கள்

6-இதழ்களுக்கு: 12ஈரோ, 12டொலர், 120 குரோணர்கள்

Printers e-mail: info@setlinedata.com

அன்பளிப்பு, சந்தா மற்றும் நன்கொடைகளுக்கு
சர்வதேச வங்கிக் கணக்கிலக்கம்: IBAN Kontonr: NO4965660545608

Web site:

எமது இணையத்தளங்கள்:

www.ndpfront.com

www.ndpfront.net

www.tamilcircle.net

http://kalaiy.blogspot.com/

www.tamilarangam.net ஆகிய எமது ஆவணச்சுவடிக்கு மேலதிக ஆவணங்களைத் தந்துதவவும்

தொடர்புகளுக்கு:

**e-mail: munnanee@gmail.com**

**Munnanee**
**ESC 3 - APP 131**
**5 Rue Robert Lavergne**
**92600 Asnières Sur Seine**
**FRANCE**

©Ny demokratisk folke forening (Org.Nr: 996 514 749)

www.tamilarangam.net



எம்மைச் சுற்றி வெளிவராத உண்மைகள் போல் எத்தனையோ மனித அவலங்கள். அதற்கு தீர்வில்லை. வழிகாட்டவும் யாருமில்லை. அநாதைகளாக மாற்றப்பட்டு வெறுமையில், எமக்குள் நாம் வெம்பிப்போகின்றோம். எமது நம்பிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பதை உணரக் கூட முடியாதவர்களாக நாம் சிதைக்கப்பட்டுவிட்டோம்.

இதில் இருந்து ஒரு தெளிவையும், அறிவையும் பெற்று வாழ்வது எப்படி? மந்தைகளாக அல்ல, மீண்டும் மனிதர்களாக மாறுவது எப்படி? அந்த வகையில் நாம் எடுத்து வைக்கும் ஒரு காலடிதான் உங்கள் கையில் உள்ள இந்தச் சஞ்சிகை.

நாங்கள் யார் என்ற உங்கள் முதல் கேள்விகூட நல்ல தொடக்கம்தான். 1980களில் தொடங்கிய இயக்கங்கள் ஆயுதம்தான் அனைத்தையும் தீர்க்கும் என்று கூறியும், அந்நிய கூலிப் பயிற்சியை பெற ஆயிரம் ஆயிரமாக ஓடியபோது, இது விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் பாதை என்று சொன்னவர்கள் நாங்கள். உங்களைச் (சொந்த மக்களை) சார்ந்து நின்று, உதிரியாகவும் அமைப்பாகவும் போராட முற்பட்டவர்கள் நாங்கள். அந்நிய சக்திகள் போராட்டத்தை வீங்கவைத்து, வெதும்ப வைத்து அலை அலையாக எம்மைத் தாக்கிய போது, உங்களைச் (மக்களை) சார்ந்து முன்னேற முடியாது தோற்றுப்போனவர்கள். அன்றில் இருந்து இன்று வரை உங்களின் (மக்களின்) அவலங்களுடன், உங்கள் சிறுசிறு குரல்களுடன் ஒன்றித்து நின்று உதிரியாக போராடியவர்கள்தான் நாங்கள்.

நாம் என்றும் எவருடனும் மக்களுக்கு வெளியில் யாருக்கும் சோரம் போனவர்கள் அல்ல. அனைத்தையும் எம் குறைந்தபட்ச எல்லைக்குள் முன்வைத்துப் போராடியவர்கள். 1980களில் தொடங்கி, போராட்டத்தின் பிழையான பக்கத்தைச் சுட்டிக்காட்டி சரியான பக்கத்தைத் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால்வரை சொன்னவர்கள் நாங்கள்.

தமிழ் மக்களின் நியாயமான தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதில் மேற்கு நாடுகளும், இந்தியாவும், சீனாவும், இலங்கை அரசும் ஒரே நேர் கோட்டில் பயணித்தன. இவர்களை வெல்லக் கூடிய வகையில், எமது தேசியவிடுதலைப் போராட்டம் தலைமை தாங்கப்படவில்லை. இதுவோர் உண்மை.

ஒரு தவறான தலைமையால், ஒரு தவறான அரசியலால் வழிநடத்தப்பட்டு அது தோற்கடிக்கப்பட்டது. இந்தியா முதல் அமெரிக்கா வரை நண்பனாகக் கருதியது முதல் சிங்கள மக்களை எதிரியாக கருதியது வரை, எம்மைச் சுற்றிய ஆயிரமாயிரம் தவறுகளையும் நியாயப்படுத்திய படிதான், நாம் எம் தலையில் மண்ணை அள்ளிப் போட்டோம். இதுதானே உண்மை.

எதிரி எம்மை தோற்கடித்தான் என்பது ஒரு பொது உண்மைதான். ஆனால் நாங்கள் எம்மை தோற்கடித்தோம் என்பது தான், மற்றோர் உண்மை. இதனால் எதிரி எம்மை இலகுவாக தோற்கடிக்க முடிந்தது. இதுவோர் உண்மையல்லவா?

யுத்தத்தின் பிந்தைய அவலம், வெள்ளம் ஏற்படுத்திய அவலம், எம் மக்களின் வாழ்வை தொடர்ந்து நாசமாக்கி வருகின்றது. பேரினவாதம் தன் பங்குக்கு அன்றாட வாழ்வின் மேல் கூட இராணுவ கண்காணிப்பைத் திணித்து, தொடர்ந்தும் அடக்கி வருகின்றது. இலங்கை அரசு தன்னை பாசிசமயமாக்கி சிங்கள மக்களை ஒடுக்குவதுடன், யுத்தத்தில் தன்னுடன் சேர்ந்து போர்க் குற்றத்தை செய்த சரத்பொன்சேகாவைக் கூட விட்டுவைக்கவில்லை. அவரைக் கூட சிறையில் தள்ளியுள்ளது. சிங்களப் பத்திரிகையாளர்கள் முதல் சுதந்திரத்தை நேசிக்கும் யாரும் இலங்கையில் மூச்சுவிட முடியாதுள்ளது. இப்படிப் பல உண்மைகள்.

இன்றைய இலங்கையில் தேர்தலைக்கூட வெல்வதற்கான மோசடிதான் ஜனநாயகமாகிவிட்டது. இலங்கை இந்தியக் கடலில் இந்திய மீனவர்களைக் கொல்வதை மறுப்பது மட்டுமின்றி, அதை இந்திய அரசுடன் சேர்ந்தும் செய்கின்றது. இலங்கைக் கடலில் றோலர் வகை வள்ளங்களையும், இழுவை வலையைக் கொண்டும் மீன்பிடிக்க இந்தியாவின் துணையுடன் அதை அனுமதிப்பதன் மூலம், மீனவர்களை மோதவிட்டுக் கடலை அந்நிய மூலதனத்தின் சொத்தாக்குகின்ற கூட்டுச் சதியிலும் இறங்கியுள்ளது.

இந்தியாவின் துணையுடன் இலங்கை தன் போர்க்குற்ற விசாரணைகளை முடக்கியும், மூடிமறைத்தும் வருகின்றது. இறுதி யுத்தத்தின் போது கூட்டாக நடத்திய அனைத்தையும் மூடிமறைக்கும் போக்குடன்தான் அவர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர். தமிழ் மக்களுக்கு தீர்வை முன்வைக்காது இந்தியாவின் துணையுடன் ஓர் இனவாத அரசாக, பாசிசத்தைத் தமிழ், சிங்கள, மலையக, முஸ்லிம்... என அனைத்து மக்கள் மேல் தொடர்ந்தும் ஏவிவருகின்றது.

இந்த நிலையில் போலி இடதுசாரியம், இடதுசாரியம் பேசும் இனவாதப் போலிகள், இனவாதம் பேசும் வியாபாரிகள் எம்மைச் சுற்றிப் புதுப்புது வேஷங்கள் போடுகின்றனர். இப்படிப் பற்பல வேஷங்களில் பலர். மக்களிடம் வசூலித்த புலிகளின் சொத்துக்கள், இன்று தனிப்பட்ட சொத்தாகிவிட்டது. எப்போதும் எதற்கும் யூத உதாரணத்தைக் காட்டும் தமிழன், அவனைப் போல் தமிழ் மக்கள் நிதியை பொது நிதியமாக்கவில்லை. இப்படிப்பட்டவர்களா தொடர்ந்து எம்மை வழிகாட்டமுடியும்!?

எம்மைச் சுற்றி இப்படி எவ்வளவோ நிகழ்வுகள். அரபுலக மக்களின் கிளர்ச்சி, மேற்கு ஆதரவுடன் இருந்த சர்வாதிகாரிகளுக்கு பதில் மறுபடியும் மேற்கு கைக்கூலிகளின் ஆட்சி, லிபியா சர்வாதிகாரிக்கு எதிராக மேற்கு நடத்தும் ஆக்கிரமிப்பு என்று எத்தனை மக்கள் விரோத நிகழ்வுகள். யப்பான் அணுவுலை வெடிப்பு உணர்த்துகின்றது உலகம் அணுக் கதிர்வீச்சின் எல்லைக்குள் சுருங்கி விட்டதை.

ஆம், ஒரு மனிதன் மனிதனாக வாழ இன்று எத்தனை தடைகள். இதை எல்லாம் நாங்கள் பேசியாக வேண்டும். இதை முன்னணியூடாக இங்கு பேச முனைகின்றோம். உங்கள் கரங்கள் எங்கள் கரங்களுடன் ஒன்றிணைந்து ஒரே திசையில் ஒன்றாகச் செல்வதற்கு முன்னணி என்றும் வழிகாட்டும்.

**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**
*மாசி - பங்குனி, 2011*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை என்ற இழந்த சொர்க்கம்

-கலையரசன்-

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு. கோடை கால வருகையை பறை சாற்றும் ஜூலை மாதம். விமான நிலைய குடிவரவு அதிகாரிகளுக்கு முன்னால் பயணிகளின் நெரிசல். உட்புகும் விசா குத்தி அனுப்புவதில் அவ்வளவு தாமதம். என்னைச் சுற்றி நின்ற பயணிகளில் புகலிடத் தமிழர்களே அதிகம் காணப்பட்டனர். சுவிஸ், பிரான்ஸ், கனடா என்று பல திசைகளில் இருந்தும் பிள்ளை, குட்டிகளுடன் வந்திறங்கியிருந்தார்கள். ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் மேற்கு நாடுகளில் பாடசாலைகளுக்கு கோடை விடுமுறை விட்டிருப்பார்கள். அதனால் விடுமுறையைத் தாயகத்தில் கழிக்க குடும்பத்துடன் வந்திருப்பார்கள். ஒரு மீட்டருக்கும் குறையாத பயணிகளின் வரிசை குடிவரவு சுங்க எல்லையைக் கடக்க ஒரு மணி நேரம் எடுத்தது. சுவிட்சர்லாந்து, பிரிட்டனில் இருந்து வந்தவர்கள் அதிக நேரம் காக்க வைக்கப் பட்டனர். வெள்ளையினத்தவர்களின் கடவுச்சீட்டுகள் கூட நேரமெடுத்து சோதிக்கப்பட்டதை அங்கே தான் பார்த்தேன்.

சரியாக ஒன்பது வருடங்களுக்கு முன்னர், இதே ஜூலை மாதம் கொழும்பு விமான நிலையம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானங்கள் பல தற்கொலைக் குண்டுதாரிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. இலங்கை மட்டுமல்ல முழு உலகமும் அதிர்ச்சியில் உறைந்து போனது. நவீன உலக வரலாற்றில் நடந்த இதே மாதிரியான விமான நிலைய கெரில்லா தாக்குதலில் இது இரண்டாவது. முன்னர் எத்தியோப்பிய விமான நிலையத்தை தாக்கிய எரித்திரிய கெரில்லாக்கள் அங்கே இருந்த மிக்ரக போர் விமானங்களை அழித்திருந்தனர். கொழும்பு விமான நிலையத் தாக்குதலுக்கு புலிகள் இயக்கம் உரிமை கோரியிருந்தது.

அதற்குப் பின்னர் இலங்கையில் எந்தவொரு குறிப்பிடத் தக்க தாக்குதலும் நடக்கவில்லை. மாறாக நோர்வேயின் அனுசரணையில் பேச்சுவார்த்தை நடந்தது. அந்தத் தாக்குதல் நடந்து இரண்டு மாதங்கள் ஆகவில்லை. நான்கு விமானங்கள் அமெரிக்க இலக்குகளைத் தாக்கின. உலகின் ஒரேயொரு மேந்நிலை வல்லரசான அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான போரை அறிவித்தது. காலம் மாறுகிறது. காட்சிகள் மாறுகின்றன. இன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் 30வருடப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவிக்க கோருகின்றனர். அமெரிக்கா இன்றும் பயங்கரவாதத்துடன் மல்லுக் கட்டும் வேளை, தாம் அந்த தொற்று நோயை அடியோடு ஒழித்து விட்டதாக பெருமிதம் கொள்கின்றனர். நான் கொழும்பில் தங்கி நின்ற காலங்களில் அரசு டெங்கு என்ற நுளம்பால் தொற்றும் நோய்க்கு எதிரான போரை அறிவித்து விட்டிருந்தது. வீட்டுக்கருகில் அசுத்த நீர் தேங்கி நிற்கும் குட்டைகளை சுத்தப் படுத்துமாறு மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டிருந்தது. நல்லது. பயங்கரவாதமும் ஒரு கொடிய சமூகத் தொற்று நோய் எனில், அது உற்பத்தியாகும் குட்டைகளும் சுத்தப் படுத்தப் பட வேண்டும். யுத்தத்திற்குப் பின்னர் சமுதாய அசுத்தங்கள் தேங்கும் குட்டைகள் சுத்தப் படுத்தப் படுகின்றனவா? என்று யாரும் கேட்டதாக தெரியவில்லை.

*2010* ஜூலை மாதம். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு ஜூலை மாதத்தில் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர், இப்போதுதான் தாயக பூமியை தரிசிக்கின்றேன். ஒரு மனிதனின் வரலாற்றில் இருபது வருடங்கள் என்பது ஒரு தலைமுறை இடைவெளியைக் குறிக்கும். அன்றைய நிலையை, இலகுவாக இன்றுள்ள இலங்கையோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது. இது என்னைப் போல புலம்பெயர்ந்து விட்டுக் கூடு திரும்பும் பறவைகளுக்கு மட்டுமே கிடைக்கும் அரிய வரப்பிரசாதம். என்னைப் பொறுத்த வரையில், இலங்கை ஒன்றும் பெரிதாக மாறி விடவில்லை. நடுத்தர வர்க்கம் மட்டுமே அனுபவிக்கும் உலகத்தரம் வாய்ந்த வாழ்க்கை வசதிகளைத் தவிர, வேறெதுவும் புதிதாக இல்லை. இனங்களின் முரண்பாடுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துப் பழகிய ஒரு தேசத்தில், வர்க்க இடைவெளி முன்னர் என்றுமில்லாதவாறு விரிவடைந்துள்ளது.

"இலங்கை வழமைக்குத் திரும்பி விட்டது." சாமானியன் நம்பும் வழமை நிலை, ஆயுதமேந்திய கரங்களினால் நிலை நாட்டப் படுகின்றது. வீதியோர சோதனைச் சாவடிகள் இன்னும் அகலவில்லை. அங்கே கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பாதுகாப்புப் படையினர் சோதனைகளை நிறுத்தி விட்டார்கள். இருப்பினும் உயர் பாதுகாப்பு வலையங்களை அண்டிய பகுதிகளில் இப்போதும் அடையாள அட்டை வாங்கிப் பார்க்கிறார்கள். சில இடங்களில் பார ஊர்திகளை மறித்து சோதனை போடுவதைக் காணக் கூடியதாகவிருந்தது. யுத்த காலங்களில் இருந்த நிலைமையை விட இது பரவாயில்லைத் தான். இருப்பினும் நாட்டில் பாதுகாப்புக் கெடுபிடிகள் முற்றாக நீங்கி விடவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் அரசு போரில் புலிகளை வென்று விட்டதாக அறிவித்த பின்னர், நாட்டில் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கூடக் கேட்கவில்லை. அப்படியான சூழலில் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் எதற்காக?

தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் "நாடு கடந்த தமிழீழ அரசு" குறித்து அரசு அஞ்சுவதாக தெரிவித்தனர். (இன்னொரு பகுதி அதனை நம்பவில்லை.) வெளிநாடுகளில் புலிகளின் அமைப்புக்கள் இயங்குவதாக அரசு அடிக்கடி அறிக்கை விடுக்கின்றது. என்றோ ஒரு நாள், மேற்குலக நாடுகளும், ஐ.நா.சபையும் வெளிநாட்டுப் புலிகளை கொண்டு வந்து இறக்கிவிடக் காத்திருப்பதைப் போல சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் நம்புகின்றனர். அப்படியான ஒரு பிரச்சாரமும் திட்டமிட்டு பரப்பப் படுகின்றது. குறிப்பாக கொழும்பில் ஐ.நா. தலைமையகத்திற்கு முன்னால் விமல் வீரவன்ச உண்ணாவிரதம் இருந்த பொழுது அப்படியான கருத்துக்கள் மேலோங்கியிருந்தன. ஐ.நா. மன்றமும், செயலாளர் பான் கி மூனும் புலிகளுக்கு உதவுவதாகச் சிங்கள மக்கள் பேசிக் கொண்டனர். ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை விசாரிக்க நிபுணர்குழு அமைத்த செயலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. கொழும்பில் ஐ.நா. அலுவலகம் சுற்றி வளைக்கப்பட்டு ஊழியர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்படும் அபாயம் நிலவியது. இருப்பினும் போலிஸ் தலையீட்டால் அவர்கள் வெளியேற முடிந்தது. அப்போது தொடங்கியதுதான் தேசிய விடுதலை முன்னணித் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம். நான் அங்கே சென்ற சமயம், பெருந்தொகை மக்கள் குழுமியிருந்தனர். பிரதான வீதியாக இருந்த போதிலும், வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்ணாவிரதம் இருந்த இடத்தில் தேசபக்திப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. வீரவன்ச ஆதரவாளர்கள் உணர்வு பூர்வமாக போராட்டம் தொடரும் என நம்பியிருக்கலாம். ஆனால் எதிர்க்கட்சிகள் கூறிய ஜோசியமே பலித்தது. முடிவை மாற்றிக் கொள்ளாத ஐ.நா. மன்றம், மேற்குலகின் கண்டனம், இவற்றிற்கு மத்தியில் இரண்டு நாட்களில் வீரவன்சவின் உண்ணாவிரதம் முற்றுப் பெற்றது.

இலங்கை அரசுக்கும் ஐ.நா. மன்றத்திற்கும் இடையிலான உறவு பல தடவை சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. பிரிட்டி ஷாரிடம் இருந்து சுதந்திரமடைந்த இலங்கையை ஐ.நா. மன்றத்தில் சேர்த்துக் கொள்ள அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் ஆர்வம் காட்டின. அன்று இலங்கையின் உறுப்புரிமையை சோவியத் யூனியன்(இன்று ரஷ்யா) வீட்டோ அதிகாரத்தை பாவித்து ரத்து செய்தது. இன்றோ நிலமை தலைகீழாகி விட்டது. மேற்குலக நாடுகள் ஐ.நா.மன்றத்தை பயன்படுத்தி இலங்கை மீது ராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. அதே நேரம் ரஷ்யா இலங்கை அரசு சார்பாக நிற்கின்றது. கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்கூட ரஷ்ய தூதுவராலயத்திற்கு சென்று நன்றி தெரிவித்தார்கள். இதனால் திரை மறைவில் வல்லரசுகளுக்கு இடையிலான பனிப்போர் நடப்பது தெளிவாகின்றது. பத்தாண்டுகளுக்கு முன்னராகவிருந்தால் கதை வேறாக இருந்திருக்கும். மேற்குலகின் நோக்கங்களுக்குத் தடையாக வருவதற்கு எவருக்கும் துணிவிருந்திருக்காது.

தமிழர் தரப்பை பொறுத்த வரை, ஐ.நா. நிபுணர் குழுவானது விசாரணையின் முடிவில் இலங்கையின் அரசுத் தலைவரை குற்றவாளியாக அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றனர். தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பது போலத்தான் அந்த எதிர்பார்ப்பு உள்ளது. மேற்குலக நிகழ்ச்சி நிரலின் கீழ் ஐ.நா.சபை இயங்குவது புதிய விடயமல்ல. ஐ.நா. மன்றம் இப்பொழுதுதான் போர்க் குற்றங்களை அறிந்து கொண்டது போல நடிக்கின்றது. 30 வருட காலமாகப் போர் நடந்த பொழுதும், இடையில் யாரும் ஐ.நா. மன்றத்திற்கு அறியத் தரவில்லையாம். இலங்கை ஜனாதிபதி ஐ.நா. சபையில் உரையாற்றலாம். போர்க்குற்றங்கள் தொடர்பான அமைச்சர்களும், அதிகாரிகளும் அமெரிக்கா சென்று வரலாம். அப்பொழுது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அதே போன்றது தான் ஜி.பி.எஸ். வரிச்சலுகை நிறுத்துவது குறித்த அமெரிக்க அரசின் கரிசனை. இலங்கையில் தொழிலாளர் நலன் மீறப்படுவதாக அமெரிக்க அரசு சார்புத் தொழிற்சங்கம் முன்வைத்த குற்றச்சாட்டுகள் முன்னர் அலட்சியப் படுத்தப்பட்டன. அமெரிக்க அரசின் அலட்சியத்திற்குக் காரணம், இலங்கையில் அப்பொழுது யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தமை தான். அதாவது இலங்கை அரசின் மீதான எந்தவொரு சட்ட நடவடிக்கையும் போரை பாதிக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள்.

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்த வரை மேற்குலகின் அணுகுமுறை அன்றில் இருந்து இன்று வரை மாறவில்லை. ஒரு பக்கம் கிளர்ச்சியாளர்களையும், மறு பக்கம் அரசையும் ஆதரிப்பது. கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கும் பொழுது அரசுக்குப் பக்கபலமாக நின்று அடக்குவது. பின்னர் அதே அரசின் மீது, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில், சர்வதேச சட்டங்களைப் பிரயோகித்து ஆட்சியை மாற்றுவது. இதையெல்லாம் கோர்வையாகப் புரிந்து கொள்ளுமளவிற்கு, மக்களுக்கு நினைவாற்றல் கிடையாது. போர்க்குற்றம் தொடர்பான விசாரணை தமிழர் நலன் சார்ந்தது என தமிழ் தேசியவாதிகள் நம்புகிறார்கள். அதை சிங்கள தேசியவாதிகள், ஐ.நா. மன்றம் புலி சார்பானதாகப் புரிந்து கொள்கின்றனர். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலே மேற்குலக நலன்கள் இருப்பதை யாரும் கவனிப்பதில்லை. நாளைக்கே மேற்குலகு விதிக்கும் நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு கட்டுப்பட்டால், போர்க்குற்ற விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டு விடும்.

இலங்கையில் இப்பொழுது தேசப் பற்றாளர்களின் காலம் நடக்கிறது. தேசப்பற்றுக்கும், தேசியவாதத்திற்கும் இடையில் என்ன வித்தியாசம் என்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் அவர்களைப் பொறுத்தவரை அது இயற்கையான மனித குணாம்சம் என்று நம்புகின்றனர். ஒருவர் தமிழர் என்றால், அவர் தமிழ்த் தேசியத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சிங்களத் தேசியமும் அதையே எதிர்பார்க்கின்றது. மேற்குலக நாடுகள் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டால், நாட்டுப்பற்று கோஷங்கள் மேலெழுகின்றன. அரசுத் தலைவர்கள் மேற்குலகிற்கு சவால் விடும் பேச்சுகளை நிகழ்த்துகின்றனர். இது ஒரு வகையில் இலங்கையில் முன்னொருபோதும் காணப்படாத தோற்றப்பாடு தான். இருப்பினும் இன்றைய இலங்கை அரசு உண்மையிலேயே மேற்குல விரோத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதா? பல தடவை அது வெறும் மேடைப் பேச்சு என்பது நிரூபணமாகின்றது. இலங்கையர் சமூகம் முன்னரை விட அதிகமாக மேற்குலக மயப்படுத்தப் பட்டுள்ளது. உலகமயமாக்கல், நுகர்பொருள் கலாச்சாரம் என்பன அடித்தட்டு இலங்கைப் பிரஜையையும் பாதிக்கின்றது. மேற்குலகில் அறிமுகமாகும் புதிய நாகரீகம் அடுத்த நாளே இலங்கையின் இளையோரால் பின்பற்றப்படுகின்றது. இலங்கையின் கல்வி முறை இன்றும் கூட ஐரோப்பிய மையவாதக் கருத்துகளில் இருந்து விடுபடவில்லை. பிரபல தினசரிகள் மாணவர்களுக்கு பொது அறிவைப் போதிக்கும் விசேட பதிப்புகளை வெளியிடுகின்றன. அதில் கூட விஞ்ஞான கண்டுபிடிப்புகள் யாவும் ஐரோப்பியரின் மூளையில் உதித்ததாகவே எழுதப்பட்டுள்ளது. இதனால் இளம் தலைமுறையினரிடையே மேற்குலக மோகம் அதிகமாக காணப்படுகின்றது. ஆங்கில மொழியைக்கூட மேற்குலக வாழ்க்கை முறைக்கான கருவியாக கருதுகின்றனர். மேற்குலகச் செல்வாக்கை அரசு எதிர்க்கவில்லை. பல்கலைக்கழக கல்வியை தனியாரிடம் ஒப்படைக்க அரசே உத்தேசித்து வருகின்றது. வெகு விரைவில் அமெரிக்க, பிரிட்டிஷ் கல்லூரிகள் தமது கிளைகளை இலங்கையில் திறக்கவிருக்கின்றன.

ஒரு காலத்தில் இலங்கையின் மேல்த்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே ஆங்கிலம் பேசி வந்த காலம் மலையேறி விட்டது. உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பலர் ஆங்கில மொழிப் புலமை கொண்டோராகக் காணப்படுகின்றனர். கொழும்பு போன்ற பெரு நகரங்களில் அந்த விகிதாசாரம் அதிகம். இருப்பினும் யாழ்ப்பாணம் போன்ற போரினால் பின்தங்கியிருந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் பின்தொடர்கின்றனர். இலங்கையில் மொழிப்பிரச்சினை யுத்தத்திற்கு காரணம் என்றும் பேசப்பட்டது. தமிழ் மொழி மீது சிங்கள மொழி ஆதிக்கம் செலுத்துகின்றது. அவை இரண்டின் மீதும் ஆங்கில மொழி ஆதிக்கம் செலுத்துகின்றது. இன்றைய இலங்கையின் சோகம் என்னவெனில், மொழிப்பிரச்சினை குறித்துப் பலரும் பாரா முகமாக இருப்பது தான். சிங்களவரும், தமிழரும் ஒருவரின் மொழியை மற்றவர் படிப்பதே இனப்பிரச்சினைக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்வாக கருதப்பட்டது. ஆனால் இது காலம் பிந்தி வந்த ஞானம் போலத் தெரிகின்றது.

இன்றுள்ள அரசு சிங்களவர்கள் தமிழ் மொழி படிக்க ஊக்குவிக்கின்றது. ஆனால் அது கூட, மேற்குலகக் கலாச்சார ஆதிக்கத்தில் இருந்து தப்பும் தந்திரமாகவும் இருக்கலாம். ஏனெனில் உலகமயமாக்கலின் பயனாக தவிர்க்கவியலாது ஆங்கிலத்தின் ஆதிக்கம் பரவி வருகின்றது. ஐரோப்பிய நாடுகள் கூட ஒரு காலத்தில் அடக்கிய சிறுபான்மையின மொழிகளை ஊக்குவிக்கின்றன. தனியார் நிறுவனமொன்றில் ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் எடுப்பது, சரளமாக ஆங்கிலம் பேசுபவர்களுக்கு மட்டுமே கிட்டும் பாக்கியம். சிங்களம் அல்லது தமிழ் மட்டுமே தெரிந்த பட்டதாரிகள், பல வருட சேவையின் பின்னரே நாற்பதாயிரம் ரூபாய்கள் எடுக்கிறார்கள். அத்தகைய சூழலில் தமிழ் மட்டுமல்ல, பெரும்பான்மை மொழியான சிங்களம் கூட தனது இருப்புக்காக போராட வேண்டும்.

இருபது வருடங்களுக்கு முன்பு இருந்ததைப் போலவே, சிங்களம், தமிழ் மொழிகளில் கல்வி கற்றவர்கள் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை. இலங்கையில் இன்றைக்கும் அரசாங்க தொழில் துறை இளம் பட்டதாரிகளை ஈர்க்கின்றது. பணி நிரந்தரம், வருடாந்த ஊதிய உயர்வு, நிச்சயிக்கப்பட்ட போனஸ், ஒழுங்கான ஓய்வூதியம், வேறு பல தொழிலாளர் நலன் பேணும் காப்புறுதிகள். அரசாங்க ஊழியருக்கு மட்டுமே கிட்டும் அதிஷ்டம் அவை. இதையெல்லாம் தனியார் துறையில் எதிர்பார்க்க முடியாது. அரசு இன்றைக்கும் இலங்கையில் மிகப் பெரிய தொழில் வழங்குனர். இருப்பினும் இனப்பிரச்சினைக்கு மூல காரணமான “சிங்களவருக்கு முன்னுரிமை” கொடுக்கும் கொள்கை இன்றைக்கும் தொடர்கின்றது. அதன் அர்த்தம் தமிழர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடையாது என்பதல்ல. கொழும்பில் அரச திணைக்களத் தலைமைக் காரியாலயங்களில் கூட தமிழ் மேலதிகாரிகள் பணி புரிகின்றனர். அதே பதவிக்கு பெரும்பான்மை இனத்தவருடன் போட்டி போடும் தமிழர் அதிக தகைமை கொண்டவராக இருப்பார். சில நேரம் பதவியை தக்க வைத்துக் கொள்வதே ஒரு போராட்டமாக இருக்கும். அதே நேரம் ஒரு சிங்கள அதிகாரி இலகுவாக அந்தப் பதவிக்கு வந்திருப்பார்.

முன்னொரு காலத்தில் அரசாங்க உத்தியோகத்திற்கு சிங்களம் படிக்க வேண்டிய கட்டாய சட்டம் வந்த பொழுது, தமிழர்கள் எதிர்த்தார்கள். குறிப்பாக நடுத்தர வர்க்கத் தமிழர்கள் இந்தச் சட்டத்தால் தமது உத்தியோகம் பறிபோவதை உணர்ந்தார்கள். ஐம்பதுகளில் மறைந்த பிரதமர் பண்டாரநாயக்க கொண்டு வந்த “சிங்களம் மட்டும்” சட்டம் இனப்பிரச்சினையின் மூலவேர் என்று பலர் கருதுகின்றனர். அன்று உத்தியோகம் பார்த்த தமிழர்கள் யாரும் தமிழ் மொழியை அரச கரும மொழியாக பயன்படுத்தவில்லை. அதற்கான கோரிக்கையையும் அவர்கள் முன்வைக்கவில்லை. மாறாக காலனியாதிக்க பிரிட்டிஷாரின் ஆங்கிலம் மட்டுமே அரச கரும மொழியாக இருந்தது. சிங்களம் மட்டும் சட்டம் பின்னர் வட கிழக்கு மாகாணங்களில் தமிழில் அரச கருமமாற்ற வழிவகுத்தது. அன்று சிங்களம் படிக்க மாட்டோம் என்று அடம் பிடித்த கொழும்பு வாழ் உத்தியோகத்தர்கள் பலர், அவுஸ்திரேலியா, அமெரிக்கா என்று புலம் பெயர்ந்து விட்டார்கள். இன்று கொழும்பில் மேலதிகாரிகளாக பணியாற்றும் தமிழர்கள் அனைவரும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதே நேரம் தீவிரமாக தமிழ்த் தேசியம் பேசுவதையும் காணக் கூடியதாக உள்ளது. ஒரு காலத்தில் சிங்களவர்கள் தமிழ் பேசப் பழகுவதும், தமிழர்கள் சிங்களம் கற்பதும் அரிதாக இருந்தது. அன்றிருந்த சிங்கள இனவாதிகள் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்பதை கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை. தமிழ் இனவாதிகளும் இரண்டாவது மொழியாக ஆங்கிலம் இருக்கும் பொழுது எதற்கு சிங்களம் எனக் கருதினார்கள். இன்று நிலைமை சிறிது மாறியுள்ளது. தமிழருடன் வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ள, அல்லது எல்லையோரக் கிராமங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் பலர் சரளமாகத் தமிழ் பேசுகின்றனர். நூறு வீத தமிழ் மாவட்டமான யாழ்ப்பாணத்திலும் சிங்களம் படிக்கிறார்கள். பிற தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் பலர் ஓரளவுக்கேனும் சிங்களம் பேசுகின்றனர். கொழும்பு வாழ் தமிழர்கள் பலர் சிங்களத்தை முதன் மொழியாகக் கொண்டு கல்வி கற்கின்றனர். அநேகமாகத் தொழில் வாய்ப்புகளுக்காக அப்படிச் செய்கின்றனர். அவர்களில் பலர் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைப் போல சரளமாகப் பேசுகின்றனர். இருப்பினும் சிங்களவருக்கே முன்னுரிமை கொடுக்கும் அரசின் பாரபட்சமான நடவடிக்கை காரணமாக பாதிக்கப்படுகின்றனர். இன்று கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான போக்குக் காணப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை இன்னும் தீரவில்லை. அது முன்னரைப் போலவே துடிப்புடன் இருக்கிறது. பெரும்பான்மை சிங்கள இனத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகள் அப்படி எதுவும் இல்லை என்று மறுக்கின்றனர். சிறுபான்மை தமிழ் இனத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வு பற்றி மட்டுமே பேசுகின்றனர். இனப்பிரச்சினை குறித்து நாடளாவிய ரீதியாக ஒருமித்த கருத்தைக் காண்பது அரிது. வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள், யுத்தம் சம்பந்தமான பாதுகாப்புப் பிரச்சினைகளை முக்கியமாகக் கருதுகின்றனர். சிங்களக் குடியேற்றங்களால் தமிழரின் தாயகப் பிரதேசம் பறிபோவதாகக் கருதுகின்றனர். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களும், தமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்கிறார்கள். ஆனால் தமிழர், முஸ்லிம்கள் என்ற அனைத்து சிறுபான்மை இனங்களும், இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப் படுகின்றனர்.

இலங்கையின் பொருளாதார வளங்கள் யாவும் கொழும்பில் மையப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் தமிழீழப் பிரிவினையானது பிரதேச வளங்கள் மீதான உரிமையைக் கோருகின்றது. அதனையொட்டி அதிகாரப் பரவலாக்கல் குறித்த தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப் படுகின்றன. அப்படியே தமிழீழம் என்ற ஒன்று சாத்தியமாகி இருந்தாலும், முஸ்லிம்களினதும், சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழரின் பிரச்சினை தீர்ந்திருக்காது. தேயிலை, ரப்பர் போன்ற மூலப் பொருட்களுக்காக இலங்கையை சுரண்டும் மேலை நாடுகள். இயற்கை வளங்களுக்கு சொந்தம் கொண்டாடும் முதலாளிகள், மற்றும் நிலப் பிரபுக்கள். அரசியலுக்கு வருவதன் மூலம் சொத்து சேர்ப்பவர்கள். இவர்கள் எல்லாம் அள்ளியது போக எஞ்சிய சொற்ப வளங்களுக்காக உழைக்கும் மக்கள் போட்டி போடுகின்றனர். அதிலும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களுக்கே பெரும் பங்கு சேரும் வண்ணம் அரசு பார்த்துக் கொள்கின்றது. இதன் மூலம் அரசுக்கு இரண்டு நன்மைகள் உண்டாகின்றன. ஒன்று, உழைக்கும் மக்களை இனரீதியாக இரண்டாக பிரிக்க முடிகின்றது. இரண்டு, தேர்தல்களில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குப் பலம் ஒன்றே ஆட்சியைக் கைப்பற்ற போதுமாக உள்ளது■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்ச் சமூகத்தின் பொது வெட்கம்



பி.இரயாகரன்

இது தமிழினத்தின் பொது வெட்டுமுகம். இலங்கை மக்கள் தொகையில், குறைந்தபட்சம் 5லட்சம் ஆண்கள் காணமல் போயுள்ளார்கள். கிழக்கிலோ 49ஆயிரம் விதவைகள். இதில் அரைவாசிப் பேர் 25வயதுக்கு உட்பட் டவர்கள். இதில் 12ஆயிரம் பேர் 3குழந்தைகளின் தாயாக இருக்கின்றனர். இது ஓர் அரச புள்ளி விபரம். போர் குற்றத்தின் முழு வெட்டுமுகத்தையும் இது எடுத்துக் காட்டுகின்றது. ஓர் இனத்தின் அழிவையும், சிதைவையும் தெளிவாகத் தோலுரித்துக் காட்டுகின்றது.

பேரினவாதம் ஓர் இனத்தின் உரிமையை மறுத்து, அவர் களை பிணக்காடாக்கியுள்ளது. புலிகள் தம் பங்குக்கு அதற்கு உதவினர். அரசின் இந்தப் போர்க் குற்றம், இன்று குரூரமான குற்றமாகக்கூட இனம் காணமுடியாத வண்ணம் போயுள்ளது. புலிப் பாசிசத்தின்பின் அரசு தன்னைத்தானே ஒளித்து வைத்துக்கொண்டே, பாரிய இனவழிப்பை நடத் தியது. இளம் தலைமுறையை திட்டமிட்டுக் கொன்று குவித்தது.

புலிகள் என்ற பாசிச இயக்கம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அந்நியமாகிய, குழந்தைகள் முதல் இளம் தலை முறையினரின் சமூக அறியாமையில்தான் ஒரு மாபிய இயக்கமாக இதன் வரலாற்றில் நீடித்தது. இந்த வரலாற்றுப் பின்னனியில் திருமணம் செய்தவர்கள், இயக்கத்தில் இணைத்தல் என்பது அறவேயற்று இருந்தது.

இந்த பின்னணியில் பெண்கள் யாரால் விதவைகளாக்கப் பட்டனர் என்ற கேள்வியும், இந்த ஆண்கள் யார் என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. அரச பயங்கரவாதத்துக்கு எதிராகவும், புலியின் கட்டாய பயிற்சிக்கும் அதன் ஜனநாயகமற்ற அரசியலுக்கு எதிராகவும், குடும்ப வாழ்க் கைக்குள் இறங்கி தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயன்ற அப்பாவிப் பொதுமக்கள். அவர்கள் தமிழன் என்ற ஒரே காரணத்தினால் இந்த அரசு கொன்று குவித்துள்ளதை இந்தப் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றது. இதில் ஒரு சிறிய பகுதியைத்தான் புலிகள் கொன்றனர்.

இனப் படுகொலைகள் மூலம் ஓர் இனத்தின் அழிவும், விதைவைகள் மூலம் இனவிருத்தியற்ற நிலையும், இனத்தின் சிதைவுமே இன்றைய எதார்த்தமாகும்.

**விதவையாக்கப்பட்டவர்களின் அவலம்**

ஆணாதிக்க சமூகத்தில், ஆண்களற்ற பெண்களின் விதவைக் கோலம் அவர்களை உயிருடன் கொன்று வருகின்றது. உளவியல் சிதைவால் மனநோய்க்குள்ளாகின்றனர்.

ஆண்களால் மேலாதிக்கம் செய்யப்பட்ட ஆணாதிக்க சமூகத்தில், ஆணின் உழைப்பில் பெருமளவு குடும்பங்கள் தங்கியிருந்தன. ஆண்களைக் கொன்றதன் மூலம், பெண்கள் தங்கள் அடிப்படையான வாழ்வை இழந்தனர். அத்துடன் யுத்த பூமியில், வாழ்வின் ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையில், அவை அழித்தொழிக்கப்பட்டது. இந்த நிலையில், பெண்கள் நடுத்தெருவிற்கு விரட்டப்பட்டனர். சிறு குழந்தைகளுடன், தாய்மையின் இயலாமையுடன் அவர்கள் உணர்வுகள் சிதைக்கப்பட்டன. பெண்மை நாசமாக்கப் பட்டன.

வாழ்வதற்குத் தேவையான பொருளை வாங்கக் காசில்லை. வாழ்வின் ஆதாரப் பொருட்கள் உலகச் சந்தை விலையில்தான் இலங்கையில் வாங்கமுடியும். இந்த நிலையில் அந்தப் பெண்களின் அவல வாழ்வை இது தன் பங்குக்கு பறித்ததுடன் அவர்களை பாதாளத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது.

பொருளாதார சுயமற்ற இவர்களின் யுத்த வடுக்களையும், உலகமயமாக்கல் மூலம் சுரண்டும் கொள்ளைக் காரர்களுக்கு மலிவாக சுரண்டும் கூலிகளாக மாறியுள்ளனர். விதவைகள் மறுவாழ்வு என்று வேடம் போட்டுக்கொண்டு, அவர்கள் உழைப்பை கொள்ளையடிக்க முண்டியடித்துக் கொண்டு முதலிடுகின்றனர்.

அரசு சாரத தன்னார்வ நிறுவனங்கள் பெயரில், ஏகாதி பத்தியம் வழங்கும் நிதியில் இயங்கும் அமைப்புக்களும், பெண்கள் அமைப்புக்களும், விதவைகளின் உழைப்பைச் சுரண்டுவதற்கு ஏற்ப என்னென்னவோ வேலைகள் பார்க்கி ன்றனர்.

மறுவாழ்வின் பெயரில் அந்த விதவைகளைச் சுரண்டுவது, அதற்கு உதவுவது தான் தன்னார்வப் பெண்கள் அமைப்புகளின் சுறுசுறுப்பான பணியாக உள்ளது. இதை செய்வதற்காகவே, ஏகாதிபத்தியம் அவர்களுக்குப் பணம் கொடுக்கின்றது. ஆண்களைக் கொன்று விட்டு, பெண்களை விதவையாக்கி, அவர்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுயத்தையும் அழித்தவர்கள், இன்று அவர்கள் உழைப்பை சுரண்டுவதையே மறுவாழ்வு என்கின்றனர். அந்த விதவைக ளின், உழைப்பை திருடுவதையே, அவர்களின் மறுவாழ்வு என்கின்றனர்.



மற்றொரு தளத்தில் இந்தப் பெண்கள் ஆணாதிக்க அமைப்பில் விதவைகளாக்கப்பட்டனர். இந்த நிலையில், அந்த பெண்களின் பாலியல் உணர்வுகள் நிராகரிக்கப் படுகின்றது. மறுமணத்தை மறுத்து, விதவைகளாகவே வாழ்வதுதான் தமிழ்க் கலாச்சாரம் என்று ஆணாதிக்க இந்து சமூக அமைப்பில், பெண்களின் பாலியல் உணர்வுகள் சிதைக்கப்படுகின்றது. பெண்களின் பாலியல் உணர்வுகளை, விபச்சாரம் செய்து வாழ்வது அல்லது முறைகேடான பாலியல் நடத்தைகள் மூலம் இதற்கு தீர்வு காணச் சொல்லுகின்றது ஆணாதிக்கத் தமிழ்க் கலச்சாரம். இதனுள் ஓர் அங்கமாக ஆணாதிக்க ஆண்களின், வைப்பாட்டிகளாக பெண்ணை வாழக்கோருகின்றது.

பெண் தான் சார்ந்து வாழ்ந்த ஆணைக் கொன்று, அவளின் சுயத்தை அழித்தவர்கள், பெண் மீதான ஆணாதிக்க அத்து மீறலைச் செய்யும் சூழலை இன்று இலகுவாக்கியுள்ளனர். அதுவும் ஆண்களின் எண்ணிக்கை குறைந்த சமூகத்தில் பெண்களின் மீதான அத்துமீறல்கள், மோசடிகள் என்பன சமூகத்தின் பொதுத் தெரிவாகி விடுகின்றது. இது விதவைப் பெண்கள் இன்று எதிர்கொள்ளும் மற்றறொரு பாரிய ஆணாதிக்க வன்முறையாகும்.

குழந்தைகள் வளர்ப்பு, பெண்ணாக தன் உடல் சுயத்தைப் பாதுகாத்தல், பாலியல் தேவையை பூர்த்தி செய்ய முடியாத உணர்வு சார்ந்த கலாச்சார நெருக்கடிகள், உழைப்பை சூறையாடலை எதிர் கொள்ளல், தம் குடும்ப நினைவுகள், தம் கணவனுக்கு நடந்ததுக்கு எந்தவித நீதியும் விசாரணையுமற்ற விரக்தி..., இந்த விதவைப் பெண்களின் பின்னுள்ள பாரிய அவலங்களாகும்.

சமூகம் இதற்கு தீர்வு காண முடியாத வண்ணம், வக்கற்றுக் கிடக்கின்றது. மாறாக மறுவாழ்வு, இணக்க அரசியல், எதிர் அரசியல், தன்னார்வ உதவி என்ற எல்லைக்குள் சமூகத்தை நாறடிக்கின்றனர். சமூகம் தன் அதிகாரத்தில் இதைத் தீர்வு காணும் வண்ணம் சமூக விழிப்புணர்வையும், சமூகத்தின் சுயமான சமூகத் திரட்சியையும், நீட்சியையும் மறுத்து இன்று அரசியல் செய்துவருன்றனர். இதைத்தான் பெண்ணியத்தின் பெயராலும் செய்கின்றனர். இந்த வக்கிரத்துக்குள்தான் விதவைகள், மற்றும் சனத்தொகையில் காணாமல் போன ஆண்கள் பற்றிய புள்ளிவிபரத் தரவுகள் மிதந்து நிற்கின்றது. கூடவே மகளிரின் நூற்றாண்டும் கடந்து விடுகிறது.

## கருமை நிறைந்த ஒளியற்ற வானம்

இலக்கியா



கருமை நிறைந்த ஒளியற்றவானம்!
மழைமூட்டம் போல் காட்சி தருகின்றது;
சில்லூறுகளின் இரைச்சல்!
தவளைகளின் கத்தல்
ஓநாய்களின் குறுக்கறுப்பு,
இலையுதிர்ந்த சோலை,
ஆங்காங்கே சிதறிக்கிடக்கும்
சுடலைச் சிலுவைகள்!
சருகுகளின் நடுவே மிடுக்கற்று நடக்கின்றேன்!
எனக்குத் தெரிந்த இடம்போல், ஒரு பிரமை!
சற்று முன்னேறினேன்?

ஆந்தைகளும், கழுகுகளும், நரிகளும்,
ஆடை அணிந்திருந்தன!
தலைக்கு மேலே ஒரு வெளவால்,
பட்டாடை போர்த்தியபடி,
வாயால் உண்டதை,
வாயால் கக்கிக்கொண்டிருந்தது!
நெருங்கினேன்?
எல்லாமே எனக்குத்தெரிந்த முகங்கள்;

அவைகள் கூச்சமடையவில்லை!
சகசமாகப் பழகின? உறவுமுறை கூறியபடி!
இது எனக்குத்தெரிந்த இடமென்றேன்!
இல்லை! இது உனக்குத்தான் சொந்தம், ஆனால்
இப்போது இது நரகத்துக்குச் சொந்தமாகிவிட்டது!
நாங்கள் பரிபாலிக்கின்றோம் என்றன?

காற்று எதிர்த்திசையில் வேகமாக வீசியது!
சருகுகள் பறந்தன;
நாய்களும், நரிகளும், ஓலமிட்டன!
வல்லூறுகளும் வட்டமிட்டன,
உறவுமுறை கூறியபடி!

07.02.10

www.tamilarangam.net



# இனங்களும்... ஒருமைப்பாடும்...



தேவன்

70க்கு பிறகு பேரினவாதம் இலங்கை அரசியலினை ஆக்கிரமித்துக் கொள்ள இனவாதமும் மக்களை பற்றிக் கொண்டது. அது நாளுக்கு நாள் மக்கள் பேச்சிலும் மனதிலும் வளர்ந்து வந்து இன்று பல தமிழ்மக்கள் மத்தியில் சிங்கள, முஸ்லீம் மக்களை எதிரிகளாகப் பார்க்கும் மனநிலை கூடுதலாக காணப்படுகிறது. சிங்கள மக்களோடு நாங்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற கருத்தியலை இன்றைய தமிழ் அரசியல்வாதிகளாலும், தமிழ் நாட்டு அரசியல்வாதிகளாலும் பரவலாக சாதாரண தமிழ் மக்களின் சிந்தனையில் பரப்பப்பட்டு வருகிறது. இது அரசியல்வாதிகளின் இனங்களை கூறு போடும் அரசியல் நடவடிக்கையாகும். இந்த அரசியல்வாதிகளின் சுயநல அர சியற் போக்கும், தவறான அரசியற் பார்வையுமே இதற்கு முக்கிய காரணமாக அமைகிறது.

சிங்கள முஸ்லீம் மக்களோடு நாம் சேர்ந்து வாழ முடியாதா...? ஆரம்பகாலத்திலிருந்தே தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் சேர்ந்து சந்தோஷ மாகவும் ஒற்றுமையாகவும், வாழ்ந்துள்ளார்கள். கல்வி அடிப்படையில், தொழில் ரீதியாக, குடும்ப ரீதியாக பல வழிகளில் இணைந்தே செயற்பட்டு வந்த இந்த மக்களுக்கிடையில் நல்ல நட்பும், புரிந்துணர்வும் இருந்து வந்துள்ளது. ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் மனப்போக்கோ, இனபேதமோ இவர்களிடம் இருந்ததில்லை. காலப்போக்கில் இனவாதம் பேசி வந்த தமிழ் சிங்கள அரசியல்வாதிகள், தங்கள் அரசியலினை நகர்த்துவதற்கான அவர்களின் சுயநலப் போக்கே இனங்களுக்கிடையில் விரோத உணர்வையும், முரண்பாட்டினையும் ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது. அரசியல்வாதிகளின் இந்த நடவடிக்கை மக்களுக்கிடையில் இடைவெளியினை உருவாக்கியதுடன் மதவாதிகள் போன்ற ஏனைய தவறான சக்திகளுக்கும் இது நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகள் தாங்கள் ஆட்சியினை தக்கவைத்துக் கொள்வதற்காக அப்பாவி சிங்கள மக்களின் மனதில் பேரினவாத கருத்துக்களை ஏற்படுத்தி வந்தனர். சிங்கள அரசியல்வாதிகளினதும், மதவாதிகளினதும் இந்த செயற்பாடுகள் பல இனக் கலவரங்களை உருவாக்கியது. இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி காடையர்கள் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்காகவும், பழைய விரோதங்களைப் பழி தீர்த்துக் கொள்வதற்காகவும் வன்முறையிலே இறங்கினார்கள். இந்த வெறித்தனமான செயலால் பல அப்பாவி உயிர்கள்தான் பலியாக்கப்பட்டது. இதனால் பெரியளவில் பாதிக்கப்பட்டது அப்பாவி தமிழ்மக்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதனால் ஆத்திரமடைந்த தமிழ் மக்களின் உணர்வினை குறிப்பாக இளைஞர்களின் எழுச்சியினை தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் அரசியலுக்காக பயன்படுத்திக் கொண்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சரியான அரசியல் நிலைப்பாட்டினை எடுத்திருந்தால் இத்தனை அழிவுகளும் ஏற்பட்டிருக்காது. மாறாக அவர்கள் சிங்கள பேரினவாத அரசிற்கு எதிரான போராடத்தினைச் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாகவே மாற்றியமைத்தார்கள். இனியும் சிங்களவனோடு இணைந்து வாழமுடியாது. தமிழீழமே முடிந்த முடிவென்றார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் இந்த தவறான அரசியல் நடவடிக்கை தமிழ்மக்கள் மனதிலே குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சிங்கள மக்களை எதிரியாகப் பார்க்கும் மனநிலையினை ஏற்படுத்தியது. மக்களினுடைய உணர்வினை அவர்கள் தங்கள் அரசியல் துருப்புச் சீட்டாக பயன்படுத்திக் கொண்டார்கள். இவர்களின் வழிவந்த ஆயுதப் போராட்டத்தினை கையிலெடுத்த புலிகளும் சிங்கள முஸ்லீம் மக்களை எதிரியாகவே பார்த்தார்கள். தங்கள் போராட்டத்தில் இருந்து அந்த மக்களை அந்நியப்படுத்திக் கொண்டார்கள். அதுமட்டுமின்றி அப்பாவி சிங்கள முஸ்லீம் மக்களுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். சிங்கள மக்களைப் போன்று முஸ்லீம் மக்களும் தமிழ்மக்களுக்கு எதிரானவர்கள் என்ற கருத்தினை புலிகள் தங்கள் ஆதரவாளர்கள் மனதில் வளர்த்து வந்துள்ளார்கள். இன்றும் புலிகள் இதனையே செய்துவருகின்றார்கள். இனவாதத்தினை விட்டு வேறு எந்த அரசியலினையும் முன்னெடுக்க முடியாத இவர்களின் குறுகிய அரசியற் சிந்தனையும், அரசியல் வறுமையும் தான் இன்றும் பல தமிழ்மக்களை இனவாதத்தினுள் குறுக்கி வைத்துள்ளது.

இயல்பாக எந்த மக்களும், எந்த மக்களுக்கும் எதிரானவர்களாக இருப்பதில்லை. அரசியல்வாதிகள் தங்கள் நலனுக்காக மக்களை மோதவிட்டுக் கொள்கிறார்கள். இங்கு எதிரி அரசே ஒழிய மக்கள் அல்ல. எங்கள் போராட்டமும் அரசிற்கு எதிரானதாக இருக்க வேண்டுமேயொழிய எந்த மக்களுக்கும் எதிரானதாக இருக்கக் கூடாது. எங்கள் எதிரிதான் பலவழிகளில் அனைத்து இனமக்களுக்கும் எதிரியாக இருக்கின்றான்.

சிங்கள மக்கள் யாரும் முள்ளிவாய்க்காலில் நடந்த இத்தனை ஆயிரம் தமிழ்மக்களின் அழிவுக்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை என்பது பல தமிழ்மக்களின் மனதில் பதிந்துள்ளதொரு சிந்தனையாகும். தாங்கள் செய்யும் கொலைகளை அரசு ஒருபோதும் உலகநாடுகளுக்கோ, எந்த மக்களுக்கோ அம்பலப்படுத்தாது. இந்தவகையில் தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொலைகார மகிந்த பேரினவாத கும்பல்களும் தங்கள் கொலைகளை மறைத்தார்கள். புலிப் பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள், நாடு பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டுவிட்டது என்ற செய்தியினையே இலங்கை மக்களுக்கு மட்டுமில்லாது உலகிற்கே பறைசாற்றிக் கொண்டார்கள். ஆனால் புலி அழிப்பு என்ற பெயரில் பல ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்ததை புத்திசாலித்தனமாக திட்டமிட்டு மறைத்துக் கொண்டது சிங்கள பேரினவாத இனவெறி அரசு. இந்தியா, சீனா, அமெரிக்கா... போன்று பல நாடுகளும் மகிந்தாவின் இந்த செயற்பாட்டிற்கு உடந்தையாக இருந்து வந்துள்ளன.

இதே போன்று தான் அன்று ஜே.வி.பிக்கு எதிரான போரிலே பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களை இலங்கை அரசு இந்தியாவின் உதவியோடு கொன்று குவித்தது. அப்போது நாங்கள் யாருமே அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. பெரும்பான்மையான தமிழர்கள் இப்படியொரு சம்பவம் நடந்ததினை அறிந்தது கூட இல்லை. திட்டமிட்டு திரைமறைவில் செய்யப்பட்ட கொலைகள் இவை. அன்று எங்களால் எப்படி குரல் கொடுக்க முடியாது போனதோ அதோ போன்று தான் இன்று சிங்கள மக்களுடைய நிலைமையும்.

அண்மையில் காலியில் யுத்தம் பற்றி சிங்கள மக்களின் சாட்சியங்களை பதிவு செய்து வரும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சிங்கள அரச ஊழியர்களும் மக்களும் கடந்தகால சிங்கள அரசின் தவறினை சுட்டிக் காட்டி கண்டனம் தெரிவித்துள்ளார்கள். 1981இல் யாழ்ப்பாணத்தில் தேர்தல் அதிகாரியாக பணியாற்றிய சிங்கள அதிகாரி யாழ் நூலக எரிப்பினை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் கண்டித்துப் பேசியுள்ளார்.


ஒரு போதும் மக்கள் எங்களுக்கு எதிரியாக மாட்டார்கள். தமிழ் சிங்கள அரசியல் வாதிகள்தான் எதிரியாக்க முனைகிறார்கள். வயிற்றுப் பிழைப்பிற்காக தங்கள் பிள்ளைகளையும், கணவன்மாரையும் இராணுவத்திற்கு அனுப்பிவிட்டு அவர்கள் எங்கேயிருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள் என்பதைக்கூட அறிந்து கொள்ள முடியாத நிலமைதான் அந்த அப்பாவி சிங்கள மக்களுடைய நிலமை. இந்தப் பேரினவாத அரசு போராட்டம் என்ற பெயரிலே எத்தனை ஆயிரம் சிங்கள இளைஞர்களை சாகடித்துள்ளது? இது சிங்கள மக்களுக்குத் தெரிந்தால் மக்கள் கிளர்ந்தெழுந்து விடுவார்கள் என்று, இராணுவத்தின் இழப்பினைக்கூட சாதுரியமாக மறைத்து வந்துள்ளது. எங்களைப் போலவே சிங்கள மக்களும் இந்த அரசினால் பலவழிகளில் ஏமாற்றப்பட்டு, ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள்.

தமிழ் மக்களாகிய எங்களுடைய பிரச்சனைகளுக்கு இந்த மக்கள் காரணமில்லை. தமிழ் சிங்கள அரசியல்வாதிகளும் அவர்களுடைய தவறான வழி நடத்தலும் தான் காரணம். இதனை நாங்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் போராட வேண்டியது இவர்களுக்கு எதிராகத் தான். எங்கள் போராட்டத்தில் ஒடுக்கப்படும் சகல இன மக்களையும், அவர்களோடுள்ள முற்போக்கு சக்திகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் எங்களுடைய அரசியல், சமூக பொருளாதார விடுதலையினை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், எங்கள் சுயநிர்ணய உரிமையினை வென்றடுக்க வேண்டுமாயின் ஒன்றிணைந்த மக்கள் போராட்டம் ஒன்றுதான் சாத்தியமாகும். இதை விட்டு ஏனைய நாடுகளை, அரசுகளைக் காரணம் காட்டி எங்களை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பினை மக்களுக்கு ஏற்படுத்தி அரசியற் பிழைப்பு நடாத்துவது ஏமாற்று நடவடிக்கையே தவிர எந்தவித பயனுமற்ற செயலாகும்.■

## செய்திகள்

### யாழில் சாகும்வரை உண்ணாவிரதம்:

**பிரதான முஸ்லிம் அமைப்புகளுக்கு தொடர்பு இல்லை**




யாழ்ப்பாணம் புதிய சோனக தெரு அல்லது பெம்மைவெளி என்று அழைக்கப்படும் பகுதியில் சாகும்வரையான ஓர் உண்ணாவிரதப் போராட்டம் 10.03.2011இல் நடந்தது. எம்.ஆர்.நௌசாத் என்பவர் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளைக் கோரி சத்தியாகிரகப் போராட்டமாக இதை முதலில் ஆரம்பித்தும் இருந்தார். இது பயனளிக்காத நிலையில் இவ்வாறு சாகுவரை உண்ணாவிரதத்தில் குதித்திருந்தார்.

இது தொடர்பாக யாழ்.முஸ்லிம்களின் 4பிரதான அமைப்புக்களின் கூட்டமைப்பான கிளிநொச்சி நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் மக்கள் பணிமனை(யாழ்) ஆகியவை தமக்கும் இப்போராட்டத்துக்கும் எதுவித சம்மந்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளதாக செய்திகளினூடாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் தாகிர் தமக்கும் இந்தப் போராட்டத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையெனவும், யாழ் பணிமனைத்தலைவர் மௌலவி சுவியான் "இந்தச் சாகுவரை உண்ணாவிரதப் போராட்டம் இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்ல" என்று அந்த மேடையில் பேசியதாகவும் மேலும் இவ் இலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்.

மேற்குலக நாடுகள் லிபியா மீது தொடுத்துவரும் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ஆக்கிரமிப்பைக் கண்டித்து கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் கண்டன ஊர்வலத்தை நடத்தினர். ஏப்பிரல் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஜிம்மாத் தொழுகையின் பின்னர் மீரா யும்மா பள்ளிவாசல் முன் இவர்கள் கூடினர். அங்கிருந்து முஸ்லிம் பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்றனர். மேற்குலகம் லிபியாவில் தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு மற்றும் வான் தாக்குதலை உடன் நிறுத்தக் கோரி மகஜர் ஒன்றை ஐ.நாவுக்கு அனுப்பிவைக்கும்படி பிரதேசச் செயலாளரிடம் சமர்பித்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய ஏறாவூர் ஜாமி - அத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.சி. அப்துல் மஜீத் இப் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், "அரபுநாடுகளில் காணப்படுகின்ற வளங்களை அமெரிக்காவும் அதன் நேச நாட்டு படைகளும் சூறையாடி தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காக மேற் கொள்ளப்படுகின்ற யுத்தமே தவிர இது மக்களை மீட்பதற்கான யுத்தம் அல்ல" என்று குறிப்பிட்டதாக பி.பி.சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விஜயகுமாரன்

# தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி பேசுகிறேன்



பொதுவாக நாங்கள் கூட்டங்களில் பேசுவதில்லை. பேசத் தெரியாது என்பதற்காக இல்லை, நாங்கள் செயல் வீரர்கள். ஏதாவது பிரச்சனை என்றால் எங்களது துப்பாக்கிகள் தான் பேசும். எங்களது மேதகு தேசியத் தலைவரே தன்னிடம் யாராவது கேள்வி கேட்டால், பக்கத்தில் இருக்கும் தேசத்தின் குரலைத் தான் அண்ணே நீங்கள் இதற்கு பதில் சொல்லுங்கோ என்று கைகாட்டி விடுவார். புலம்பெயர் நாடுகளில் கூட்டமென்றால் தமிழ் நாட்டிலிருந்து யாரையாவது கூப்பிட்டால் கொடுத்த காசிற்கு மேலாக கூவி விட்டு போய் விடுவார்கள்.

இன்றைய அரசியல் நிலையைப் பற்றி நான் பேச வேண்டும். நேற்றைய, இன்றைய, நாளைய அரசியல் நிலை எங்களிற்கு எப்போதும் ஒன்றுதான். எங்களுடைய யாழ் மாவட்ட தேசியத் தலைவர் மேதகு கிட்டு விட்டுப் போன அறிக்கை ஒன்றில் ஒரு வாசகம் என்றாலும் திருவாசகம் என்பது போல் சொன்ன "மக்களிற்கு பேச்சுரிமை ஜனநாயக உரிமை என்பவற்றை கொடுத்தால் நாங்கள் அரசியலில் அநாதைகள் ஆகிவிடுவோம்" என்பதுதான் அது. முள்ளிவாய்க்கால் வரையும் அவருடைய கொள்கைகளை நாம் விடாமல் பின்பற்றி வந்திருக்கின்றோம்.

வன்னியில் இறுதிப் போர் நடந்த போது நாங்கள்தான் இலண்டன் மாநகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம். உலகெங்கும் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்கான இயக்கக் கொடியை பிடித்தபடி எங்கள் தலைவர் மேதகுதான் என்று கோசமிட்ட படி போராட்டம் நடத்தினால் அதற்கு இந்த நாடுகள் செவி சாய்க்குமா என்று சில வீணாய்ப் போனவர்கள் கேட்கிறார்கள். இவர்களிற்கு நான் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ராஜிவ் காந்தியை போட்ட பிறகும்கூட இந்தியாவை எங்களிற்காக பேச வேண்டும் என்று கேட்டவர்கள் நாங்கள். முன்பு ராஜிவை போட்டோம். இப்போது சோனியாவின் காலைப் பிடிக்கக் கூடாது என்பது ஒரு துன்பியலான செயல்.

நாங்கள் எங்களினுடைய நோக்கத்திற்காக மட்டுமே செயல்படுபவர்கள். அதற்காக யாரை வேண்டுமானாலும் ஆதரிப்போம். யாரை வேண்டுமானாலும் எதிர்ப்போம். (எதிர்ப்போம் என்றால் போட்டுத் தள்ளுவோம் என்று நீங்களாக கற்பனை பண்ணிக் கொள்ளக் கூடாது) ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கொலை செய்கின்றனர் என்பதற்காக, அமெரிக்க மக்கள் திலகம் ஒபாமாவை நாங்கள் எதிர்க்க முடியுமா? அவர்தான் நாடு கடந்த தமிழீழத்தை பெற்றுத் தரப் போகின்றார். இந்தியத் தேர்தல் நேரத்தில் புரட்சி அழகி ஜெயலலிதா எங்களை ஆதரித்தார். போர் என்றால் மக்கள் சாகத்தான் வேண்டும் என்று அதற்கு முதல்நாள்தான் பேசியிருந்தார். பிரபாகரனின் வயது முதிர்ந்த தாய் தந்தையை இந்தியாவில் வைத்திருக்கக் கூடாது என்று கூடப் பேசியிருந்தார். இதையெல்லாம் அவர் எங்களை ஆதரிக்கும் போது மனதில் வைத்திருக்க முடியுமா? நாங்கள் அவரை ஈழத்தாய் என்று போற்றிப் பாடுகின்றோம். அவரை ஊழலின் தாய், அராஜகத்தின் தாய் என்று தமிழ் நாட்டு மக்கள் சொல்லுகின்றார்கள் என்பதற்காக நாங்கள் கும்பிடாமல் இருக்க முடியுமா? எங்களை ஆதரித்தார் என்ற காரணத்திற்காக ஜெயலலிதாவால் சிறையில் அடைக்கப்பட்ட தன்மானச் சிங்கம் வை.கோபால்சாமியே புரட்சி அழகியை அன்புச் சகோதரி என்று அழைக்கிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

பிரேமதாஸவுடன் பேச்சுவார்த்தை நடத்திய காலங்களில் எங்களுடைய இருமலில், மன்னிக்கவும் உறுமலில் அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர், அதனால் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார் என்று, களனிகங்கையில் அவரால் கொல்லப்பட்ட ஏழைச் சிங்கள மக்களின் பிணங்கள் மிதந்து வந்த போது கூட தயங்காமல் எழுதினோம். பிறகு போட்டுத் தள்ளினோம். மகிந்தா பிரித்தானியா வந்த போது வழக்கு போடப் பிந்தி விட்டோம் என்று சிலர் கவலைப்படுகின்றார்கள். பதவியில் இருக்கும் அரச தலைவரை பிரித்தானிய மண்ணில் வைத்து கைது செய்ய முடியாது என சிலியின் சர்வாதிகாரி பினாச்சட் வழக்கு உட்பட பல வழக்குகளில் பிரித்தானிய நீதி மன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன என்பதைப் பற்றி நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. கவலைப்பட வேண்டிய விடயம் என்ன என்றால் வழக்கு போடத் தேவையான பணம் எங்களிடம் இல்லை என்பது தான். அதற்கு தேவையான 25000 பவுண்கள் எங்களிடம் இருக்கவில்லை என்று நாங்கள் தொலைக்காட்சியில் சொன்ன போது, பிரித்தானியாவே கடலில் மூழ்கிப் போகும் அளவிற்கு தமிழ் மக்கள் கண்ணீர் விட்டு கதறி அழுததாக சொன்னார்கள். வழக்குப் போட நிதி கேட்டு தொண்டர்கள் வழக்கம் போல் வீடு வீடாக வருவார்கள். எப்போதும் போல் இப்போதும் வாரி வழங்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கின்றேன். பில்லியன் கணக்கில் பணம், அதற்கு மில்லியன் கணக்கில் வருட வருமானம். அந்தப் பணம் எல்லாம் எங்கே என்று சில மண்டை காய்ந்தவர்கள் கணக்கு கேட்கிறார்கள். இந்தப் பணம் இயக்கத்தின் பணம். இதை மேதகுவிடம் மட்டுமே கொடுப்போம். அவரிற்கு மட்டுமே கணக்கு காட்டுவோம். அவர் தான் இல்லையே. வருடம் இரண்டாகியும் நிழல் கூட அசையவில்லையே என்றும் சிலர் கேட்கிறார்கள். இரண்டாயிரம் வருடமாக இயேசு திரும்பி வருவார் என்பதை நம்புகிறீர்கள். ஆனால் எங்கள் தலைவர் திரும்பி வருவார் என்பதை மட்டும் ஏன் நம்ப மறுக்கின்றீர்கள்? ஐரோப்பிய அரச குடும்பங்கள், கிட்லர், சேர்ச்சில், ஜோர்ச்புஸ், ஜோர்ச்சின் வளர்ப்பு பிராணி ரொனி எல்லாம் இயேசு திரும்பி வருவார் என்பதை நம்பும் பெரும் அறிஞர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

சண்முகதாசன், கார்த்திகேசன் காலத்தில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த விசுவானந்ததேவன், தொழிற்சங்கத் தலைவர் விஜயானந்தன் போன்ற பல கம்யூனிஸ்டுக்களை நாங்கள் கொலை செய்தோம் என்று இலங்கையிலிருந்து வந்திருக்கும் கம்யூனிஸ்ட்டு கட்சியை சேர்ந்தவர் கவலைப் படக் கூடும். இங்கு இலண்டனில் இருக்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரைப் போல், ஒருவருக்கும் விளங்காமல் கட்டுரைகளை எழுதிவிட்டு, எங்களைப் போராட்ட சக்திகள் என்று சொல்லியிருந்தால், நாங்கள் ஏன் மரண தண்டனை கொடுக்கப் போகின்றோம். கே.பி உடன் 10சத வீதம் தொடர்பில் இருப்பவர்கள், 20சத வீதம் தொடர்பில் இருப்பவர்கள், நேர்மையான தமிழ்த் தேசியவாதிகள் என்று எங்களை ஐந்து பிரிவுகளாக பிரித்து கட்டுரை ஒன்று வந்த போது, நாங்கள் என்ன பள்ளிக்கூடமா நடத்துகின்றோம் வகுப்பு பிரிப்பதற்கு என்று நானே ஒரு நிமிடம் பயந்து விட்டேன். எல்லாவற்றையும் மறந்து விடலாம். ஆனால் வன்னி மக்களைப் பிடித்து வைத்திருந்ததைக் கூட ஏன் என்று கேட்காதவர்கள், எப்படி நல்ல சக்தியாக இருக்க முடியும்? “ஒரு மனிதனாகக் கூட இருக்க முடியாதே” என்று கேள்வி மட்டுமே கேட்கத் தெரிந்த வில்லங்கம் பிடித்தவர்கள் சிலர் கேட்கின்றார்கள். ம.க.இ.காவினால் இந்த வருடத்தின் மிகச் சிறந்த நேர்மையாளர் பட்டம் பெற்ற தமிழ் நாட்டு பத்திரிக்கையாளர், வன்னி மக்களை விடச் சொல்லி கேட்டிருக்கக் கூடாது என்று சொல்லியிருப்பதை, இவர்களிற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வளவு நாட்களாக எங்களை ஆதரித்த பல பொது மக்கள் கூட, இன்று எமது போராட்டம் பற்றிக் கேள்விகள் கேட்கின்றார்கள். கணக்கு கேட்கிறார்கள். உங்களால் மக்கள் பலியாகி விட்டார்கள் என்று குற்றம் சாட்டுகின்றார்கள். ஆனால் முற்போக்கு சக்திகள் என்று சொல்லும் இந்தப் புதிய அமைப்பு, எங்களை தூய தமிழ் தேசியவாதிகள் என்று சொல்லிக் கொண்டு, தாங்களாகவே வந்து நீங்கள் ரொம்ப நல்லவர்கள் என்று ஆதரவு தருகிறார்கள். இங்கு மார்க்சியம் பேசும் வேறு அமைப்புக்கள் இருந்தாலும் அவர்களுடன் கடைசி வரையும் சேர மாட்டோம். நீங்கள் எவ்வளவு அடிச்சாலும் தாங்குவோம் என்கின்ற இந்த புதிய அமைப்பின் டீல் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கு. கடந்த காலங்களில் இந்திய ராணுவத்திற்கு எதிராகப் போராடிய போது, பிராந்திய வல்லரசிற்கு எதிரான தேசபக்தர்கள் என்று எங்களைச் சொன்ன என்.எல்.எவ்.ரி இற்கு செய்தது போல, பலஸ்த்தீனிய ராணுவப் பயிற்சியில் தாங்களாகவே பங்கு தந்த ஈரோஸ் அமைப்பிற்கு செய்தது போல, இந்தப் புதிய அமைப்பிற்கும் வருங்காலங்களில் எங்களுடைய வழக்கமான பாணியில் நன்றியைக் காட்டுவோம் என்று கூறி முடிக்கின்றேன்.■

## ஊரை அடிச்சு உலையில போடுவார்



**–சிறி–**

கள்ளர் கூட்டம்
ஊரை அடிச்சு
உலையில போடுவார்
என்ர பிள்ளையள்
கொட்டின ரத்தத்த
விட்ட அரும் உயிர
சொல்லி அழுதல்லோ
ஊரெல்லாம்
உலகமெல்லாம்
சொத்துச் சேத்தாங்கள்

எங்கட ராசா ராசாத்தி
நீங்கசெத்த
வருசப்பழஞ்சலிப்பு
நாங்க இன்னம்
வாயாறச் சொல்லயில்ல
என்ர செல்லக் குஞ்சுகள்
அவலமா சாகவைச்சு
காட்டியும் கொடுத்து நீ-
கொள்ளயில போவானே
அந்திய தேசத்தில
காசாக வீடாக
காராக காசு பண்ணி
திரும்பவும் வாறாய்
என் வீட்டு வாசலுக்கு
நாடுகடந்த
தமிழீழக்
கதை சொல்ல

நாசமாய்ப் போவானே
பாடையில போவானே
செக்கப் போய்
சிவலிங்கமெண்டு
நக்கச் சொல்லுறியா
உன்ர வக்க நிரப்ப
என்ர வம்சத்த அழிச்சவனே
கொடுக்குகளும் கோமணமும்
குறுக்குகட்டுகளும்
இறுக்கி வரிஞ்சு
இறுகக் கட்டிவைச்சு - இன்னும் நீ
கொள்ளையடிக்க வந்தா
கொடுவா கத்தியொண்டும்
தீட்டி வச்சிருக்கு
வாடா நீ வா

நாடும் கடந்து போய்
எங்கள நாய்பேய்க்கு விலைபேசி
வித்துப் பிழைக்கும் தெருநாயே
விடு உன்ர
சுரண்டிக் கொழுக்கும்
சொறிக்குணத்த

www.tamilarangam.net



# கடந்த வரலாற்றில் அரசியல் ரீதியாக வக்கற்றுப் போனவர்கள் நிகழ்காலத்துக்கு ஒருநாளும் ஒளி கொடுக்க முடியாது



பி.இரயாகரன்

கடந்து போன எம் வரலாற்று இருட்டுக்கு எதிராக நடைமுறையில் தொடர்ந்து போராட முடியாது அரசியல் ரீதியாக வக்கற்றுப் போனவர்கள், புதிய வரலாற்றுக்கு எப்படித்தான் அரசியல் ரீதியாக ஒளிகொடுக்க முடியும்?! மக்களின் விடுதலையை வழிகாட்டும் பாட்டாளி வர்க்க அரசியலை முன்வைத்து அதற்காக எந்த ஒரு பாசிச சூழலையும் எதிர்கொண்டு எதிர்வினையாற்றுவது தான் நடைமுறை. இதை கடந்த எம் வரலாற்றில் யார் தான் செய்தார்கள்?!

இதை முன்வைத்தவர்களுடன் இணைந்து செல்வதுதான், இன்றைய புரட்சிகர நடைமுறை. இதைச் செய்யமுனையாத அனைத்தும், தன்னுடன் எதிர்ப்புரட்சிகர அரசியல் கூறை உள்ளடக்கியபடி தான் முன்நகர முனைகின்றது. இது இன்று வெளிப்படையான உண்மை.

புலி, புலியெதிர்ப்பு மட்டும் ஓர் எதிர்ப்புரட்சிக் கூறாக, கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் எம்மத்தியில் செயல்படவில்லை. மாறாக இதற்கு வெளியில் இதற்கு மாறாக எந்த மாற்று அரசியலையும் முன்வைத்து செயற்படாது, அங்குமிங்கும் செயல்பட்ட கூறுகளும்கூட எதிர்ப்புரட்சி அரசியலையே விதைத்தனர். அவர்கள் இன்றைய சூழலில் தம்மை மூடிமறைத்துக்கொண்டு, தனித்துவமான இன்னுமோர் எதிர்ப்புரட்சி சக்தியாகவே உருவாக்க முனைகின்றனர்.

கடந்த காலத்தில் அரசியல் ரீதியாக தங்கள் மக்கள் விரோத அரசியலால் தோற்று அம்பலப்பட்டுப் போனவர்கள் புலிகள், புலியெதிர்ப்பு மட்டுமல்ல. இதற்கு வெளியில் பாட்டாளி வர்க்க அரசியலை நிராகரித்தபடி, அதை உச்சரித்தபடியும், எந்த மாற்று மக்கள் அரசியலையும் முன்வைக்காது அங்குமிங்கும் நின்றவர்களும் தான் தோற்றுப் போனவர்கள். எமது வழிதான் சரியானது என்பது தெளிவாக அரசியல் ரீதியாக உணரப்படுகின்றது.

இந்த நிலையில் எம்முடன் சேர்ந்து பயணிக்க முடியாதவர்கள், இயல்பாக தம்முள் பாட்டாளி வர்க்கத்தை மறுக்கும் எதிர்ப்புரட்சி அரசியல் கூறுடன்தான், தம்மை முன்னிறுத்த முனைகின்றனர். அரசியல் ரீதியாக கடந்து போன எம் அழிவு அரசியல் வரலாற்றில் மக்கள் விரோத சக்தியாக செயல்பட்டவர்கள் இன்று களத்தில் புலிகளின் அழிவுடன் திடீரென புதிதாக அரங்கில் நுழைகின்றனர். மறுபடியும் மக்களை அரசியல் இருட்டில் நிறுத்தி, அவர்களை விட்டில் பூச்சிகளாக பலியிட முனைகின்றனர். கடந்த எதிர்ப்புரட்சி அரசியல் வரலாற்றைப் புதிதாக சொல்ல முனைகின்றனர். முன்பு நாம் சொன்னதை எந்த வகையில் தவறு என்று சொல்லாமல், அவர்கள் புதிதாக சொல்ல முனைவது அரசியல் ரீதியாகவே எதிர்ப்புரட்சி அரசியல் கூற்றைக்கொண்டது.

கடந்த தங்கள் எதிர்ப்புரட்சி வரலாற்றை மறைக்க, மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையில் நடைமுறையுடன் சொல்லப்பட்டதை இருட்டடிப்பு செய்வது இன்று அவர்களுக்கு அவசியமாக உள்ளது. இன்று எம்மை நிராகரிப்பதன் மூலம் அல்லது எம்முடன் இணைந்து பயணிக்காது புதிதாக ஏதோ ஒன்றுடன் செயற்பட முனைவதன் மூலம் நேர்மையற்ற அரசியல் கூறு அதன் அரசியல் உள்ளடக்கமாக உள்ளது.

**கடந்த எம் வரலாற்றுப் போக்கு என்ன?**

1."தேசியத்தின்" பெயரில் புலிப் பாசிசம்
2."ஜனநாயகத்தின்" பெயரில் புலியெதிர்ப்பு
3.மக்களின் ஜனநாயகத்தையும், தேசியத்தையும் முன்னிறுத்தி, பாட்டாளி வர்க்க அரசியலை முன்னெடுத்த நாம்.

இதற்கு வெளியில் யாரும் தனித்துவமாக மக்களுடன் நின்றது கிடையாது. பாட்டாளி வர்க்க அரசியலை முன்னிறுத்தி, எமக்கு வெளியில் யாரும் நடைமுறையுடன் இணைந்து சுயமாக போராடியது கிடையாது. உடனுக்குடன் அனைத்து பிற்போக்கு கூறுகளையும், மக்கள் விரோத அரசியலையும் அம்பலப்படுத்திப் போராடுவதுதான், அரசியல் நடைமுறையாக இருந்தது. இந்த நடைமுறையை முன்னிறுத்தி, கடந்தகாலம் அனைத்தையும் உரசிப்பார்க்க முடியும். இந்த அரசியல் நடைமுறையை நாங்கள் மட்டும்தான், கடந்த வரலாற்றில் தொடர்ச்சியாகச் செய்தோம். இதற்கு வெளியில் அரசியல் உண்மை, நேர்மை, மக்கள் அரசியலை உரசிப்பார்க்க, இதைவிட வேறு ஓர் அரசியல் வழி எதுவும் கிடையாது. புரட்சிகர அரசியலைத் தீர்மானித்த ஒரே நடைமுறை, இதுமட்டும் தான். இதை கடந்த காலத்தில் செய்யாத யாரும், அதை ஏற்றுக் கொள்ளாத யாரும், இன்று தங்கள் எதிர்ப்புரட்சி அரசியல் கூறுகளுடன் தான் பயணிக்கின்றனர்.

இப்படி அன்று எம்முடன், எம் நடைமுறையில் நிற்காத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எவரும், புலிப் பாசிசம், புலியெதிர்ப்பு பாசிசத்துடன் தான் சேர்ந்து பயணித்தனர். இதில் ஏதோ ஒன்றுடன் சேர்ந்து நிற்க, "தேசியத்தை" அல்லது "ஜனநாயகத்தை" தமக்கேற்ப பயன்படுத்தினர். இவ்விரண்டையும் மக்கள் நலனுடன் ஒரே நேரத்தில் முன்னெடுத்து, இதை சொல்லி செயல்பட்ட புலி மற்றும் புலியெதிர்ப்பு எதிர்ப்புரட்சி கூறை எதிர்த்து தனித்துவமாக மக்கள் அரசியலை முன்னிறுத்திய, எந்த அரசியல் போக்கும் எமக்கு வெளியில் வரலாற்றில் இருக்கவில்லை.

தம்மை தனித்துவமானதாக காட்டிக்கொண்ட அனைத்து எதிர்ப்புரட்சி கூறுகளையும் மறுத்து, தனித்துவமான நடைமுறையில் யாரும் செயல்படவில்லை. கடந்தகாலத்தில் எம்மை சுற்றிய வரலாற்றுப் போக்கு இது. இதை இன்று பலர் மூடிமறைக்க முனைகின்றனர். எமது தனித்துவமான, மக்களுக்கான எமது போராட்டத்தை மறுதலித்த படி, புற்றில் இருந்து கிளம்பும் புற்றீசல்கள் போல் பலர் புதுசாக கிளம்புகின்றனர்.

கடந்த 20 வருடத்தில் எதிர்ப்புரட்சியுடன் ஏதோ ஒரு வகையில் கூடி பயணித்தவர்கள், மௌனம் சாதித்தவர்கள், சுயவிமர்சனமின்றி இன்று திடீர் திடீரென மீள முளைக்கின்றனர். இப்படி வெளிப்படையற்ற தன்மையுடன், எந்த சுயவிமர்சனமுமின்றி, தங்களை மூடிமறைத்துக் கொண்டு மக்கள் பற்றி பேசத்தொடங்குகின்றனர்.

இதில் உள்ள எதிர்ப்புரட்சி அம்சம் என்னவென்றால், 20 வருடத்துக்கு மேலாக மக்கள் அரசியலை முன்னிறுத்திய எமது புரட்சிகரமான அரசியல் போராட்டத்தை மறுதலிப்பதுதான். மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையை முன்னிறுத்தி எமது தனித்துவமாக அரசியல் இருப்பை மறுக்கின்றனர். இவை எதுவும் தெரியாத மாதிரி தம்மை மூடிமறைத்துக் கொண்டு, கடந்தகாலம் பற்றிய எந்த அரசியல் மதிப்பீட்டையும் முன்வைக்காது, தங்கள் சொந்த சந்தர்ப்பவாதத்துடன் அரசியல் பேசுகின்றனர். எம்முடனான அவர்களின் அரசியல் முரண்பாடுகள் என்ன? அதில் இருந்து நீங்கள் எப்படி வேறுபடுகின்றீர்கள்? உங்கள் மாற்று அரசியல் தான் என்ன? இவர்கள் இப்படி எதையும் முன்வைப்பது கிடையாது.

மொத்தத்தில் விமர்சனம், சுயவிமர்சனமற்ற ஒன்றின் ஊடாக புதிய எதிர்ப்புரட்சி அரசியலை நுழைக்க முனைகின்றனர்.

மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனையிலான எம்மையும் எமது அரசியலையும் அங்கீகரிக்காத, எம்முடன் உள்ள அரசியல் முரண்பாட்டை தெளிவுபடுத்தாத, கடந்தகால எதிர்ப்புரட்சிகர கூறுகளை அதன் நடைமுறைகளை விமர்சிக்காத அனைத்தும், இன்று மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம். புலிகள் இன்று தம்மை விமர்சனம், சுயவிமர்சனம் செய்யாது எப்படி தங்கள் கடந்தகால பாசிச வரலாற்றை மூடிமறைத்துக் கொண்டு வேஷம் போடமுனைகின்றனரோ, அதே பாணியில் புற்றீசல் போல் திடீரென பலர் அரசியலில் நுழைகின்றனர்.

வெளிப்படையற்ற நேர்மையற்ற வழிகளில் அரசியல் பேசத் தொடங்குகின்றனர். கடந்த காலத்தின் மக்களுக்கான அரசியல் போக்குகளை அங்கீகரிக்காது, மற்றைய எதிர்ப்புரட்சிப் போக்குகள் மீது விமர்சனம் சுயவிமர்சனமின்றி, அதனுடன் சேர்ந்து நின்ற கூறுகளுடன் இணைந்து, புதிய எதிர்ப்புரட்சி கூறுகளை மீளவும் உருவாக்க முனைகின்றனர்.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், சமூக கூறுகளின் வர்க்க அரசியலை முன்னிறுத்தி, அதை தங்கள் அரசியலாக கொண்டு சமகால அரசியல் அரங்கில் நுழையவில்லை. அதை வெறுமனே உச்சரித்தபடி, அதைக் காட்டி ஏமாற்ற முனைகின்றனர். இலங்கையில் தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக... மக்களின் விடுதலைக்கு, பாட்டாளி வர்க்க அரசியலே அடிப்படையானது. இந்த அடிப்படையில் தான் இன ஒடுக்குமுறைக்கு தீர்வு காணமுடியும். சுயநிர்ணயம், ஜனநாயகம் என அனைத்தும் இதற்கு உட்பட்டுத்தான் தீர்க்கப்படமுடியும். பாட்டாளி வர்க்க அரசியலை முன்வைக்காத மார்க்சிய லெனிய மாவோ சிந்தனைகளை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளாத அரசியல் போக்கு, மீண்டும் ஓர் எதிர்ப் புரட்சியாக எம்முன் நுழைய முனைகின்றது. வெளிப்படையற்ற அரசியல் மூலம், தமிழ் சிங்கள ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்தை முன்னிறுத்தாத அரசியல் போக்கு மீளவும் மெல்ல முளைவிடுகின்றது. இதை முறியடித்து போராட அணிதிரள்வதும், இந்தப் போக்கை அரசியல் ரீதியாக இனம் காண்பதன் ஊடாக இதற்கு எதிராக போராடுமாறு அறைகூவுகின்றோம். ●

# சேகுவேராவின் நண்பர் ஆல்பர்ட்டோ கிரெனாடோ மரணம்



**ஆ**ல்பர்ட்டோ கிரெனாடோ ஆரம்பத்தில் ஹவானா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராவார். அதன் பின்பு பல அறிவியல் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதோடு கியூபாவை மருத்துவ, கல்வி, அறிவியல் துறைகளின் வளர்ச்சியில் மிகப்பெரிய பங்காற்றினார். சே வின் மறைவிற்கு பின்னரும் தனது உயிர் நண்பனின் நினைவாக அவர் மறையும் வரை கியூபாவிலேயே தங்கி இருந்தார். "தி மோட்டார் சைக்கிள்" டைரி என்ற திரைப்படம் வெற்றிப்படமாக அமைவதற்கு இவரின் பங்களிப்பு மிகவும் அதிகம் என்று கூறலாம். இவரது பயணக்குறிப்பில் சே என்ற மாபெரும் மனிதாபிமானியை நாம் அருகில் இருந்து பார்க்க முடியும். இவர் 05.03.2011 அன்று தனது 88வது வயதில் மரணத்தைத் தழுவியுள்ளார் ●

www.tamilarangam.net



# பாக்கியசாலிகளின் வாழ்வால் எழுதப்பட்ட அற்புதமான அந்த இலக்கியம்!



**19**30.10.17ம் திகதி பகத்சிங்குக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. கூடவே ராஜ்குருவுக்கும், சுக்தேவிற்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன்பு இவ் அழகிய இலக்கியம் படைப்பாகியது. இன்னும் சரியாகச் சொல்வதென்றால் 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகியோர் தூக்கிலிப்பட்டபோது அது பிறந்தது. பகத்சிங்கும் அவர்களது தோழர்களும் தூக்கிலிடப்பட்டவுடன் பிரிட்டிஷ் அரசு இவர்கள் பற்றிய நூல்கள் அனைத்தையும் தடைசெய்தது. தமிழ் நாட்டில் மட்டும் 11 தமிழ் நூல்கள் தடைசெய்யப்பட்டன. ஆனாலும், பகத்சிங்கும் அவரது தோழர்களும் தூக்கிலிடப்பட்ட ஐந்து மாத இடைவெளிக்குள் அவர்கள் பற்றிய புத்தகமொன்று 6தடவைகள் பதிப்பைப் பெற்றிருந்தது. ஆறாவது பதிப்பு மட்டும் 5000 பிரதிகளைப் பெற்றிருந்தது.

**1931.03.23 மாலை 3.00 மணி...**

லாகூர் சிறையின் போக்குவரத்துக்கள் நின்றுவிட்டன. பகத்சிங்கும் அவர்களது தோழர்களும் வழக்கம் போலவே முகமகிழ்ச்சியுடன் இருந்தனர். மறுநாட் காலையில் தங்களைத் தூக்கிலிடப் போவதாகவே நினைத்துக் கொண்டிருந்தனர். வழக்கத்துக்கு மாறாக கைதிகள் அனைவரும் இன்று முன்னதாகவே அவரவர் அறையில் அடைக்கப்பட்டனர். பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் வலிமைமிகு சட்டத்தின் காவலாளிகளான "மாஜிஸ்ரேட்" மற்றும் சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் "ஜெனரல்" முதலியோர் வழமைபோல பெரிய வாயில் வழியாக உள்நுழையாமல் மறைவாக விசேட விசாரணை கோட்டுக்குப் போகும் வாயில் வழியாகப் புகுந்து வந்தனர். "மாஜிஸ்ரேட்" வந்து பகத்சிங்கை அழைத்தபோது "மாஜிஸ்ரேட் அவர்களே! தாங்கள் அதிஸ்டசாலி! சுதந்திரப் போராட்டத்தில் இறக்கும் வீரர் எவ்விதம் தூக்கு மேடையைத் தழுவுவர் என்பதை நாங்கள் தங்களுக்கு இதோ நேரில் காட்டுகிறோம்" எனப் பகத்சிங் பதிலளித்தார். இதைக்கேட்ட "மாஜிஸ்ரேட்" கிறுகிறுத்துப்போனார். அவர்கள் மூவரையும் அறைகளை விட்டு வெளியே கொண்டு வந்ததும், சிறையின் மூலை முடுக்குக்களில் இருந்து கைதிகள் "புரட்சி நீடுழி வாழ்க!, ஏகாதிபத்தியம் ஒழிக!, ஏழைகள் வாழ்க!" என ஆரவாரித்து கூச்சலாக எழுப்பினர். பிறகு, அவர்கள் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

**"உயிர் பிரிந்திடினும் தாய்த்திருநாடே!**
**பிரியாதே உந்தன் இனிய நினைவுகள்:**
**கலந்திடும் இந்த மண் உந்தன் மண்ணில்**
**கலந்ததால் இந்த மண்ணும்**
**மணங்கமழும் உனதன்பாலே!"**

என்று மூவரும் கைகோர்த்தபடி, துள்ளு நடைபோட்டு ஆனந்தமாகப் பாடிச் சென்றனர். தூக்கு மேடைக்கு அருகில் சென்றதும் மூவரும் அதன் மீது தாவி ஏற முயன்றனர். சம்பிரதாயப்படி சில காரியங்கள் செய்யப்பட்டபின் அவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். பகத்சிங் நடுவிலும், வலது பக்கமாக ராஜ்குருவும், இடது புறமாக சுக்தேவ்வும் நிறுத்தப்பட்டனர். சுருக்குக் கயிறு அவர்களின் கழுத்தில் மாட்டப்பட்டது. தங்கள் கண்களை துணியால் மறைக்கவேண்டாம் என அவர்கள் சொல்லிவிட்டனர். தாம் இறக்கும் போது கூட தம் தாய்நாட்டைப் பார்த்தபடியே இறக்கவேண்டும் எனச் சொன்னனர். மூவரும் தூக்குக் கயிற்றை காதலோடு முத்தமிட்டனர். பின்னர் ஆனந்தம் பீறிட்டெழ ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக் கொண்டனர். அப்போது சுக்தேவ் "ஒரு நிமிடம் சற்றே பிரிந்திருந்தாலும், மீண்டும் மூவரும் ஒன்று சேர்ந்து அஸாத், பகவதி சரணர், யதீந்திரதாஸ் ஆகியோர்களுடன் கூடி, நமது கட்சியின் மத்திய கமிட்டிக்கூட்டத்தை நடத்தச் சொல்லலாம்" என்றார்.



அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே தூக்குப் பலகை தட்டிவிடப்பட்டது. பகத்சிங் ஒரு கணத்துக்குள் உயிர் துறந்தார். மெலிந்திருந்த ஏனைய இருவரும் இரண்டொரு விநாடிகளில் உயிர் துறந்தனர். 40 நிமிடங்களின் பின்னர் அவர்களது உடல்கள் இறக்கப்பட்டன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கானல் நீர்...



நிலாதரன்

"We Want… தமிழீழம்...We Want… தமிழீழம்...Our Leder… பிரபாகரன்...Our Leder… பிரபாகரன்… டம்… டம்… டம்… டம்" என்ற மேளத்தின் இசை ஒலியோடு மக்கள் கூட்டத்தின் கோசம் வானைப் பிளக்கிறது. ஒவ்வொருவரது கோசங்களில் இணைந்த உச்சரிப்புக்களிலும் இருந்த உணர்ச்சியின் வேகமும் அதனோடு ஊறிய உச்சாட்ட வெறியின் கொதிப்பும் ஆவேசமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. டம்… டம்… டம்… டம்… We Want தமிழீழம், We Want தமிழீழம், Our Leder பிரபாகரன், Our Leder பிரபாகரன் நூறல்ல.., ஆயிரமல்ல கிட்டத்தட்ட லட்சங்களைத் தாண்டிவிட்ட மக்கள் கூட்டம். குழந்தைகள் குட்டிகள், கிழடுகட்டைகள், இளைஞர்கள், குமருகள் எனச் சத்தம் போட்டபடி ஊர்வலம் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. சவப்பெட்டிகளைத் தூக்கியபடி ஒரு கூட்டமாகவும், தலையிலே துண்டுகளைக் கட்டியபடி தாளத்திற்கு ஏற்றதுபோல் பைலா ஆடிக்கொண்டு போகும் இன்னொரு இளைஞர் கூட்டமுமாக, இறுதி நேரத்தில் நிகழ்ந்த கோரச் சம்பவங்களைப் பிரதிபலிக்கும் பதாகை களோடும், பொக்கற்றினுள் இரண்டு கைகளையும் வைத் துக்கொண்டு புன்னகைத்தபடி போஸ் கொடுத்துக் கொண்டி ருக்கும் தலைவனின் படத்தையும் தூக்கிக்கொண்டு போகும் கூட்டமுமாக ஊர்வலம் கம்பீரமாய் வீறுநடை போட்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. We Want தமிழீழம் We Want தமிழீழம், Our Leder பிரபாகரன், Our leder பிரபாகரன் எந்தத் தடைகளுமின்றி ஊர்வலம் நகர்ந்து செல்கின்றது. நகரமுடியாது மறிக்கப்பட்டிருந்த வாகனங்களில் இருந்த வெள்ளைச் சனங்களும், வெளிநாட்டுச் சனங்களும் எட்டிப் பார்த்தபடியே திகைத்துப் போயிருந்தார்கள். இப்படி ஒரு சனக்கூட்டமா...? காற்றிலே கம்பீரமாய் எழுந்து நிற்கும் சிவப்பு மஞ்சள் கலந்த வண்ணக்கொடிகள், வீதியெங்கும் நிமிர்ந்து நிற்க நீண்ட வரிசையாக, கண்ணுக்கு எட்டாத வகையில் எங்கும் ஒரே கறுப்புத் தலைகள். இந்த ஐரோப்பிய வரலாற்றில் இப்படி ஒரு ஊர்வலத்தையும் சனக் கூட்டத்தையும் இந்தச் சனங்கள் கண்டு எவ்வளவோ காலம். ஒருசில தினங்களுக்கு முன்னர்தான் இந்த தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்து, நடுவீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து, போக்குவரத்தை இடையூறு செய்திருந்தபடியால்..., இன்றும் அப்படி நடந்து விடுமோ...? என நினைத்து, சில வெள்ளைத் தலைகள் ஏக்கம் கொண்டன. பதாகைகளையும் அதிலிருந்த படங்களையும் பார்த்த சிலகிழவிகள் அருவெருத்து தங்கள் மூஞ்சைகளை உள்ளே இழுத்துக் கொண்டனர். பார்த்தும் பாராததுபோல் இருந்தவர்களும் தலையைக் கீழே தொங்கப் போட்டார்கள். பாவம் இந்த அப்பாவித் தமிழ்க்கூட்டம்..., இந்த உலக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இப்படி தமிழினத்தயே அழிக்க உடந்தையாக இருப்பதோடு மௌனமாயும் இருக்கிறார்களே எனச்சில வெள்ளைகள் வேதனையும் ஆவேசமும் கூடக் கொண்டார்கள். We want தமிழீழம், We want தமிழீழம், Our Leder பிரபாகரன், Our Leder பிரபாகரன், We want தமிழீழம், We want தமிழீழம் ஒவ்வொரு வார்த்தைகளிலிருந்தும் வருகின்ற அந்த உயிர்ப்பும் அதிலிருந்த உறுதியும் அந்தச் சன இரைச்சலிலும் மிகத் தெளிவாய்க் கேட்கின்றது.

அடிக்கப்படும் மேளத்தின் நாதஒலியும் காற்றோடு காற்றாய் கரைந்து போகின்றது. தனது தோள்ப்பையிலிருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து தொண்டையை ஒருகணம் நனைத்துக் கொண்டான் துவாரகன். கத்து கத்தென்று கத்தி வரண்டுபோன தொண்டைக்கு மிகவும் இதமாகவே இருந்தது. ஆனால் மண்டை மட்டும் கனத்து வலித்துக் கொண்டே இருந்தது. துண்டு துண்டுகளாய் சிதறிப் போன உடல்களும், கையிழந்து காலிழந்து இறைச்சித் துண்டுகளாய் தொங்கிப் போன, இனம் தெரியாத முகம் தெரியாத எம் இரத்த உறவுகள், தலையில் கட்டுத் துணிகளுடன் இரத்தம் வழிந்தபடி மரத்தின் கீழ் குற்றுருயிராய் படுத்துக்கிடக்கும் வயோதிபர்கள், குழந்தை குட்டிகள் இன்னும் சொல்ல முடியா, அந்தக் காட்சிகள் அனைத்தும் துவாரகனின் மனதில் சுற்றிச்சுற்றி வலம் வந்தது. We want தமிழீழம், We want தமிழீழம் Our Leder பிரபாகரன் Our leder பிரபாகரன் துவாரகன் ஆவேசமாகக் கத்தினான். தொண்டை நரம்புகள் புடைத்தெழுந்தன. அவனது ஒவ்வொரு அங்கத்திலும் ஓடும் இரத்தமும் உத்வேகத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. எங்களுக்கு ஒரு தனிநாடு வேண்டும்... எங்களை நாங்களே ஆளவேண்டும், எங்கள் தலைவன் தலைமையில் தான் தமிழீழம் மலர வேண்டும்..! இவ்வளவு நடந்தும் இந்த ஐரோப்பிய நாடுகளும் உலக நாடுகளும் ஏன்தான் மௌனமாய் இருக்கின்றார்கள். எமது அடுத்த கட்டப் போராட்டம் புலம்பெயர்வாழ் இளைஞர்கள் கையில்த்தான் தங்கியிருக்கின்றது என்ற தலைவனின் வார்த்தைகள் துவாரகனையும், அவனைப் போன்ற பல இளைஞர்களையும் மேலும் மேலும் உற்சாகப்படுத்தியிருந்தது."இஞ்சை துவாரகா, உந்தப் போராட்டம் ஒருநாளும் சரிவராது.. உந்த இந்தியா பக்கத்திலே இருக்கும் வரை உந்தப் பிரிவினை, தமிழீழம் என்றெல்லாம் கற்பனையே பண்ண முடியாது. அதுமட்டுமல்ல நீங்கள் உங்களுக்குள்ளேயே உள்ள பிரிவுகளையும் பிரச்சினைகளையும் தீர்க்காமல் தமிழீழம் என்பது வெறும் கண்துடைப்புத்தான். முந்திய தமிழ்த் தலைவர்கள் தாங்கள் தங்களுடைய

www.tamilarangam.net



சுகபோகங்களுக்காகவும் தங்களுடைய பாதுகாப்புக்காகவும் சுயநலன்களுக்காகவும் சும்மா கிடந்த பொடியளை தமீழீழம் என்று கிளப்பிப்போட்டுப் போக, பிறகு பொடியள் தூக்கிக் கொண்டு திரிஞ்சினம். அந்தப் பொடியளும் இயக்கங்களும் ஏன்தான் துவக்கைத் தூக்கினோம் யாருக்கெதிராகத் தூக்கினோம் என்று தெரியாமலே தங்களுக்குள் தாங்களே சுடுபட்டது மட்டுமல்லாமல் ஒன்றாச் சேர்ந்து சாப்பிட்டுக் குடிச்சவர்களையும் ஒன்றாத் திரிந்து படுத்துறங்கிய சகாக்களையும் நண்பர்களையும் கொலைசெய்து மறைச்சுப்போட்டு, பத்தாக்குறைக்கு சும்மா இருந்த சனங்களையும் சுட்டுத் தள்ளினவங்கள். ஒரு படிச்சவன்..! எழுதினவன்..!! கருத்துச் சொன்னவங்களையாவது விட்டு வைச்சாங்களா? ஆடு பிடிச்சவன் கோழி பிடிச்சவன் என்றும் பாராமல், ஏன் களவெடுத்தான் என்று அறியாமல் சமூகத் துரோகிகள் என்று கட்டிவைச்சு கம்பத்திலே தூக்க வெளிக்கிட்டபோதே இந்தப் போராட்டம் பிழைச்சுப் போச்சு. எப்போதாவது எங்கேயாவது ஒருசனத்தின் கருத்தைக் கேட்டிருப்பார்களா..? அல்லது சொல்லத்தான் விட்டாங்களா..? அப்போதே இந்த இயக்கங்கள் எல்லாம் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விட்டார்கள்" என்ற தகப்பனின் கருத்துக்களில் துவாரகன் ஒருநாளும் உடன் பட்டதுமில்லை, ஏற்றுக் கொண்டதுமில்லை. போராட்டம் என்றால் இப்படி அப்படியெல்லாம் இருக்கத்தான் செய்யும். நீங்கள்தான் ஒன்றுமே தெளிவில்லாமலும் விளங்காமலும் இப்பவும் அப்படியே இருக்கின்றீர்கள் என்று தகப்பனுடன் வாதிட்டும் சண்டைப்பட்டும் இருக்கின்றான். ஊர்வலத்தை ஒருகணம் திரும்பிப் பார்க்கின்றான். அவனை அவனாலேயே நம்பமுடியாமல் இருந்தது. அந்தமக்கள் பெருவெள்ளம்.., அந்தக்கொந்தளிப்பு.., அந்த இளைஞர்களின் ஆவேசம்.., அளவுக்கு மிஞ்சிய பெண்கள் கூட்டம்.., எல்லாமே நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும் என்று அவனை இறுமாப்படையச் செய்தது. வழமையை விட பத்திரிகையாளர்களும் தொலைக் காட்சிக்காரர்களும் ஊர்வலங்களைப் படம்பிடித்துக் கொண்டிருப்பதும் வெள்ளைக்காரச் சனங்கள் நிறையப்பேர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதுவும் துவாரகனை மேலும் உற்சாகப்படுத்தியிருந்தது. ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழ்ப் பெண்ணொருவர் தயவுசெய்து ஒரு தமிழ் மக்களும் வீட்டினுள் இருக்காமல் வெளியே வாருங்கள்... எங்கள் தலைவனின் கனவை நனவாக்குவோம்... வீட்டுக்குள்ளேயே இருந்துகொண்டு வேடிக்கை பார்க்க வேண்டாம். வெளியில் வந்து எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்... தமிழர்கள் என்றால் எப்படியானவர்கள் என்பதை உலகிற்கு உணர்த்த இதுவே நல்ல தருணம்... வெளியே வாருங்கள். ஊர்வலத்தில் கலந்து கொள்ளாதவர்கள் உண்மையான தமிழர்களே அல்ல இப்படியான அனைவரும் துரோகிகளே..! என்று மிகுந்த ஆவேசமாகத் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றுக்காய் வர்ணனை செய்து கொண்டிருந்தார். இதுவே எமது இறுதிப் போர், தலைவர் இம்முறை தமிழீழம் கண்டே தீருவார். We want தமிழீழம், We want தமிழீழம், Our Leder பிரபாகரன், Our Leder பிரபாகரன். மேளத்தின் ஒவ்வொரு அடியும் அதில் வரும் நாதமும் ஒவ்வொரு தமிழனையும் உருவேற்றிக் கொண்டிருந்தது. போடப்படும் கோசங்களின் சத்தம் காதைப் புளிக்கவைத்தது. மேளத்தின் ஒவ்வொரு அடியின் வேகம் கூடக்கூட ஆட்டத்தின் வேகமும் கூடிக்கொண்டே போனது. ஒருநாளா இரண்டுநாளா? ஊர்வலம் என ஆரம்பிச்சு இன்றைக்கு நாலாவது நாள். படிப்பின் இறுதியாண்டு. மற்றைய யாழ்ப்பாணத் தமிழர்களைப் போலத்தான் துவாரகனும் படிக்கின்றான். அல்லது படிப்பிக்கப்படுகின்றான் டொக்ராகவோ இஞ்சினியராகவோ வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்றும், உந்தக் கண்ட நிண்டதெல்லாம் இஞ்சினியர் டொக்ரர் என்று படிக்கும்போது, நாம் என்ன குறைவோ என்ற தாயின் கனவுகளையும் நினைத்துக் கொண்டான். படிப்பு முக்கியந்தான், இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் இன்று மிகவும் முக்கியமானது எமதுமக்கள், எமதுமண், எமது தலைவன், இன்றைய புலம்பெயர் இளைஞர் போராட்டம், இங்கே படிப்பை நாம் எப்போதும் படிக்கலாம். அதுவும் இந்த வசதியான நாடுகளில். ஆனால் போராட்டமும் ஊர்வலங்களுமே இன்றைய இளைஞர்களின் முதற்கடமை. நாங்கள் இங்கே நடாத்தும் போராட்டங்களின் மூலம்தான் அங்கே தமிழீழம் மலரும் என்றும், நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இந்த ஐரோப்பிய மண்ணை கண்விழிக்க வைக்க வேண்டும் என்ற இந்த நாட்டு இயக்கப் பொறுப்பாளரின் வார்த்தைகள் துவாரகனுக்கு தாரகமந்திரமாக இருந்தது. இப்போது நேரம் மதியத்தை தாண்டிவிட்டது. We want தமிழீழம், We want தமிழீழம், Our Leder பிரபாகரன், Our Leder பிரபாகரன். முன்புபோல் வார்த்தைகளிலும் குரல்களிலுமிருந்த வேகமும் ஆவேசமும் குறைந்து போயிருந்தது. ஏற்கனவே குடித்து விட்டு கும்மாளம்குத்தி தாளம் போட்டவர்களின் கொதிப்பும் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப் போயிருந்தது. ஏறிய கொடிகள் சில இறங்கி இழுபட்ட நிலையிலும் ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. ஊர்வலத்துக்கென வந்துவிட்டு எங்கேயோ தமது சொந்தச் சொந்த அலுவல்களை முடித்துவிட்டு வந்த சிலபேர் இறுதி நேர ஊர்வலத்தில் வந்து தம்மையும் இணைத்துக் கொண்டார்கள். எங்கேயோ மலிவாக வாங்கிய பசுமதி அரிசிப் பைகளுடனும் மரக்கறிகளோடு பலசரக்குச் சாமான்களுமாக பலபேர் வந்து ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டார்கள். வானம் மெல்ல இருளைக் கௌவத் தொடங்கியது. வெய்யிலின் நிறமும் மாறி மெல்லத் தணியத் தொடங்கியது. சனங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கழரத் தொடங்கினர். பஸ்சில் வந்து ஏறிக்கொண்டான் துவாரகன். ஏறும்போது சில மாமாக்களிலிருந்தும் சக இளைஞர்களிலிருந்தும் வீசிய விஸ்க்கியின் வாசனையோடு புகைத்தல் மணமும் மூக்கைத் துளைத்தது. எல்லோரையும் ஒருகணம் மேலும் கீழுமாகப் பார்த்தான். கோபத்தினால் அவனது நரம்புகள் சூடேறி தலையில் வந்து விறைத்து நின்றது. பற்களைக் கடித்து தன் கையை மடித்து தனது கோபத்தைத் தணித்தபடி, ஒரு கையினால் பஸ்சின் கம்பியைப் பிடித்தபடி ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். சனவெக்கையும் வியர்வை நாற்றமும் ஏற்கனவே பாவிக்கப்படிருந்த குடிபானங்களின் மணமும் துவாரகனை ஒருகணம் ஆட வைத்தது. சில பெண்களையும் ஒருகணம் கிறுகச் செய்தது. பின்னால் இருப்பவர்களின் பாட்டுக் கச்சேரியும் சிரிப்பொலிகளும், கைதட்டல் ஆரவாரங்கள் எல்லாமே துவாரகனைத் திக்குமுக்காடச் செய்தது. வழமைபோல் அவனுக்கு கோபம் வரவில்லை.. கவலையே அவனை ஆட்கொண்டது. பலபேர் பலதும் பத்தையும் கதைத்துக் கொண்டார்கள். சிலபேர் பகிடிகளைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள், பலமுறை வடிவேலும் விவேக்கும் வந்துவந்து போனார்கள். சின்னத்திரை நாடகங்களும் ரிவித் தொடர்களும் பலமுறை அலசி ஆராயப்பட்டு சில நடிகை நடிகர்களில் குற்றப்பத்திரிக்கையும் வாசிக்கப்பட்டது. ஏதோ ரூறிஸ்ற் பஸ்சில் வந்து மாட்டுப்பட்டு விட்டேனோ என்றும் சுற்றுலா ஒன்றுக்கு வந்து திரும்பிப் போகின்றோமோ எனத் துவாரகன் மனம்நொந்து வருந்தினான். சில தாய்மார் பிள்ளைகளுக்கு உடைகளை மாற்றி உணவை ஊட்டிக்கொண்டிருந்தார்கள். இங்கே இவர்கள், ஆனால் அங்கே... எத்தனை குழந்தைகள்... பச்சைப் பாலகர்கள், இன்று யாருமற்ற அனாதைகளாக, ஏதிலிகளாக, அங்கவீனர்களாக, மன நோயாளிகளாக நினைக்க நினைக்க துவாரகனால் முடியாமல் இருக்கின்றது. எப்போதோ ரிவியில் பார்த்த இரத்தம் தோய்ந்த குழந்தை ஒன்றின் முகம் திரும்பத்திரும்ப வந்து கொண்டேயிருந்தது. இதயத்தின் எங்கேயோ ஒரு மூலையில் இருந்து அந்தக் குழந்தை அழும் சத்தம் துவாரகனுக்கு மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. பாட்டுக் கச்சேரியோடு பஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரைந்து கொண்டு சென்றது. எல்லாம் முடிந்துவிட்டது.

முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடங்கிப் போய்விட்டது. கண்ணை மூடிமுடிப்பதற்குள் எல்லாம்... இவ்வளவு காலம் கட்டிக்காத்த... நம்பமுடியவில்லை. என்றுமே சந்திக்க முடியாத அந்த வரலாற்றுத் துரோகம் எந்தவித அறிவித்தல்களுமின்றி உலகமே இருண்டு போனது. நம்பவும் முடியாமல் ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தீபட்ட ரணங்களாய் மனம் வேதனையால் வெந்து வெடித்துக் கொண்டிருந்தது. முன்பு போல ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் துவாரகனால் எதையுமே செய்ய முடியாதிருந்தது. அவனது இறுதியாண்டுப் பரீட்சையும் கூட அவனை ஏமாற்றிவிட்டது. தொடர்ந்தும் அவனால் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியாமல் இருந்தது. வருவோர் போவோரிலிருந்து கண்ணில்படும் அத்தனைபேரும் பையித்தியக்காரர்கள் போலவும் ஏமாற்றுக்காரர்கள் போலவுமே அவனுக்குத் தென்பட்டார்கள். நல்ல நித்திரையும் இல்லாமல் நிம்மதியும் இல்லாமல் துவாரகன் குழம்பிக் கொண்டே அலைந்து திரிந்தான். எதிலும் ஒரு பிடிப்பும் இல்லாமல், விருப்பும் இல்லாமல் பையித்தியக்காரன் போலவே மாறிவிட்டான். தகப்பன் கூறிய அந்த வார்த்தைகள் ஒவ்வொரு சொற்களாய் இதயத்தில் குத்தித் தைத்துக் கொண்டிருந்தது. ஒரு முறையல்ல பலமுறை அவ்வார்த்தைகளை இரைமீட்டிப் பார்த்தான். தமிழ்ப் படங்களிலே வரும் எதிரொலி போல் முன்னும் பின்னுமாக மாறிமாறி அவ்வார்த்தைகள் எங்கோ எதிரொலித்துக் கொண்டிருந்தது. தகப்பனின் குரலோடு அங்கே மரணித்த எல்லா உயிர்களும் எழுந்து வந்து துவாரகனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன.

துவாரகா..! தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இவை ஒரு கனத்தநாட்கள். இறந்தவர்களைப் பற்றிக் கவலைப்படுவதா? அல்லது அங்கே உயிரோடு இருப்பவர்கள் பற்றிக் கவலைப்படுவதா அல்லது முள்ளுக்கம்பி வேலிக்குள் அகப்பட்டவர்கள் பற்றிச் சிந்திப்பதா...? இந்தப் போராட்டம் பற்றி இப்பவும் சொல்லுகிறேன், நடந்து முடிந்த போராட்டம் பற்றியோ போராளிகள் பற்றியோ இங்கு கொச்சைப்படுத்தவோ வரவில்லை, அல்லது அதற்குரிய நேரமும் கூட இதுவல்ல, நாம் ஏன் தோற்றுப் போனோம் என்று விடைதெரியாமல் உன்னைப் போன்ற எத்தனையோ பேர் குழம்பிப் போயிருக்கின்றீர்கள். உண்மையாக உழைத்த எத்தனையோ பேர் இன்னும் அந்த நிலையிலிருந்து விடுபடவும் முடியாமல் விலகிக்கொள்ளவும் முடியாமல் தவித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் நடந்தது என்ன..? நான் அப்போது சொல்லச் சொல்ல உனக்கு விளங்கவும் இல்லை. நீ அதை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. ஆனால் நீயோ தமிழ் மக்களோ கண்டது தான் என்ன..? இருந்த நிலையை விட மக்களின் விடுதலையை இன்னும் முப்பது வருசத்துக்குப் பின்னாலே கொண்டு போய் தள்ளியிருக்கின்றார்கள். விடுதலை என்று சொல்லிச் சொல்லி கனபேர் இப்பவும் குளிர்காஞ்சு கொண்டிருக்கினம். உந்த ஊர்வலத்துக்கு வந்தவர்களும் கொடிபிடித்துக் கொண்டு குளறிக் கொண்டு திரிந்தவர்களும் உங்கடை ஆதரவாளர்கள் எண்டு மட்டும் நினைச்சு ஏமாந்துபோடாதே. இதுதான் மக்கள் போராட்டம் என்றும் நீ நினைச்சுவிடாதே..

மக்கள் போராட்டம் இங்கை நடக்கிற கலியாண வீட்டிற்கும் சாமத்திய கொண்டாட்டங்களுக்கும் நோட்டிஸ் குடுத்தினமெண்டு சம்பிரதாயத்துக்கு போய் சமூகமளிச்சிட்டு வாற விசயமில்லை. மக்கள் போராடமென்றால் மக்கள் தங்களுக்குள் இருக்கும் சகலவிதமான அடக்கு முறைகளுக்கும் எதிராக அது சாதியோ, மதமோ, பெண்ணடிமையோ, வர்க்கமோ எதுவாக இருந்தாலும் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து அந்த மக்களாலேயே முன்னெடுக்கப்படும் போராட்டம் தான் மக்கள போராட்டம்.



இதை நல்லா விளங்கிக் கொள்.

ஆனால் ஒரு பெரிய உண்மை. இந்த ஊர்வலங்களால் எங்கடை மக்கள் அங்கே நன்மை அடைந்தார்களோ இல்லையோ இங்கே இளையோர் கனபேர் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி இப்ப கலியாணமும் கட்டியிருக்கினம். இப்போது நீயெல்லம் இதை நன்றாய் விளங்கியிருப்பாய். அங்கே நடந்ததும் சரி இங்கே நடந்ததும் வெறும் போலிகள். இவ்வளவு காலமும் இந்த தமிழ்மக்கள் வெறும் மாயைக்குள் தான் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை விட மாயைக்குள்தான் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.., மறந்து விடாதே. இன்றைக்கு மொத்தமாக தமிழ்மக்களை உங்களால் முடிஞ்சவரை அரசியல் அனாதைகளாக்கி விட்டீர்கள். ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலம் தான் எமது விடுதலையை வென்றெடுக்கலாம் என்ற கொள்கையில் திடமான நம்பிக்கை கொண்டவன் நான். ஆனால் அங்கே ஆயுதங்கள் மௌனித்துவிட்ட பிறகும், எல்லாம் முடிந்துவிட்டது என்று மட்டும் எண்ணிக் கலங்கிவிடாதே... இந்தத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்று மட்டும் நீ நினைத்துவிடாதே. இன்றைய சமகாலத்தின் நிகழ்வுகளைக் கணக்கிற் கொண்டு, மக்கள் எல்லோரும் அரசியல் வேலை முறைகளுக்கு நகர்த்தப்பட்டு, அரசியல் மயப்படுத்தப்படும் போதுதான் ஒவ்வோர் மக்களாக ஓர் சரியான மக்கள் போராட்டத்துக்குத் தயாராகுவார்கள். ஈழத்தில் நடைபெற்றதும் ஆயுதப் போராட்டம் தான். ஆனால் அது மக்கள் தாங்கிய ஆயுதப் போராட்டம் அல்ல. ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பதற்கும் ஆயுதம் தாங்கிய மக்கள் போராட்டம் என்பதற்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கிறது. இறுகியிருந்த துவாரகனின் மண்டை கொஞ்சம் கொஞ்சமாய் இளகத் தொடங்கியது. ■

### இவள் என்ன ஜாதி?

நீயில்லாமல் நானில்லை என்றிருந்த
என் மாமன் மகன்கூட
எனை மனைவியாக்க மறுக்கின்றான்!
நான் என் வீட்டாலும் நாட்டாலும்
புறக்கணிக்கப்பட்டவள்!
ஏனெனில்
நான் நம்பியதோர் இலட்சியத்திற்காக
போராடிய முன்னாள் பெண்போராளி!

-லண்டன் விஜி-

www.tamilarangam.net






# தமிழ் மக்களின் அரசியல் வெற்றிடம்

-அகிலன்-

“தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்” என்று 70-ம் ஆண்டு பொதுத்தேர்தல் இறுதி முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த வேளையில், (யாழ் கச்சேரியில் இருந்து தேர்தல் முடிவுகளை அறிந்துகொண்டிருந்த) தமிழரசுக்கட்சித்தலைவர் செல்வநாயகம் கூறிய வாத்தைகள் இது. தமிழ்ப்பகுதிகளில் இத்தேர்தலில் அமிர்தலிங்கம், நாகநாதன் போன்ற பெருந்தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டதோடு, தென்னிலங்கையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்த காலம் இது. இதற்கு முந்திய இரு தேர்தல்களில் தமிழரசுக் கட்சியின் உதவியுடனேயே மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா, யூ.என்.பி. அரசுகள் ஆட்சியமைத்திருந்தன. இக்காலங்களில் தாங்களே தென்னிலங்கை அரசியலை தீர்மானிக்கும் பிரதான சக்திகள் எனக் கூறிவந்த தமிழரசுக்கட்சிக்கு இத்தேர்தல் முடிவுகள் பெரும் பேரிடியைக் கொடுத்து விட்டது.

தமிழரசுக்கட்சி காங்கிரஸை விட பல விடயங்களில் வித்தியாசமான போக்குகளைக் கொண்டிருந்தது. காங்கிரஸ் கட்சி தன்னை அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் என அழைத்தபோதிலும், அது கிழக்கை விடுத்து வட மாகாணத்திலேயே தன் பாராளுமன்ற அரசியலைத் தக்க வைத்திருந்தது. அதையும் “மன்னார் தவிர்ந்த அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ்” எனத் தமிழரசுக்கட்சி கிண்டல் அடித்துக் கொண்டிருந்த காலங்களும் இருந்ததுண்டு.
காங்கிரஸில் இருந்து பிரிந்த தமிழரசுக்கட்சி தன் பாராளுமன்ற அரசியலுக்காக வட-கிழக்கு மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்திய போதிலும், மிதவாத அரசியலுக்கு ஊடாக தமிழ் இனத்தேசிய வடிவத்தை பிரதிபலித்ததானது, காங்கிரஸைவிட வித்தியாசமானதோர் போக்கே.
தமிழ் இனத்தேசிய அரசியல் வரலாற்றில், 1961இல் தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகப் போர் (குறைபாடுகள் உண்டெனினும்) மக்களை போராடும் திசைநோக்கிச் செல்லவைத்தது. ஆனால் அதன் தொடரான பாராளுமன்ற மிதவாத அரசியலானது மக்களின் போராட்ட வல்லமையை மழுங்கடித்தது மட்டுமல்லாமல், ஓர் பத்தாண்டுகளுக்கிடையில் தமிழ்மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்ற இயலா நிலை அரசியலுக்கும் சென்றடைந்தது. இவ்வியலா நிலைக்கான காரணங்கள்தான் என்ன? தமிழ் இனத்தேசியத் தலைமை அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்மக்களை ஓர் சிறுபான்மைத் தேசிய இனமாக கணித்து எதையுமே செய்ததில்லை. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 50ற்கு 50-ல் இருந்து, இன்றைய நாடு கடந்த ஈழம் வரை இதைக்காணலாம். தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம்கூட ஆரம்பமான விதமும், அது முடிவுற்ற விதமும் எதிரும் புதிரும் கொண்டவையே. தமிழ்மக்களின் இழந்த உரிமைகளைப் பெறவென புறப்பட்ட இந்த அகிம்சைப்போர், முத்திரை வெளியீடு, தபால் விநியோகம் போன்றவற்றிற்கு ஊடாக ஓர் மாற்று தமிழ் அரசு என்ற நிலைக்கே இட்டுச் சென்றது. அத்தோடு தமிழரசுக்கட்சி-சமஷ்டி ஆட்சிமுறை என்பது- தனித்தமிழ் அரசும், அதன் அரசாட்சி வடிவமாகவுமே சிங்களப் பேரினவாதத்தால் சிங்கள மக்களுக்கு இனம் காட்டப்பட்டது. தமிழரசுக்கட்சி தன் சமஷ்டி அரசியலின் உண்மை நிலைத்தன்மைபற்றி சிங்களமக்கள் மத்தியில் எடுத்து விளக்கியிருக்க வேண்டும். ஓர் சிறுபான்மைத் தமிழ்தேசிய இனத்தின் பிரதிநிதி என்ற வகையில், அதை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும், அதைச் செய்யவில்லை. இத்தவறு கால காலத்திற்கு இருபக்க வாக்கு வங்கிகளாகவும் இனவாதமாகவும் வளர்த்தெடுக்கப்பட்டது. இதன் பரிணாம வளர்ச்சியானது 65-ம் ஆண்டு தேர்தலுக்குப்பின் தமிழ் இனத்தேசியத்தின் உதவியின்றி சிங்களப் பேரினவாதம் ஏகப்பெரும்பான்மையான பலத்துடன் பாராளுமன்ற ஆட்சியில் இருந்து வருகின்றது. வெகுஜனப் போராட்ட மார்க்கமற்ற மிதவாத பாராளுமன்ற அரசியலின் தொழிற்பாடு, எந்த பாராளுமன்றக் கட்சிக்கும் இயலாமைக்கே இட்டுச்செல்லும். இதற்கு தமிழரசுக்கட்சியும் விதிவிலக்கல்ல. இவ்வரசியல் அடுத்ததோர் ஐந்தாண்டுகளில் இன்னோர் பரிமாணம் பெற்றது. அதுவே கடந்த 30-ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நடைபெற்ற ஆயுதப்போராட்டமாகும். “நாங்களே நாங்கள் மட்டுமேதான் தமிழ்மக்கள் வரலாறு படைப்பவர்கள்” என 72-ல் வட்டுக்கோட்டையில் இருந்து புறப்பட்டு, முள்ளியவாய்க்கால்வரை கொண்டுவந்து முடித்து வைத்துள்ளனர். தமிழ்த்தேசியத்தின் மொத்த 60-ஆண்டுகாலப் போராட்டம் என்பது, சுயநிர்ணயப் போரை பூச்சியமாகியுள்ளதுடன், அவர்களை அரசியல் அநாதைகளாக்கி- அரசியல் வெற்றிடத்திலும் விட்டுள்ளது.
எமது நாட்டின் கடந்த 60-ஆண்டுகால பேரினவாத-குறுந்தேசிய இனவாத அரசியல் சாதாரண சிங்கள-தமிழ் மக்களைப் பிளவுபடுத்தியுள்ளது. இவற்றிற்கு சிங்கள-தமிழ் மக்களுக்கிடையில் கட்டியெழுப்பப்பட்ட புனைவுகள்-படிமங்களும் ஓர் பிரதான காரணி. இதனால் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப்போர் பற்றிய உண்மை நிலைமைகள் பெரும்பாலான சிங்கள மக்களிடம் சென்றடையவில்லை. சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை-தமிழ்ஈழம் என்றே பேரினவாத-குறுந்தேசியவாத அரசியல் அவர்களை எண்ண வைத்துள்ளது.
இதுபோல் முஸ்லீம் மக்கள் பற்றி குறுந்தேசிய இனவெறியர்களால் கட்டப்பட்ட புனைவுகளால், பாசிஸ-சர்வாதிகார நடவடிக்கைகளால் அவர்களும்

எதிரியாக்கப்பட்டுள்ளனர். இதை சிங்களப் பேரினவாதம் தனக்கிசைவாக்கி கிழக்குமாகாணத்தை துண்டாடும் வேலைகளையும் செய்துள்ளது. கிழக்கு மாகாணம் தேசிய இனப்பிரச்சினையின் (மூவினமக்கள்) குவிமையம். இன்றைய தமிழ்த்தேசியம் கூட இன்றும் இதை சரியான ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. மரபான குறுந்தேசியத்தியத்திற்குள் குறுங்கியே உள்ளார்கள். தமிழ்த்தேசியம் ஓர் மக்கள்சார் விடுதலை இயக்கமாக இருந்து, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப்போரை, புரட்சிகர வெகுஜனப்போராக முன்னெடுத்திருந்தால் அரசியல் அநாதைகளாகி-அரசியல் வெற்றிடத்திலும் விடப்பட்டிருக்கமாட்டார்கள்.

இந்நிலையில் தமிழ்மக்களின் எதிர்காலம்தான் என்ன? மகிந்த சிந்தனையையும் அதன்பேரினவாத நடவடிக்கைகளையும் ஏற்று அதனோடு சமதான சகஜீவனம் செய்வதா? தத்துவங்கள் சோறு போடாது "நம்புங்கள் மகிந்தன் நல்லவன்" அவர் தருவதை பெறுவது இன்னும் பெறவேண்டியவற்றிற்காக காத்திருப்பது என்ற டக்கிளஸ் - கருணா போன்ற ஜனநாயக நீச்சலடிப்பாளர்களின் பின்னால் செல்வதா? தமிழ்தேசியம் கண்டெடுத்த மரபான குறுந்தேசியத்திற்குள் குறுங்குவதா? ஐக்கியப்படும் சக்திகளிடம் இருந்து அந்நியப்படுவதா? இவற்றிற்கூடாக தமிழ்மக்கள் இழந்துள்ள அரசியல் வெற்றிடம் நிரப்பப்படுமா? தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப்போர் முற்றுப்பெறவில்லை. கடந்த அரைநூற்றாண்டிற்கு மேற்பட்ட காலமாக தமிழ்த்தேசிய அரசியலாளர்களால் அது சரியான திசை நோக்கிச் செல்லாது தற்காலிகப் பின்னடைவில் தரித்துள்ளது! இது தற்காலிகமானதே! இது சரியான பாதையின் ஊடாக புதுப் பரிமாணங்களோடு முன்னேறிச் செல்லும்! மனிதகுல வரலாறு என்பது எப்போதும் சமாந்திர நேர்கோட்டில் வந்ததுமல்ல. போவதுமல்ல! எமதுநாடு அந்நிய சக்திகளின் "அரசியல் விபச்சார விடுதியாகியுள்ளது" அவர்களின் இசைவிற்கேற்ப அரசியல் பொருளாதார இராணுவக் கட்டமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவால் எமது நாடு வரலாறு காணாத பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கின்றது. இதன் பிரதிபலிப்பை நம்நாட்டு மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். சிங்கள மக்களும் இவற்றுடன் தாம் இழந்த ஜனநாயக உரிமைகள் உட்பட்ட, அனைத்துச் சுதந்திரங்களுக்கும் போராட வேண்டியுள்ளது. தாம் நினைக்கும் ஓர் சுதந்திரமான ஜனநாயகப் பண்புடைய நிர்வாக அரசை, அரசியலை, நிலைநிறுத்த முடியாமல் தவிக்கின்றனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையே மாற்றத் திராணியற்றவர்களாகவே உள்ளனர். காரணம் மகிந்தா இன்னொரு புலியாக- செயற்படுகின்றார். இதை தக்கவைக்கவும், இதிலிருந்து சிங்கள மக்களை திசை திருப்பவுமே யாழ்ப்பாணத்தில் மீண்டும் புலி, தமிழகத்தில் மீண்டும் புலி முகாம் என கூப்பாடு போடுகிறது அரசு. இத்திசைதிருப்பு அரசியல் தற்காலிகமானதே. நீணடகால நோக்கில் வெகுஜனப் போராட்டமாகவே மாறும்! இவற்றோடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் இணைய வேண்டும்! இணையமுடியும்! தமிழ்த்தேசியத்தின் கடந்தகால தவறுகளில் இருந்து விடுபட்டு, இவ்வெகுஜனப்போரை சாதாரண சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் முன்னெடுக்க, வெகுஜன ஐக்கிய முன்னணியும் அதற்கான அரசியல் நிகழ்ச்சிநிரலும் தேவை. இந்நிகழ்ச்சி நிரலின் ஊடாக எம்நாட்டு மக்களின் எதிரிகளை, நாம் அவர்களுக்கு எளிதாக இனங்காட்ட முடியும். இவர்கள் சமகால நிலையில் பயங்கரவாதிகள்! நீண்டகால நோக்கில் கடதாசிப் புலிகளே. என வலியுறுத்தி, அப்பாதைக்கான நிகழ்ச்சி நிரலை, "மக்களே! மக்கள் மட்டுமே உலகின் உந்துசக்தி"யென முன்னிறுத்துவோம்.●

## செய்திகள்


### குடத்தனை கொட்டோடைப் பகுதியில் மக்கள் போராட்டம்.

கொட்டோடையில் தொடர்ந்தும் மண் அகழப்பட்டு வருகிறது. கனிவளங்களை அழிக்கும் நோக்கில் இம் மணல் அகழ்வு நடப்பதால் மக்கள் சினம் கொண்டனர். இவ்வாறு சினம் கொண்ட அப்பகுதி மக்கள், 25.03.2011 மதியம் 1மணி தொடக்கம் 2.30வரை வீதிமறியலில் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் மண்ணகழ்வை இடைநிறுத்துமாறு மகேஸ்வரி நிதியத்தில் இப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைப் போல் தெரிய வருகிறது. இதையடுத்து மக்கள் போராடக் கிளர்ந்தனர். கொட்டோடைப் பகுதியில் மணல் அகழும் உழவு இயந்திரங்களைத் தடுத்துநிறுத்தி சில மணிநேரங்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது..

---

### ஊடகங்கள் மீது தொடரும் வன்முறை!




யாழ் உதயன் பத்திகைக் காரியாலயத்துக்குள் புகுந்த (16.03.2011) தமிழ்ப் பொலிஸ் ஒருவர் அக்காரியாலயத்தைக் கொழுத்தப் போவதாக மிரட்டியுள்ளார். அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த இப்பொலீஸ் அனைத்தையும் கொழுத்தி விடுவேன் என திரும்பத்திரும்ப மிரட்டியுமுள்ளார். இதன் பின்னர் யாழ் பொலீஸ் அதிகாரிகள் வந்து இத்தமிழ் பொலீசைக் கைது செய்தனர். தொடர்ந்த விசாரணைகளை அடுத்து வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வாவின் உத்தரவின் பேரில் இவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என பொலீஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா தெரிவித்துள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இத் தமிழ் பொலீஸ், பொலீஸ் பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 500 தமிழ் இளைஞர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஈ.பி.டி.பி அமைப்பின் தீவிர ஆதரவாளர் என்று அவ்வூர் மக்கள் "உதயனு"க்குத் தெரிவித்தாகவும் சில செய்திகள் அரசல் புரசலாக அடிபடுகிறது.

www.tamilarangam.net



# எந்தக் கட்சியும் வெற்றிபெறாத களத்தில் தோற்றுப்போன மக்கள்



தாயகன் இரவி

இன்றைய சுரண்டல் அமைப்பைப் பேணும் வகையில், அதற்கு எதிராக மக்கள் போராடும் உணர்வுக் கொள்ளலைத் தடுப்பது ஆளும் வர்க்கத்துக்கு அவசியமான ஒன்று. இந்த மோசமான சமூக முறைமை பற்றி அறிவதற்கு முயலும் முதல் முயற்சிகளையே தடுத்துத் தூக்க நிலையில் உணர்வை மரத்துப்போகச் செய்வதற்கு காலத்துக்குக் காலம் எதையாயினும் சிறப்பு மேளமாக உருவாக்கித் தாலாட்டுப்பாடுவர் (எப்போதும் நிரந்தர மயக்கத்தில் ஆழ்த்தும் தொடர்புசாதனங்கள் - சிறப்பு விருந்தாக முட்டாள் பெட்டியும் சினிமாவும் செய்யத்தவறும் பணியைக்கூட இவை சாத்தியமாக்கும்)

அந்தவகையில் உள்ளூராட்சித் தேர்தல் தாலாட்டின் "ஆராரோ ஆரிரரோ" ஓசை அடங்கும் முன்னர் கிரிக்கெட் சமா தொடங்கிவிட்டது. மோசமான தேசிய வெறியைக் கிரிக்கெட் மூலமாகவும் ஊட்டிப் போதையூட்டும் இந்திய - பாகிஸ்தான் - இலங்கை என்பனவே இறுதி வெற்றிக்கான எதிர்பார்ப்பாயும் உள்ளன. ஏற்கனவே, போட்டி தொடங்கும்போதே, "போடா போடா ஓடிப்போடா, வெல்லப் போகிறோம் நாங்கள் தாண்டா" என்று "ஆசியத் தேசிய வெறியில்" இந்த மூன்றில் ஒரு நாட்டுக்கே வெற்றியென எமது தொடர்பு சாதனங்கள் பாடத்தொடங்கியிருந்தன.

இந்திய - பாகிஸ்தானிய தேசிய வெறிக்கு கிரிக்கெட் வெற்றியின் அவசியத்தை எல்லைப் போரைவிடவும் முக்கியமானதாக இரசிகர்கள் கருதிய போதிலும் தோற்றுப் போவதற்குக் கையூட்டுப்பெற்று ஏமாற்றும் வீரர்கள் அந்த இரு நாடுகளிலும் உள்ளனர். எவ்வளவு - எங்கே - எப்படி வாங்கினார்கள், வாங்குவதில் இருந்த சிரமங்களை எவ்வகையில் வென்றிருப்பார்கள் என்பதில் அவர்கள் தோற்றுப்போவது இருக்கும்.

அவ்வாறு சோரம் போகும் வியாபாரத்தில் இறங்காத அளவுக்கு இன்னமும் இலங்கை வீரர்களுக்கு ரோசமும் உண்டு, தேசிய வெறியும் தணியாமற் தொடர்கிறது. அவர்களுக்கான திறமையுடன் இவையும் கூட்டணியமைத்திருப்பதால் அநேகமாய் இலங்கைக்கான வெற்றி வாய்ப்பு தூக்கலாய் உள்ளது. பதினைந்து வருடங்களின் முன்னர் உலகக் கோப்பையை இலங்கை வென்றபோது கொலன்னாவ தாக்குதல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் கிரிக்கெட் போதை காரணமாக எந்த அதிர்வும் காட்டாமல் கொலன்னாவச் சுவாலை அடங்கிப்போயிருந்தது.

இப்போது, மற்றவரது பெண்டாட்டிகளைப் பரஸ்பரம் தூக்கியதால் கடும் கடுப்பில் மற்றவரின் காலைவாரும் கலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுவந்த இரு வீரர்களே சமாதானமாகித் தேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்காகப் போராடத் தொடங்கிவிட்டனர். அனைத்துக் கிரக நிலைகளும் இவ்வகையில் சாதகமாகிவிட்டதால் இலங்கைக்கான வெற்றி சர்வ நிச்சயம் (இதை வாசிக்கும் போது இந்த ஆரூடம் பொய்த்துப் போனது கண்டு கொடுப்புக்குள் நீங்கள் சிரிக்கவும் கூடும். தொடர்பு கொள்ள வாய்ப்பிருந்தால் அந்தநேரக் கிரகநிலை மாற்றத்தை எனக்குக் காட்ட இயலுமாயிருக்கும்).

வெற்றியோ - தோல்வியோ, எவ்வாறாயினும் கிரிக்கெட் தன் பங்குக்கு மிகச் சிறந்த ஆரிரரோவாக இருந்து இன்றைய பொழுதில் மக்களை மயக்க நிலைக்கு ஆட்படுத்திவருகிறது என்பதுதான் இங்கு முக்கியமானது. இந்த மயக்க நிலையோடு தொடர்புடையது அண்மைக்கால உள்ளூராட்சித் தேர்தல் முடிவு. தேர்தலில் வென்றது யார்?

பொது முடிவு, ஆளும் தரப்பு 55% வாக்குகளைப் பெற்று அதிக இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது என்பதாக அறிவோம். ஐ.தே.க, ம.வி.மு ஆகியன கைவசம் வைத்திருந்த இடங்களைக்கூட ஆளும்தரப்பு கைப்பற்றியிருக்கிறது. ஆயினும், அதுவும் தோற்றுப் போயுள்ளது என்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பு எப்படி?

ஏற்கனவே பெற்ற வீதத்தைவிடக் குறைத்து 55% ஆகியுள்ளது என்பது ஒரு கருத்து. அதைவிடத் தேர்தலில் வாக்களித்த மக்களின் தொகை கணிசமாய்க் குறைந்துள்ளது. அரசின் மீது வளர்ந்து வரும் அதிருப்தியின் வெளிப்பாடு இந்த அக்கறையீனம் என்பதும் அவதானிகள் கருத்து. பொருளாதார நெருக்கடி அதிகரிப்பு - நிர்வாகச் சீர்கேடுகள் - அபிவிருத்தியின் தாமதம் - குடும்ப ஆதிக்கம் என்பவை வளர்ந்து வருவதன் காரணமாக அதிருப்தி வளர்ந்து வந்தபோதிலும், அது வெறுப்பாகப் பண்பு மாற்றம் பெறவில்லை. அவ்வாறு வெறுப்பாக மாறியிருப்பின் தமது விமர்சனத்தை உணர்த்தும் வகையில் அரசுக்கு மாறாக வாக்களிக்கும் வகையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு நடைபோடவாவது வாய்த்திருக்கும்.

இப்போதுள்ள நிலையில் மத்தியதரவர்க்க-உயர்வர்க்க சிங்கள மக்களின் சந்தர்ப்பவாதமே அரசுக்கான பலம். விவசாயிகளும் அடிநிலை மக்களும் அரசுக்கான ஆதரவைத் தொடர்ந்து பேணிவருகின்றனர். கடந்தகால ஐ.தே.க. இன் பொருளாதாரக் கொள்கை தம்மைப் பாதித்த கொடூரத்தை அவர்கள் மறந்துவிடத் தயார் இல்லை. இன்றைய அரசின் பாதிப்பு அதனோடு ஒப்பிடுகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவர்களைப் பொறுத்தவரை குறைவு. மாறாக, மத்தியதர வர்க்கம் இன்றைய அரசின் பொருளாதாரக் கொள்கையை விடவும் ஐ.தே.க. இன் வரவால் தமக்கான வாய்ப்பு அதிகம் என்றே கருதுகின்றனர். இருப்பினும் அதன் வெற்றிக்கான மனமாற்றம் பெறவியலாதவர்களாக உள்ளனர். ஏன்?

ஒரே விடயம் பேரினவாத அகங்காரம் சார்ந்தது. தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை மறுத்து ஒரே தேசம் எனும் பேரில் பேரினவாத செயலொழுங்கு மேற்கொள்ளப்படுவதனைப் புலிகள் அழிப்போடு தொடர்ந்த அங்கீகரிப்பாக அவர்கள் கணிப்பதன் பேறு இது!

எவரும் வெற்றி பெறவில்லை என்பது சரிதான். ஆளும் தரப்பின் அரசாங்க - எதிர்க்கட்சிகள் எதுவும் வெற்றிபெறவில்லை. அதேவேளை இன்றைய எதிர்க் கட்சியான ஐ.தே.க.வும் தோற்றுப் போய் விடவில்லை. அதற்கான அரசியல் - பொருளாதார வேலைத் திட்டங்களின் பல கூறுகளையே இன்றைய அரசு மேற்கொள்கிறது. இதற்கு 18வது அரசியல் திருத்தத்தைவிட வேறு உதாரணம் வேண்டுமா? அதனால் பெரும் பயன் அவர்களுக்கே. இன்று இடப்படும் பல அத்திவாரங்களை அவர்களே தமக்கான பயன்பாடாக பெறவுள்ளனர்.

ஆக, தோற்றுப் போயிருப்பது மக்கள்தான். அது குறித்த உணர்வு கொள்ளல் இன்றைய ஆரிரரோக்களைத் தாண்டி சாத்தியமாகுமா? இதற்கான அரசியல் தத்துவார்த்தப் புரிதல் எப்படிப் பெறப் போகிறோம்?

இவை குறித்து கலந்துரையாடக் களம் அமைப்போம்- உரையாடித் தெளிவோம். செயலாற்றி உலகை மாற்றிப் புனைவோம். 0

---

விசேட அறிக்கை:

# மேற்குலகம் ஆதரிக்கும் லிபிய அல்கைதா

அமெரிக்க அரசுக்கு தெரிந்த ஓர் உண்மை, பொது மக்களுக்கு தெரியாமல் மறைக்கப்படுகின்றது. லிபியாவில் இடம்பெற்றது மக்கள் எழுச்சி அல்ல. மாறாக கடாபி அரசுக்கு எதிரான அல்கைதாவின் கிளர்ச்சி. ஏற்கனவே தொண்ணூறுகளில் இதே கிழக்கு லிபிய பிரதேசத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய- மத அடிப்படைவாத சக்திகளின் கிளர்ச்சி அடக்கப்பட்டது. இன்று கிளர்ச்சியாளரின் கட்டுப்பாட்டில் உள்ள பெங்காசி நகரமும், அதன் சுற்று வட்டாரமும் அல்கைதா விசுவாசிகளைக் கொண்டது. ஈராக்கில் இஸ்லாமிய அரசமைக்கும் நோக்குடன் அனுப்பப்பட்ட லிபிய அல்கைதா உறுப்பினர்கள், இதே கிழக்கு லிபிய பிராந்தியத்தை சேர்ந்தவர்கள். அவர்களது பெயர், ஊர், பற்றிய விபரங்கள் ஏற்கனவே அமெரிக்க பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் உள்ளன. லிபியாவில் அல்கைதா கிளர்ச்சியை பாதுகாப்பதற்காக, நேட்டோ படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பிரான்ஸ் உட்பட சில மேற்கத்திய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட, “இடைக்கால அரசில்” அங்கம் வகிக்கும் அரைவாசிப் பேர் அல்கைதாவுடன் தொடர்புடையவர்கள். இவர்களது பெயர் விபரங்கள் “பாதுகாப்பு காரணங்களுக்காக” இன்னும் அறிவிக்கப் படவில்லை.

அக்டோபர் 2007, ஈராக்கில் சிரிய எல்லையோர நகரமான Sinjarரில், அமெரிக்க படைகளின் இராணுவ நடவடிக்கையின் போது பல முக்கிய ஆவணங்கள் அகப்பட்டன. அமெரிக்காவை சேர்ந்த West Point Military Academy அந்த ஆவணங்களை ஆராய்ந்தது. ஈராக்கிற்கு எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் அல்கைதாவினால் திரட்டப்பட்டனர், அவர்களின் ஊர், பெயர் விபரங்கள் அந்த ஆவணத்தில் இருந்துள்ளன.

17430போராளிகள் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்கள். அதற்கு அடுத்த இடத்தில் லிபியாவைச் சேர்ந்த, அதிலும் குறிப்பாக டார்ணா நகரைச் சேர்ந்த போராளிகளே அதிகம். பெங்காசிக்கும், தொவ்றுக் நகருக்கும் நடுவில் அமைந்துள்ள டார்ணா வெறும் எண்பதாயிரம் மக்கட்தொகையைக் கொண்டது. அந்த ஊரைச் சேர்ந்த 52பேரது விபரங்கள் அந்த ஆவணத்தில் காணப்படுகின்றன. இன்று கிளர்ச்சிக் குழுக்களின் “சுதந்திர லிபியாவின் தலைநகரமான” பெங்காசியில் இருந்து 21 போராளிகள் சென்றுள்ளனர்.

மேற்கத்திய தலையீட்டையும், நேட்டோ படைகளினால் லிபியா விடுதலை செய்யப் படுவதையும் கிளர்ச்சியாளர்கள் எதிர்த்ததில் வியப்பில்லை. கடும்போக்கு இஸ்லாமியவாதிகளான அவர்கள், அமெரிக்கர்களை கொல்வதற்காக ஈராக் சென்றவர்கள். தங்களுக்கு ஆதரவளிக்கும் மக்களின் ஆதரவை இழந்து விடும் அச்சம் காரணமாக மறுத்து விட்டார்கள். இருப்பினும் மக்கள் எழுச்சி தொடங்கிய முதல் நாளில் இருந்தே, எகிப்திய இராணுவ அரசு ஆயுதங்களை அனுப்பி வைத்தது.

கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் அனுப்பி உதவுமாறு, ஒபாமா சவூதி அரேபியாவை கேட்டுக் கொண்டார்.

லிபியாவில் கடாபி அரசுக்கு எதிராக Libyan Islamic Fighting Group (LIFG) என்ற தலைமறைவு அமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. 2007ம் ஆண்டு, ஈராக்கில் அல்கைதா தொடர்பின் பின்னர் அது தனது பெயரை Al Qaeda in the Islamic Maghreb (AQIM) என்று மாற்றிக் கொண்டது..

www.tamilarangam.net



# புலியின் கழுத்தை அறுத்த துரோகிகளுக்கு இடையில் மோதல்

புலத்துக் களம்

பி.இரயாகரன்

புலித் தலைமையின் அழிவுக்குக் காரணம் நீயா, நானா என்று கேட்டு, புலிக் குழுக்களுக்குள் தர்க்கங்கள், பரஸ்பர குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றன. கடந்தகாலத்தில் மக்களை மந்தைகளாக்கி மேய்த்தவர்கள், மக்களை பலியிடுவதன் மூலம் மேற்கை வரவழைத்து தமிழீழத்தைப் பெறமுடியும் என்று நம்பிகையூட்டி வன்னித்தலைமையுடன் கூடிக் குலாவியவர்களுக்கு இடையில்தான் இன்று மோதல். முதலில் அனைத்துக்கும் வன்னிதான் காரணம் என்பதும், பின் தமக்குள் பரஸ்பரம் நீதான் என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

இப்படித் தம்முடன் நின்றவர்களை குற்றம் சாட்டியபடி, இறுதி யுத்தம் தொடர்பாகவும், அதன் அணுகுமுறைகள் தொடர்பாகவும் தம்மிடம் மாறுபட்ட கருத்துகள் இருந்ததாகவும் கூறிக்கொண்டு, மறுபடியும் புது வேஷம் போடுகின்றனர்.

அமெரிக்காவும், இந்தியாவும் தான் புலியை அழித்ததற்கு காரணம் என்றவர்கள், அவர்களுடன் கூடிக் குலாவி சதிகளையும் சூழ்ச்சிகளையும் நடத்தியது இந்த அழிவுக்குக் காரணமில்லையோ? மக்களைப் பலியிட்டு மேற்கை வரவழைக்க நடத்திய அரசியல் எது? அதில் உங்கள் பங்கு என்ன?

இதன் பின்னான உண்மைகள் என்ன? தமிழர் விடுதலைக் கூட்டணியின் வலதுசாரிய அரசியல் எடுபிடிகளாக உருவான நபர்கள், குண்டர்களாக, கொலைகாரர்களாக தம்மை வேறுபடுத்தி வெளிப்படுத்திய போதுதான் அவர்கள் புலிகள் ஆனார்கள். ஆம் இதற்கு அமைவாக பேரினவாதம் தொடர்ந்து விசிறிவிட்ட இனவாதமும், வெளிநாட்டு உளவு அமைப்புகளின் (எம்.ஜி.ஆர் கூட அமெரிக்காவின் வளர்ப்புப் பிள்ளைதான்) உதவியும் தான், புலியை விடுதலை இயக்கமாக்கியது.

வலதுசாரிய கூட்டணிக்கும் மக்களுக்கும் என்னதான் சமூகப் பொருளாதார உறவு இருக்கமுடியும்! அதன் அரசியல் எடுபிடிகளாக உருவாகிப் பிரிந்த புலிக்கும் மக்களுக்கும் என்னதான் உறவு இருக்க முடியும்! அன்று தொடங்கியது புலிகளின் மக்கள் விரோத அரசியல். அதன் மக்கள் விரோத கூறுக்கு எதிராக, அந்த அமைப்பினுள் உருவான அரசியல் முரண்பாடுகள் அனைத்தையும் நிராகரித்தும், அதை ஒடுக்கியும் உருவான தனி மனித சர்வாதிகார அமைப்பாகத்தான் அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய சக்திகளால் புலி திட்டமிட்டு வளர்க்கப்பட்டது.

இதற்கு அமைவாக அந்நிய உளவு அமைப்புகள் வழங்கிய பணம், ஆயுதம், ஆலோசனைகள் மூலம், புலிகள் தாம் அல்லாத அனைத்தையும் அழித்தனர். இதன் மூலம் புலிகள் மேல் இருந்த தனிநபர் சர்வாதிகாரத்தை, மக்கள் மேலான புலிச் சர்வாதிகாரமாகத் திணித்தனர். இதைத்தான் அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டம் என்றனர்.

இவைகளை எல்லாம் இந்தியா முதல் அமெரிக்கா வரை, புலிகளின் பின்னணியில் நின்று அரங்கேற்றினர். இது முள்ளிவாய்க்கால்களிலோ அல்லது அதற்கு சற்று முன்னமோ தொடங்கியதல்ல. இலங்கையின் தேசிய இன முரண்பாடு விடுதலைப் போராட்டமாக தொடங்கிய போதே, முள்ளிவாய்க்காலில் வைத்து முடிக்கும் அழிவுக்கான அரசியலை இந்தியா முதல் அமெரிக்கா வரை திட்டமிட்டு தொடக்கிவைத்தது. உலக ஒழுங்குக்கு உட்பட்ட வலதுசாரி அரசியலுக்கு ஏற்ற பொம்மைகளாகத்தான் புலிகள் அன்றுமுதல் செயல்பட்டனர்.

புலிகள் தங்களைத் தாங்களே தங்கள் அரசியல் மூலம் முள்ளிவாய்க்காலில் அழித்துக்கொள்ள முன்பே, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையே அவர்கள் அழித்துவிட்டனர். இப்படிப் புலிகளைக் கொண்டு விடுதலைப் போராட்டத்தை அழித்தவர்கள்தான் புலிகளை முள்ளிவாய்க்காலில் வைத்து புலியைக்கொண்டு அழித்தனர்.

இப்படி உண்மைகள் இருக்க, விடுதலைப்புலிகளுடன் நின்ற ஒவ்வொருவரும் இதற்கு உடந்தையாக பங்காளியாக இருந்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் எடுபிடிகள்தான், விடுதலையின் பெயரில் அமெரிக்கா முதல் இந்தியா வரை அவர்கள் எடுபிடிகளாக மாறி நின்றனர். இப்படி எடுபிடிகளாகி விடுதலைப் போராட்டத்தை அழித்த புலிகளுடன் கூடி நின்றவர்கள், இன்று புலிகள் அழிந்ததை விடுதலைப் போராட்டத்தின் அழிவாக காண்பதும் காட்டுவதும், பரஸ்பரம் குற்றம்சாட்டுவதும் தொடர்ந்து அரங்கேறுகின்றது.

இங்கு புலித் தலைமையின் கழுத்தை அறுத்தது யார்? எப்படி? ஏன்? எந்த நிலையில் நடந்தது? என்று தர்க்கம் தான் சுற்றிசுற்றி நடக்கின்றது. உண்மையில் இந்த விடுதலைப் போராட்டத்தை அழித்தது யார் என்ற தர்க்கமல்ல. விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா முதல் இந்தியாவுடன் கூடி நின்று அழித்ததை சரியென்று கருதுகின்றனர். இப்படி அழித்தவர்களை, அழிக்க வழிகாட்டியவர்கள் யார்? அழித்த போது யாருக்கு ஊடாக அதை வழிகாட்டினர்? எப்படி அதை வழிகாட்டினர் என்பதும்தான் இன்று அவர்களுக்குள்ளான சர்ச்சையாகின்றது.

யார் எப்படி தூக்குத் தண்டனை வன்னித் தலைமைக்கு நிறைவேற்றினர் என்பதில் நீயா, நானா என்பதில் புகுந்து,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உண்மைகளைப் புதைக்கின்றனர்.

இது தொடர்பான பல தரப்பு நடத்திய பரஸ்பர உரையாடல்கள் எவையும் இன்று பகிரங்கமாக்கப்படாத நிலையில், அவைபற்றிய சுயதீனமான பார்வைகள் பெற முடியாத இருட்டில் முன்நிறுத்தித்தான் குற்றச்சாட்டுகளை அவர்கள் தொடருகின்றனர்.

மறுஆய்வு இணையத்தளம் இது பற்றி தன் விமர்சனம் ஒன்றில், தம்மிடம் கூட பல ஆதாரங்கள் உண்டு என்று கூறியவர்கள், அதை பகிரங்கமாக வெளியிட முன்வரவில்லை. அவர்கள் தங்கள் விமர்சனத்தில் சரியான சாரத்தின் மேல் தவறான அரசியல் உள்ளடக்கத்தை முன்வைத்திருந்தனர். «முள்ளிவாய்க்காலுக்கு வெளியிலேயே இருந்த (தமிழ்நெற்) Tamilnet ஆசிரியர்கள் இருவருமே, புலிகளின் அழிவுக்கான காரணத்தை முள்ளிவாய்க்காலிலேயே தேடி, அந்த அழிவுக்கான காரணத்தைப் புலிகளைத் தவிர்த்துவிட்டு வேறு ஆட்கள் மீது போடப் பார்க்கின்றார்கள். இதன் மூலம், புலிகளின் அழிவு என்பது முள்ளிவாய்க்காலுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது என்பதை மறைத்துவிடப் பார்க்கின்றார்கள். இந்த இடத்தில்- வழுதியோ, அல்லது ரவியோ, அல்லது பத்மநாதனோ, அல்லது உருத்திரகுமாரனோ விடுதலைப் புலிகளின் தலைமையை நம்ப வைத்து ஏமாற்றினார்கள் என்ற ஆதாரமற்ற கதைக்கு மேலாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், அழிவின் விளிம்பில் தாம் நின்ற போது, அந்த அழிவிலிருந்து தம்மைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்கர், இந்தியர் என தமது வரலாற்று எதிரிகளையே நம்பும் அளவுக்கு விடுதலைப் புலிகளின் தலைமை போயிருந்தது என்பதாகும்.

மறுஆய்வின் இந்த வாதம்தான் முழுமையில்லா விட்டாலும், அனைத்துக்குமான அடிப்படையாகும். இதற்குள் பல பிழைப்புவாதிகள் பிழைப்பை நடத்தினர். இங்கு இரண்டு விடையம் மிகத்தெளிவாக தெளிவாகின்றது.

1.தமிழ் மக்களின் எதிரிகளை (அமெரிக்கா, இந்தியா...) நண்பனாகக் காட்டி நடத்திய போராட்டம்

2.இதைக் கொண்டு பிழைத்துக் கொண்ட பிழைப்புவாதக் கூட்டங்கள்

இங்கும் இரண்டும் அரசியல் ரீதியாக அம்பலமாக்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்காலில் நின்றவர்கள் மட்டுமல்ல, ஐரோப்பிய வீதிகளில் நின்று மேற்குநாட்டு ஆளும் வர்க்கத்துடன் கூடிக் குலாவிய கூட்டம் வரைதான் கூடித்தான் கழுத்தை அறுத்தனர். மக்களைப் பலியிடுவதன் மூலம், புலிகள் தம்மையும் காப்பாற்றி தமிழீழத்தைப் பெற முடியும் என்ற அரசியல் பின்னணியில் அனைவரும் கூட்டாக நின்று துரோகமிழைத்தனர். இதற்காகத் திட்டமிட்டு மக்களை பேரினவாதத்திடம் பலிகொடுத்தனர். இறுதியில் இதில் லாபம் அடைந்தது முள்ளிவாய்காலில் சிக்கி மாண்ட தலைமையல்ல, புலத்தில் தலைமை தாங்கிய கூட்டம் தான். அவர்கள் தமிழ்மக்களின் பல பத்து லட்சம் பணத்தை சுருட்டியதுடன், அதைக் கொண்டு சமூக மேலாண்மை கொண்ட அதிகாரத்தைத் தொடர்ந்து நிறுவியுள்ளனர். இதைப் பகிர்வதில் ஏற்பட்ட மோதல், அவர்களுக்குள் அங்குமிங்குமாக நடக்கின்றது.

கூடி நின்று தலைமையின் கழுத்தை அறுத்ததில் அவரா இவரா என்பதல்ல, இவர்கள் அனைவரும் அதற்குப் பொறுப்பு. இதைச் சுற்றி நடத்த அரசியல் சதுரங்க ஆட்டத்தில், இவர்கள் அனைவரும் கூடி பங்காற்றியிருந்தனர். நிச்சயமாக மாறுபட்ட கருத்துகளும் இங்கு இருந்து இருக்கும். ஆனால் யாரும் இந்தத் தவறான அரசியலை எதிர்த்தும், அழிவை நோக்கிப் போகின்ற பாதையைச் சுட்டிக்காட்டியும், மக்களைப் பலிகொடுப்பதை எதிர்த்து அந்த அமைப்பில் இருந்து நேர்மையாக வெளியேறி இருக்கவில்லை.

நடந்து முடிந்தபின், தமிழ்மக்களின் சொத்தை தமக்குள் பகிர்வதில் ஏற்படுகின்ற மோதல்கள் தான், முள்ளிவாய்க்காலில் வைத்து தங்கள் தலைமையின் கழுத்தை அறுத்தது யார் என்பது பற்றி பேசுகின்றனர். இந்த வாதங்கள் தர்க்கங்கள் எவையும் அழிவின் விளிம்பில் «தாம் நின்ற போது, அந்த அழிவிலிருந்து தம்மைக் காப்பாற்றுவதற்காக, அமெரிக்கர், இந்தியர் என தமது வரலாற்று எதிரிகளையே நம்பும் அளவுக்கு விடுதலைப் புலிகளின் தலைமை போயிருந்தது என்பதாகும்» என்பதை ஏற்று நடப்பவையல்ல. அவை சரியானவை என்ற அடிப்படையில் நின்று, தொடர்ந்து அதே திசையில் பயணித்தபடி நாய்ச் சண்டையில் ஈடுபடுகின்றனர். இங்கு «தமது வரலாற்று எதிரிகளையே நம்பும் அளவுக்கு» என்ற மறு ஆய்வு கூறுகின்ற கூற்றுக் கூட, இங்கு மற்றொரு தவறான பக்கத்தைக் கொண்டுள்ளது. அதாவது «தமது வரலாற்று எதிரி»யாக புலிகளை என்றும் இவர்கள் கருதியது கிடையாது. வர்க்க ரீதியாக புலிகள் கொண்டு இருந்த அரசியல் இவர்களை எதிரியாக அல்ல, நண்பனாகவே எப்போதும் கருதியது. இங்கு பகை என்பது வர்க்க ரீதியான தன் நண்பன் இலங்கை அரசுடன் கொண்டிருந்த உறவுதான் காரணம். இதைத்தாண்டி எதுவும் கிடையாது.

வர்க்க ரீதியாக தமிழ் மக்களின் எதிரியாக அமெரிக்காவையும், இந்தியாவையும் கருதுமளவுக்கு தமிழ் மக்களை சார்ந்து புலிகள் இயக்கம் இருந்தது கிடையாது. வரலாற்று ரீதியான எதிரியாக புலிகள் முன் இந்தியாவோ, அமெரிக்காவோ இருக்கவில்லை. மாறாக சூழலுக்கு ஏற்ற எதிரியாகவும் நண்பனாகவும் இருந்துள்ளான். இலங்கை அரசுடன் முரண்படும் போது புலியின் நண்பன், இணங்கும் போது புலியின் எதிரி என்று கருதும் எல்லையைத் தாண்டி, புலியின் அரசியல் எடுபிடித்தன செயல்பாடுகள் இருக்கவில்லை.

«புலிகளின் அழிவு என்பது முள்ளிவாய்க்காலுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது» என்பது சரியான ஒன்றில், தவறான அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டது. பல ஆண்டுகளுக்கு முன்னல்ல, புலியின் தோற்றுவாயே முள்ளிவாய்க்காலில் முடிக்கும் அரசியல் நிகழ்தகவைக் கொண்டு இருந்தது. அது உலகமயமாதல் நிபந்தனைக்கு உட்பட்ட ஒன்றாக அதன் வாழ்வும் சாவும் அமைந்திருந்தது. இங்கு தியாகங்கள் விலை பேசப்பட்டன. பிழைப்புவாதிகள் தொடர்ந்தும் பிழைத்துக் கொள்ளும் சண்டை மட்டும் இன்னும் முடியவில்லை. ○

www.tamilarangam.net



# இலங்கையில் சுதந்திரதினமாம்!!!

தமிழ் தேசியவாதிகள் கூறுகின்றனர் இது "சிங்களவனின்" சுதந்திர தினம் என்று. நாங்கள் கூறுகின்றோம், அதுவுமில்லை என்று. தமிழன், சிங்களவன் என்று எவனுக்கும், இலங்கையில் சுதந்திரம் கிடையாது. ஆம் இலங்கை மக்களுக்கு சுதந்திரமில்லை. இது தானே உண்மை.

இப்படியிருக்க குறுகிய தமிழ் இனவாதம் மூலம் சுதந்திரத்தைப் பற்றிய குறுகிய இனவாதப் பிரச்சாரம், சுதந்திரம் மறுக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு எதிரானது. இது இனவாத அரசுக்கு சார்பானது. இது தமிழ் மக்களுக்கு எதிரானது. தமிழனை சுரண்டும், தமிழ் சுரண்டும் வர்க்கத்தை முன்னிறுத்தும், தமிழ் வலதுசாரியமாகும்.

இலங்கையின் சுதந்திரம் யாருடையது?. அது சுரண்டும் வர்க்கத்தின் சுதந்திரமாகும். இது இனம் கடந்து சுரண்டும் சுதந்திரம். ஆம் மூலதனத்தின் சுதந்திரம். இதற்கு எல்லை கிடையாது. அதுவோ உலகம் தழுவியது. இதற்கென்று குறுகிய அடையாளமும் கிடையாது. இனம் கிடையாது. மதம் கிடையாது, சாதி கிடையாது.

இப்படியிருக்க இந்த சுதந்திரத்துக்கு குறுகிய அடையாளமிட்டுக் காட்டுவது, (சொந்த) மக்களை ஏமாற்றி சுரண்டுவது தான். மற்றவனை ஒடுக்கியோ, எதிரியாகக் காட்டியோ சுரண்டுவது தான். மக்களை பிளந்து, அவர்களை மோதவிட்டு, அவர்களை ஏமாற்றி சூறையாடுவது தான்.

சுதந்திரமோ மூலதனத்துக்கு தான். இந்த சுதந்திரத்தை அனுபவிப்பவன் யார்? சுரண்டும் வர்க்கமும், அதற்கு தலைமை தாங்கும் ஆளும் வர்க்கமுமாகும். இந்த உண்மையை மறுத்து முன்னிறுத்தும் சுதந்திரமும் சரி, சுதந்திர எதிர்ப்பும் சரி, மக்களை மொட்டை அடிக்கும் அரசியலாகும். இது மக்களுக்கு சுதந்திரத்தை மறுக்கும், சுரண்டும் வர்க்க அரசியலாகும். இது மக்களை ஏய்த்துப் பிழைக்கும் ஆதரவும் மட்டுமல்ல, எதிர்ப்பு அரசியலுமாகும்.

இப்படி இலங்கையில் பேரினவாதம், குறுகிய தமிழ்த் தேசியவாதம் இனவாதத்தைத் தூண்டிவிடுகின்றன. இதன் மூலம் மக்களைப் பிளந்து மோதலைத் தூண்டி, சுதந்திரம் பற்றி ஆதரவுப் பிரமைகளையும், எதிர்ப்புப் பிரமைகளையும் கட்டமைக்கின்றனர். இதன் மூலம் சிங்கள - தமிழ் சுரண்டும் வர்க்கமோ, மக்களை ஒடுக்கி சுரண்டி வாழ்கின்றன.

இலங்கையின் ஆளும் வர்க்கமோ பேரினவாதிகளாக தம்மைக் காட்டியபடி, தமிழ் மக்களை மட்டும் ஒடுக்கவில்லை, சிங்கள மக்களையும் ஒடுக்குகின்றது. இலங்கை மக்கள் அனைவர் மீதும் பாசிசத்தை ஏவுகின்றது. சட்டத்தின் ஆட்சியையே மக்களுக்கு மறுக்கின்றது. அனைத்தையும் தனக்கு ஏற்ப வளைத்துப் போடுகின்றது.

இன்று அரசை விமர்சிக்கும் ஊடகத்துக்கு இலங்கையில் சுதந்திரம் கிடையாது. அரச எதிர்ப்பாளர்களை இனந்தெரியாதவர்கள் கடத்துவது, படுகொலை செய்வது அன்றாடச் செய்தியாகின்றது.

இது தமிழன் சிங்களவன் என்று எந்த இனப் பாகுபாடுமற்றது. அது தமிழக மீனவர்களையும் கூட இதே அடிப்படையில் தான் கொல்லுகின்றது. பாசிசத்தின் மொழி அது. இதன் மூலம் சுரண்டும் வர்க்கத்தின் நலனை முன்னிறுத்தி, பாசிசத்தை மக்கள் மேல் ஏவியபடி இது தான் சுதந்திரம் ஜனநாயகம் என்கின்றது. இதை இலங்கை மக்களின் சுதந்திரமாக காட்ட, சுதந்திர தினத்தை முன்னிறுத்தி கொண்டாடுகின்றது.

**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**

*(துண்டுப்பிரசுரம் 04.02.2011)*

www.tamilarangam.net



# மகிந்தா தலைமையில் ஆடிய கிறிக்கெற்றில் தோற்றுப்போன சிங்களப் பேரினவாதம்



-பி.இரயாகரன்-

கிரிக்கெட் வெறும் விளையாட்டல்ல. வெறும் பொழுது போக்கும் அம்சமல்ல. கிரிக்கெட்டுக்கு குறுகிய மத இன சாதிய உணர்வு உண்டு. இப்படி அதற்கு ஒடுக்கும் பல உணர்வுகள் உண்டு. அப்படித்தான் அது விளையாட்டாகக் காட்டி வாழ்கின்றது. இதனால்தான் ஆளும் வர்க்கத்தால் அது போற்றப்படுகின்றது.

கிரிக்கெட் மக்களை அடிமைகொள்ளும் ஒரு போதைப் பொருள். ஆளும் வர்க்கத்துக்கு அடக்கியாளும் கருவி. மூலதனத்துக்கோ செல்வத்தை குவிக்கும் வியாபாரம். இதை சுற்றித்தான் தேசபக்திக் கூச்சல்கள். விளையாட்டு ரசனை பற்றி தர்க்கங்களும் வாதங்களும். தனிமனித சுதந்திரம் பற்றிய பிரமைகள், புலம்பல்கள் உருவாக்கப் படுகின்றன.

இலங்கை இந்தியாவை வென்றிருந்தால் இதை சிங்கள பெருமிதமாகக் காட்டி கொண்டாடும் வாய்ப்பை இலங்கை ஆளும் கூட்டம் இழந்து போனது. இந்த சிங்கள இனவாதத்துக்கு எதிரான தமிழ் உணர்வு, வடக்கில் இந்தியா வென்றதை கொண்டாடியது. சிங்கள இராணுவத்துடன் முறுகிக் கொண்டு கூச்சல் எழுப்பியது. மலையத்தில் தமிழ் சிங்கள மோதல். இலங்கை தோற்க வேண்டும் என்று கருதுமளவுக்கு, அடக்கு முறையின் கருவியாக உணருகின்ற எல்லையில் கிரிக்கெட் ஒரு தேசத்தின் இனம் சார்ந்த போதைப் பொருளாக உள்ளது. இங்கு அது விளையாட்டல்ல.

தன் நாடு தோற்க வேண்டும், மற்றைய நாடு வெல்ல வேண்டும் என்ற உணர்வு கூட இந்த அபினைக் கடந்ததல்ல. ஓர் எதிர்ப்பு என்ற அடையாளத்துக்கு அப்பால், வெல்லும் நாட்டில் அடக்குமுறைக்குப் பின்னால் அணிதிரள்கின்றனர். அங்கும் இங்கும் ஒரே அரசியல் சமூக பொருளாதார அடிமைத் தனத்தைத்தான் இது உற்பத்தி செய்கின்றது. வாக்கு போடுவது போல், கிரிக்கெட் தேசிய எதிர்ப்பு உணர்வு. கிரிக்கெட் விளையாட்டை கடந்துவிட்ட நிலையில், அதை புறக்கணித்தும் அம்பலப்படுத்தியும் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

இன்று தென்னாசிய சமூகங்களில் காலனித்துவ போதைப்பொருளாகி விட்ட கிரிக்கெட் மூலம், அந்தந்த நாடுகளின் அரசியலிலும், பொருளாதாரத்திலும் இது செல்வாக்கு வகிக்கின்றது. இதன் மூலம் கிரிக்கெட் போதையில் போலியான தேச பக்தியை முன்நிறுத்தி, கிரிக்கெட்டை வழிப்பாட்டு பொருளாக்குகின்றது.

இதற்கமைய ஆளும் கட்சிகள், ஆளும் வர்க்கங்கள் இந்த தேசபக்தியை முன்நிறுத்திக் கொண்டாடுகின்றது. மூலதனமோ இந்த தேசபக்தியை முன்நிறுத்தி, கோடிகோடியாக சம்பாதிக்கின்றது. கிரிக்கெட் சூதாட்டம் முதல் சட்டபூர்வ விளம்பரம் மூலம் புரளுகின்ற கோடிக்கணக்கான பணம், வியாபாரம் அனைத்தும் போதைக்குள்ளான கிரிக்கெட் ரசிகர்களின் மடியில் இருந்துதான் கறக்கப்படுகின்றது. உன் போதையில், உன்னிடம் இருந்துதான் உனக்குத் தெரியாமல் அவை கறக்கப்பட்டும் விடுகின்றது.

கன்றுக் குட்டியைக் காட்டி தாய் மாட்டிடம் பால் கறப்பது போல்தான், நீயும் கறக்கப்படுகின்றாய். தாய்க்குரிய தாய்மை உணர்வை தான், உனக்குத் தெரியாது அரசியல்வாதிகள் தமதாக்குகின்றனர். அவர்கள் உன்னை இந்த போதைக்குள் கட்டிவைத்துத்துதான் கறக்க உதவுகின்றனர்.
கிரிக்கெட் என்ற போதை மூலம் உருவாக்கும் உன் தேசபக்தி உண்மையானதா? உன் தேச உணர்வும், தேச பக்தியும் மக்களின் வாழ்வையும் தேச நலனையும் முன்நிலைப்படுத்துகின்றதா? ஒரு நாட்டின் முழுமக்களும் உனது உணர்வுடன் ஒன்றி நிற்கின்றனரா? இந்த தேசபக்தியை ரசிக்கின்ற அனைவரும் ஒரே விதமாக இதை உணரத்தான் முடியுமா?

இல்லை. இல்லை என்கின்ற போது, இந்தத் தேசபக்தி போலியானது. சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், ஒடுக்கும் தேசம், அது சார்ந்த உன் தேசியம் போலியானது. தேச வளங்களை அந்நியரிடம் தாரை வார்க்கின்ற, தனியாரிடம் விற்கின்ற தேசத்தைச் சார்ந்த உன் தேசியமும் போலியானது. மக்களைச் சுரண்டி ஏழ்மையில் வதைக்கும் உன் தேசம், ஒரு நேர கஞ்சிக்கு பதில் மரணத்தையும் நோய்க்கு மருந்தின்றி மரணத்தையும் கொடுக்கின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தேசியம் உண்மையானதல்ல.
உன்னைச் சுற்றிய மனித வாழ்வில், மனிதர்கள் சந்திக்கின்ற அவலங்களுக்கும் கொடுமைகளுக்கும் யார் பொறுப்பு. ஆம் உன் தேசமும், தேசிய உணர்வும்தானே பொறுப்பு. இதை மறுப்பவன் ஒன்றில் இதன் ஆதரவாளன் அல்லது கிரிக்கெட் என்ற போதையில் இருக்க வேண்டும்.

கிரிக்கெட் என்ற போதை உனக்கு தொடர்ந்து தருபவன், தேசம் தேசியத்தின் பெயரில் மக்களை அடிமைப் படுத்துகின்றவன் தான். தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் முதல் சாதித் தலைவன், மதத் தலைவன், மக்களை மொட்டையடிக்கும் ஜனநாயக அரசியல் வாதிகள், சினிமா நடிகர்கள் என்று இதன் பின் கோடிகோடியாக பெற்றுப் பிழைத்துக் கொள்ளும் கூட்டம்தான் உனக்கு கிரிக்கெட் என்ற அபினைத் தருகின்றது. கிரிக்கெட் என்ற போதையின் பின் விளம்பரமாகும் பெப்சிக்கும், கொக்கோ கோலாவுக்கும், மக்டொனஸ்சுக்கும் தேசியமும் தேசிய உணர்வுமுள்ளதா சொல்லுங்கள். உனது உணர்வு விளையாட்டு என்றால், அவனுக்கு என்ன வேலை இங்கு? இங்கு அவன்தான், தன் விளம்பரங்கள் மூலம், கிரிக்கெட்டை முன்நிறுத்தி உன்னை போதையாக்கி உன் உணர்வை தீர்மானிக்கிறான். அவன் உன் கிரிக்கெட் போதையில் தன் பொருளை உனக்கு தெரியாது உன்னிடமே விற்று, தன் விளம்பர பணத்தையும் அதை விட பல மடங்கு பணத்தையும் பெற்றுவிடுவான். இதுதான் அவனின் தேச பக்தி.

அன்று தென்னாசிய நாடுகளை ஆண்ட பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகள் கொண்டு வந்த சரக்கை, இப்போ தேசபக்தியின் பெயரில் நீ அடிக்கின்றாய். அன்று அவன் தென்னாசியக் கறுப்பு அடிமைகள் சுற்றியிருக்க, பொழுது போக்காக விளையாடிய விளையாட்டுத்தான் இன்று உனக்குத் தேசிய உணர்வைத் தருகின்றது என்றால், உனது தேசபக்தி அடிமை உணர்விலானது. இந்த நாடு, இந்த மக்கள் என்ற உணர்வு சார்ந்தல்ல. மக்கள் சார்ந்த தேசிய உணர்வு ஏற்படக் கூடாது என்பற்காக தரும் அபின்தான் கிரிக்கெட். இது உன் கண்டுபிடிப்பல்ல. அன்று பிரிட்டிஷ் அடிமைகள் எஜமான் விளையாடிய விளையாட்டை தாமும் விளையாடி, அதைச் சுதந்திரத்தின் பெயரில் அடிமைகளான உனக்கு மீளத் தந்துள்ளான். உன்னை இந்த கிரிக்கெட் போதையில் வைத்திருக்க, தொலைக்காட்சிகள் முதல் பெப்சி கோக்கோகோலா வரை கோடிகோடியாக உன்னிடம் இருந்து உறிஞ்சியபடி, போதையில் உன்னை அடிமையாக வைத்திருக்கிறான். நீ போதையேறி குரங்காட்டம் தலைகால் தெரியாது அங்குமிங்கும் குதிக்கின்றாய்.

மத வெறியேறி, இன வெறியேறி, சாதி வெறியேறி, சுரண்டல் வெறியேறி, விளையாட்டு ரசிகன் போர்வையில் கன்னாபின்னாவென்று உளறுகின்றாய். ஒரு மனிதனாக சக மனிதனை மதிக்காது ஒடுக்கியபடி, கிரிக்கெட் என்ற அபினை உண்டபடி தேசிய வெறியுடன் கூச்சல் போடுகின்றாய். இதைத்தாண்டி இது விளையாட்டாகவில்லை.●

**ஆராய்ச்சிக்கு உதவியவர்...**

ஜான் ஹன்டர் என்பவர் புகழ்பெற்ற ஆங்கிலேய அறுவைச் சிகிச்சை நிபுணர். அந்த உடலியல் நிபுணர், ஈ முதல் திமிங்கலம் வரை சுமார் 14 ஆயிரம் பிராணிகளின் சடலங்களை சேமித்து வைத்தார். அவற்றுள் அபூர்வ உருவமுள்ள மனிதர்கள், மிருகங்களும் இருந்தன. மருத்துவத்துறை முன்னேற்றத்திற்கு அந்த 14,000 பிராணிகளின் உருவ உள்ளமைப்புகளும் மிகவும் பயன்பட்டன.

# எண்ணை இருந்தால் ஈழம் மலரலாம்

-கங்கா-




நந்திக் கடலில் பேரம் நடந்தது
எம் மக்கள்
நீந்தவும் முடியாது நிர்க்கதியாய்
கை அசைத்து கடல் நடுவே தத்தளித்து தவித்தனர்
இப்ப மீளவும்
ஈராக்கின் பின்பாய் லிபியாவில் சொல்லப்படுகிறது
இந்தியாவையும் மீறி ஈழம் எடுக்கலாம்
எண்ணையைத் தோண்டிக்கண்டுபிடி தமிழா

அடித்துச் சொல்றாங்கள்
இதுதாண்டா உலகமயமாதல்
அமெரிக்கா பிரிட்டன் பிரான்சு மீட்பன்கள்
அணு ஆயுதம் இருக்கெண்டு பாய்வினம்
மக்களெல்லாம் சாகுதெண்டு அழுவினம்
மக்கள் கரிசனை பொங்கிக் குண்டாய் பொழிவினம்

எண்ணையிருந்தால் ஈழமெடுக்கலாம்
தேர்தல் நெருங்கினால்
அன்னை சோனியாவும் எமை ஆரத்தழுவும்
தம் கையைமீறினால் தான்
ராஜபக்சவும் கம்பி எண்ணலாமாம்...ம்
எல்லாம் வல்ல தேசங்கள் வகுத்த நியதியாம்

மக்கள் போரெழும் பூமியெல்லாம்
பூந்து நுழைந்தழித்துச் சீரழித்து
அடிவருடிப் பொம்மைகள் அமர்வதுவோ
வீழ்ந்ததுவோ மக்கள் எழுச்சி... இல்லைப்பார்
அடக்கப்பட்டோர் ஆர்த்தெழும் புயலாய்
அடங்காது
மக்கள் புரட்சி வெடித்துத்தான் ஓயும்...

*21.03.2011*

# நடையண்ணை மறைஞ்சா



கதை கேட்டவர் முத்தையா

**இ**ன்றைக்கு இருக்கின்ற இந்தச் சமுதாயம் நேற்று இருந்திருக்கேலாது எண்டது விளங்குதோ உனக்கு?

அப்படி விளங்கியிருந்தா சமுதாயம் எண்டா என்னடாப்பன் சொல்லு பாப்பம். தலையைச் சொறியிறது உனக்குத் தொழில். உனக்கு விளங்கப்படுத்த படாதபாடு படுகிறது என்ர தொழில் தம்பி.

மனிசராகப்பட்ட நாங்கள் தனிச்சு வாழலேலாது தம்பி. மற்ற மனுசர்களோட ஒரு ஒழுங்கு முறையுக்குள்ள சேர்ந்து பகிர்ந்து வாழுறது தான் சமுதாயம் எண்டிறம் தம்பி. தனிச்ச மனிசனாக சமுதாயத்தினுடைய எந்தப் பொருளையோ உறவையோ தீண்டாம வாழ ஏலாது தம்பி. நாங்க ஒவ்வொருத்தரும் சீவிக்கிறதுக்கு மற்ற மனிசர் கைபட்டு உருவாகின பொருள் எதையுமே தீண்டாம, மனிசரிட தொடர்ப முற்றுமுழுசாக அறுத்துக் கொண்டு வாழ ஏலாது தம்பி. பிறந்தவுடனேயே தாய்ப்பாலுக்கும் அணைப்புக்கும் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் எண்டு ஆரம்பிக்கிற வாழ்க்கை அதின்ர ஓட்டத்தில மனிசர்களோட சங்கிலித் தொடரா இணைஞ்சு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கோ இல்லையோ?

மனிசன் ஒரு சமூகப்பிராணி எண்டு சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறியோ? ஒரு சிந்திக்கத் தெரிந்த கூட்டுப்பிராணிகளான மனுசக் குழுமத்தில் நாங்கள் எங்கட வாழ்க்கைய இணைச்சுக்கொண்டு வாழுறமோ இல்லையோ? அப்படி எதிலயும் எவரிலயும் இணக்கமில்லாமல் தனிச்சு வாழ ஏலாது தம்பி. வாழ்க்கையெண்டது நாம அறியாமலே பரஸ்பரம் எங்களுக்கிடையில மனிசர்களுக்கிடையில நடக்கிற கையெழுத்துப் போடாத ஒப்பந்தம் - இணக்கம் எண்டதை நினைக்கவேணும்.

சரி சமூகம் எண்டது விளங்குது. இந்தச் சமுதாயம் ஏன் நிலையா இருக்காம நேற்றைக்கு ஒரு ஞாயம் இண்டைக்கு ஒரு ஞாயம் எண்டு மாறவேணும் அது விளங்கேல்ல?

அப்ப, நாங்க கொஞ்சம் பழய காலத்துக்கு போய் வருவமோ தம்பி. சோக்கான ஒரு கேள்வியொண்டு கேட்கிறன். நீ இப்ப சோறு காச்சுகிறாய் தம்பி. என்ன அடுப்பிலயே சோறு காச்சிறனி?

நான் என்னவோ விளக்கம் கேக்க நீங்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாம சில்லறைச் சமையல் சமாச்சாரத்துக்குள்ள குசினிக்குள்ள ஏன் கதையைக் கொண்டு போறியள்? ஊரில அம்மா விறகு அடுப்பில ஊதி ஊதி பத்த வச்சு காய்ச்சி வடிப்பா. நான் இஞ்ச ஒரு எலக்றிக் அடுப்பில சோறு காச்சுவன்.

சோறு காச்சிறதெண்ட இந்தச் சின்ன விசயத்துக்கே இப்படி ஒரு ரெண்டு விதமான நிலவரம் நீ வாழுற காலத்திலேயே இருக்கிறதெண்டா பழைய காலத்தில தம்பி, சோறு காச்சிறதுக்கு நெருப்பு இல்லாத, அதை மனிசன் கண்டுபிடிக்காத காலம் ஒண்டு இருந்திருக்கும் - ஒத்துக் கொள்ளிறியோ?

என்னண்ணை அடுப்பில இருந்து இப்ப நெருப்புக்க பாஞ்சிட்டியள்?

அடுப்போ நெருப்போ விசயம் இது தான். நெருப்பு எண்டது இல்லாத காலத்தில சோறு எண்டது சமைச்சிருக்க ஏலாது. மனிசன் என்னத்தையும் அவிச்சு சாப்பிட்டிருக்க ஏலாது. அப்ப பச்சையா வேக வைக்காமத்தான் சாப்பிட்டிருக்கேலும். மனிசன்ர பசிக்கு நீ இப்ப மக்டொனால்ஸில வாங்கி விழுங்கிற மாதிரியெல்லாம் இருந்திருக்க ஏலாது. இப்பிடி பின்னுக்கு பின்னுக்கு போய் மனிசன்ர வாழ்க்கைமுறையைக் கிளறினமெண்டால் மனிசன் தன்ர, தன்னைச் சார்ந்தவங்களின்ர பசிக்கு மிருகங்களையும் காய்கறி, பழவகைகளையும் தான் பச்சையா அவிக்காம சாப்பிட்டிருக்க வேணும்..

ஓமோம் நெருப்பைக் மனிசன் கண்டுபிடிக்க முந்தி மனிசன் காத்தைக் குடிச்சு மட்டும் சீவியம் நடத்தியிருக்கேலாது. அப்படியொரு நிலமையில பச்சையா காய்கறிகளை பழங்களை மரத்திலயிருந்து பிடுங்கி மிருகங்களின்ர இறைச்சியை பச்சையாகத்தான் சாப்பிட்டு உயிர் வாழ்ந்திருக்க வேணும். அது விளங்குது. ஆனால் மனிசன் பிறகு இறைச்சியை வேகவைச்சு சாப்பிடோணும் எண்டு ஏன் நினைச்சான்? மனிசனுக்கு அவிச்ச இறைச்சி ருசிக்கும் எண்டு யார் சொல்லிக் குடுத்தது?

தம்பி எப்பவுமே மனிசன் எதைக் கண்டுபிடிச்சாலும் அதை அவன் வானத்திலயிருந்து வாற அசரீரியிலயிருந்து பெறயில்லையடா. அறிவையோ ஆக்கத்திறமையையோ

www.tamilarangam.net



இயற்கையிலிருந்தும் தனக்கு தேவையான கருவிகளையோ பண்டங்களையோ உருவாக்கிறபோது கிடைக்கிற அநுபவத்திலயும் இருந்து தான் மனிசன் கிரகிச்சுக் கற்றுக் கொண்டிருக்க வேணும். படிப்படியாக முன்னேறியிருக்க வேணும். அந்த அறிவை இன்னொரு மட்டத்துக்கு விருத்தியாக்க அவன் தான் முன்னமே பெற்றுக் கொண்ட அநுபவத்தை தான் உருவாக்கியிருந்த பண்டங்களின்ர குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முனைகிறபோது அவன் புதிதாக ஒன்றை கண்டுபிடிக்கிறான். அவன்ர அறிவின் அடித்தளம் எண்டது இது தான். உனக்கு ஒரு சின்னக் கதை சொல்லவேணும். கேப்பியோ?

சின்னக் கதையெண்டு சொல்லி நீட்டி முழக்காமல் நித்திரை கொள்ளாம கேக்கக் கூடியதா புதுக்கதையா அவிட்டுவிட்டா கேக்க எனக்கு புளிக்காது.

நீ கேட்ட கேள்விக்கே திரும்பிப் போவம். மிருகங்களின்ர பச்சை இறைச்சியை வேகவைக்காமல் சாப்பிட்ட மனிசன் அது வேக வைத்தால் ருசியில் மாற்றமும் சப்புவதற்கு பதமாகவும் இருக்கும் எண்டது அவன்ர சிந்தனைக்கு எப்படி வந்தது எண்டு கேட்டாய். அந்த நெருப்பின்ர கதையை சொல்லுறன் கேளு. நீண்ட பெருங்காடு. மழை பெய்யும். காற்றடிக்கும். மரங்கள் செழித்திருக்கும். மிருகங்கள் கொழுத்திருக்கும்...

சரியாப் போச்சு அண்ண இந்த ஆலாபரன அடுக்குமொழியை விட்டிட்டு விசயத்துக்கு கெதியா வாங்கோவன் அண்ணை.

தம்பி அவசரப்படாத விசயத்தோட தான்ரா நான் இதைச் சொல்லுறன். நீ காட்டில வேற என்ன நடந்திருக்குமெண்டு நினைக்கிறா. வேட்டையாடி மிருகத்தை கொண்டு பச்சை இறைச்சியை திண்டு வாழ்ந்த மனிசனுக்கு அவிச்ச இறைச்சி கிடைத்தது மாயமோ மந்திரமோ அல்ல. இயற்கை படைத்த விருந்தடாப்பன் அது.

பூடகக் கதையள் சொல்லாமல் புட்டு வையுங்கோ விசயத்தை.

தம்பி நீ அவுஸ்திரேலியாவில அடிக்கடி நடக்கிற சம்பவம் ஒன்று சொல்லுபாப்பம்.

அண்ணே நீங்கள் நாசமாப் போக. தண்ணியைக் கிண்ணியைப் போட்டுட்டு தடுமாறுறியளோ அவுஸ்திரேலியாவுக்கும் அவிச்ச இறைச்சிக்கும் என்ன சம்பந்தம்?

இருக்கடா தம்பி. நீ கட்டுங்கடங்காமல் அங்க அடிக்கடி பரவுற காட்டுத்தீ பற்றிக் கேள்விப்படயில்லையே. கேள்விப்பட்டிருப்பாய். அப்படி எண்டால் உன்ர புத்தியில இப்ப அதைப்போட்டுப்பார். நீ சும்மா லேசுப்பட்ட ஆளில்ல. படு லாவகமாக விசயங்கள தொகுத்து பார்க்கிறதில நீ கெட்டிக்காரன்ராப்பா. இந்த இடத்தில நான் உனக்கு கதை சொல்லுறத நிப்பாட்டுறன். நீ தான் இப்ப இந்த கதையை முடிச்சு வைக்கவேணும். நான் உம் கொட்டிக் கொண்டு கதை கேட்கிறன். இப்ப நீ அண்ண. நான் தம்பி விளங்குதோ?

அண்ணை எனக்கு இதுக்கு மேலயும் விளங்காட்டி என்ர மண்டைக்குள்ள இருக்கிறது களிமண் எண்டு நீங்கள் கைதட்டிச் சிரிக்கிற கொடுமையை பாக்கேலாது. கொஞ்சம் பொறுங்கோ. ஒரு முறடு தேத்தண்ணியால மூளையை சுறுசுறுப்பாக்கிப் போட்டு எங்கட விடுகதைக்கு, நான் உங்களின்ர தயவில்லாமல் விளக்கம் தாறன். நீங்கள் சொல்லுதிறதில வெளிச்சமா எனக்கு என்ன தெரியுதெண்டா, நீங்கள் தொடங்கினபடி மழை மரம் மிருகங்கள் எண்டு மனிசர்கள் ஒரு ஆதிகாலச் சூழல்ல காட்டில இயற்கையோட வசிச்ச காலங்கள்ள காட்டுத் தீயும் இருந்திருக்கு. அந்தக் காட்டுத் தீ இண்டைக்கு அவுஸ்திரேலியாவில பற்றிப் பரவுகிற மாதிரி மரங்களில பற்றி எரிந்த போது மிருகங்கள் அதில அகப்பட்டிருக்கு. என்னண்ண இந்தத் தம்பி போகிற தடம் சரியோ பிழையோ?

நீ சூரப்புலியடா சொல்லிக் கொண்டு போ நான் கேட்கிறன். எனக்கு சீடனாய் நீ இருக்காதே. உன்ர புத்தியை நீயாகவே தீட்டு. ம்... சரி சொல்லு.

இந்தத் நெருப்பில அகப்பட்ட முழுசும் கருகாமல் கரியாகாமல் மிஞ்சின மிருகங்களின்ர இறைச்சிதான் இயற்கை அவனுக்கு குடுத்த முதல் அவியல் விருந்து. அந்த ஆதிகால மனிசன் இயல்பாக பசிக்கு இந்த நெருப்பு நடத்திய வேட்டையில் வெந்த இறைச்சியை புசித்திருப்பான். ஒன்று அவனுக்கு உடன வெளிச்சமாப் போச்சு அதென்னெண்டால் இறைச்சியை வேக வைக்க காட்டுத்தீயில தங்காமல் நெருப்பைக் கடையிறதெப்படி கட்டுப்படுத்திறதெப்படி எண்டும் அதுக்கான சாதனங்கள் என்ன எண்டதையும் கண்டறிய அவன் மூளையைக் குடைஞ்சிருப்பான். அப்ப இறைச்சியை வேக வைச்சு சாப்பிடலாம் எண்ட அறிவு மனிசனுக்கு இயற்கையால ஊட்டப்பட்டது எண்டாகிறது. ஆனால் அண்ணே ஒரு சின்னச் சந்தேகம். மனிசன் எப்படியண்ணே நெருப்புக்குச்சியைக் கண்டுபிடிச்சிருப்பான்.

இப்ப நீ உன்ர வயசுப் புத்தியைக் காட்டிட்டாய். அவசரப்பட்டிட்டாய். கொஞ்சம். நிதானமா யோசி. உனக்கு பொறி தட்டும்.

ஓமண்ணை கொஞ்சமில்லை நான் வலுவா அவசரப்பட்டிட்டன். நெருப்புக்குச்சிக்கும் அந்த ஆதிகால மனுசனுக்கும் இடையில எத்தனையோ ஆயிரம் வருசம் எண்டதை மறந்திட்டன். விறகு அடுப்புக்கும் எலக்றிக் அடுப்புக்கும் நீங்கள் சொன்ன தொடர்பு என்னவோ அதுவே தான் நெருப்புக்குச்சிக்கும் அந்தக்கால ஆதிகாலத்தில நெருப்பை மனிசன் உருவாக்கினதுக்கும் இருக்கின்ற அறிவு இடைவெளி. இதைத் தெரியாம நான் அவசரக் குடுக்கையாகியிட்டன். ஆனாலும் ஒண்டு நெருடுது. நெருப்புக் குச்சியை உரசி அந்த உரசல்ல தான் அதைப் பத்தவைக்கிறம். உரசி சூடு உருவாக்கலாம் எண்டது எப்படி மனுசனுக்கு தெரிஞ்சது. கையை கையையும் உரசிப் பாத்து சூடுகிளம்பிறதை பாத்தானா அல்லது?

இல்லை இல்லை. அண்ணை நீங்க வாயே திறக்க வேணாம். இப்ப எனக்கு விளங்குது. மனிசன் அந்தக் காலத்தில காட்டில அலைஞ்சு திரிஞ்சு மிருகங்களை துரத்தி வேட்டையாடி புசித்து பசியாறுகிறவனா இருந்திருப்பான். இந்தக் காட்டுத் தீ எப்படி உருவாகுது எண்டதை கண்டுகொள்ள அவன் தேடி அலைஞ்சு உலைஞ்சிருப்பான். காய்ஞ்ச சருகுகள் மரக்குச்சிகள்

www.tamilarangam.net



மேல சாதுவா நெருப்பு பத்தக் கூடியது எண்டதையும் கண்டு விளங்கியிருப்பான். ஆனால் நெருப்பை எப்படி தான் நினைத்தபோது உருவாக்கிறது எண்டதற்கு விடை தேடி அலைஞ்சிருப்பான். இதுக்கு விடையைக் கண்டவன் தான் அண்டைக்கும் இண்டைக்குமான நாகரீக உலகத்தின்ர கதவைத்திறந்து விட்ட விஞ்ஞானியாகவும் இருந்திருப்பான்.

சரி தம்பி ஆனால் இந்த நெருப்பை உருவாக்கிற வித்தையை கண்டுபிடிச்ச விசயத்தை ஒரு தனிமனிதச் சாதனையா சொல்லுறது பிழை. அது ஒரு கூட்டுக் கண்டுபிடிப்படா மோனே.

அதைவிடுவம் அண்ண. அது வேற விசயம். நெருப்பு உருவாக்கிறதெப்படி எண்ட விசயத்தை மனிசன் என்ன விதத்தில அறிஞ்சிருப்பான் எண்டால் இந்தக் காட்டுத் தீ உருவாகிறபோது அது எங்கே ஆரம்பிக்கிறது எவ்வாறு ஆரம்பிக்கிறது எண்டதை அவதானிக்க அவனுக்கு பல பேர்களுடைய அவதானம் தேவைப்பட்டது. இங்கதான் வருகுது நீங்க சொன்ன கூட்டுக் கண்டுபிடிப்பு. இப்படி அவதானிச்ச போது தான் இது உலர்ந்த மரக்காடுகளுக்கிடையே மூங்கில் மரங்கள் உரசுகிற போது பறக்கிற பொறிகள் உலர்ந்த சருகுகளில் பற்றிப் பிடித்து இது சுவாலையாகி பரவுகிறது என்ற அவதானத்தின் மூலமான அறிவு அவனுக்கு கிடைக்கிறது. கண் பார்த்துவிட்டது. கைகள் இப்போ தீக்கடையும் மரக்கருவிகளையும் கல்லோடு உரசும் கருவிகளையும் உருவாக்குகிறது. நாகரீகம் பிறக்கிறது. அப்பாடா மூச்சுவிடாமல் இப்ப நான் ஒரு பிரசங்கமே செய்திட்டன். மனிசன் அண்டையிலிருந்து இறைச்சியை வேக வைக்கத் தொடங்கிவிட்டான்.

இன்னுமொண்டு நீ மறந்திட்டாயடா தம்பி.

என்னண்ணே அது.

நெருப்பு இறைச்சியை வேக வைக்கும். அகப்பட்டதையெல்லாம் பொசுக்கும். எண்டதை மனிசன் கண்டுகொண்டான். அதை தானாகவே தனது தேவைக்கா உருவாக்கும் நுட்பத்தையும் கருவிகளையும் கண்டு பிடிச்சுவிட்டான். அதோட சேர்த்து இன்னொரு அறிவும் அவனுக்கு அனுபவத்தில கிடைச்சது.

அது என்னடாவெண்டால் நெருப்பில அழியாமல் இருந்த ஒரு பொருள். ஒண்டுமில்ல இது அவன் காலடி மண். மண் நெருப்பில அழியாம இருந்திருக்கு. நீ படுசுட்டி எண்டது எனக்கு தெரியும்.

நெருப்பில மண் அழியாம அப்படியே இருக்கிறதெண்டதும் மனிசனுக்கு சாதகமாய்ப் போய் அது இன்னுமொரு கண்டுபிடிப்பை உருவாக்கிச்சு. தீயை உருவாக்கத் தெரிஞ்ச மனிசனுக்கு தீ தீமையும் செய்யும் எண்டது விளங்காமல் போகுமோ அந்த அறிவு தான் சோதிப்பிழம்பாய் இறைவன் தோன்றி நந்தன் பக்தியை மெச்சி ஆட்கொண்டருளினார் என்று சுபம் சொல்லி நந்தன் கதையை நயவஞ்சகமாய் முடித்தது. உயிரோடு எரித்தது. தீயிலிட்டு கொலை செய்வது என்பது பக்தி மார்க்கத்தில் சோதியில் கலந்து முக்தி பெறுவது என்ற வஞ்சகக்காரர்களின் கருவியுமாயிற்று.

அது சரி அந்த இன்னுமொரு கண்டுபிடிப்பெண்டு சொன்னனியள் அது என்னண்ணே.

அது நீண்டு போயிடும் தம்பி. இன்னொரு நாளைக்கு ஞாபகப்படுத்து கதைப்பம்.

மண்ணுக்கும் நெருப்புக்குமான எதிர்நிலைத் தன்மையை மனிசன் மடக்கிப்பிடிச்சான் பாரு இது இன்னுமொரு பாய்ச்சல். அதுக்கு கிளைக்கதைகளெல்லாம் இருக்குது அப்பன். பிறகு பாப்பம். ஆனால் இந்த வேக வைக்கிற இறைச்சி, மழை, மண், நெருப்பு எல்லாம் அங்கயும் வரும் நீர் வாருமன் இன்னொரு நாளைக்கு விளக்கமா பேசுவம். நான் ஆரம்பிச்சு கதை சொன்னா நீ விளக்கத்தோட முடிச்சு வைக்க வேணும் எண்ட அந்த முறையை மறக்காதையடா தம்பி. சரி நா வறண்டு போச்சு. ஒரு பிளேன்ரீக்கும் கடிக்க இரண்டு வடைக்கும் ஓடர் குடுத்துவிட்டுப் போவன். என்ன குறைஞ்சே போயிடுவாய். சமுதாயத்தில தொடங்கி நெருப்பில நிற்கிறம். எல்லாம் போகப்போக விளங்கும். போயிட்டு வா அப்பனே.

அது சரி அந்த அடுத்த பாய்ச்சல் என்னெண்டு சொல்லுங்கோவன் நான் மண்டையையைக் குடையாமல் நிம்மதியா நித்திரை கொள்ளுவன்.

அட தம்பி ஆவி பறக்கிற தேத்தண்ணியில நான் கொஞ்சம் நாக்க நனைக்க விடு. பிறகு வா கதையளை மட்டும் கேட்டா காத்திருக்கிற காரியங்கள் கெட்டு போயிடும். போய் நாலு பத்து காரியங்கள் உனக்கெண்டு காத்துக்கிடக்கும். முடிச்சுப்போட்டு நேரம் கிடைக்கிற வேளையில வா.

"நானடிச்சா தாங்க மாட்ட நாலு மாசம் தூங்க மாட்ட" ரெஸ்ரோரன்டில் தமிழ் ரேடியோ அதட்டல் விட்டுக் கொண்டிருந்தது. ■




## பின்பக்கக் கவிதையின்....

செல்வக்குமார் என்ற இயற்பெயரைக் கொண்ட -ரமணி- ஒரு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் எழுதிய கடல் கவிதைகள் புதிசு இதழ் 9இல் -மீரா- என்ற புனைபெயரில் வெளியாகி இருந்தது. கவிஞனும் போராளியுமான ரமணி, கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு இறுதிவரை போராடினார். இதைப் பொறுக்க முடியாத ஆதிக்க சக்திகளான புலிகள் இவரையும் அரசியற்படுகொலை செய்திருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இந்திய மீனவர்களை அழித்த, இலங்கை மீனவர்களை அழிக்க முனையும் கடற் கொள்ளையை நிறுத்து! அதை ஆதரிப்பதை நிறுத்து!!**

இலங்கை வடகடலில் இந்திய மீனவர்களின் கைதுக்கு எதிரான போராட்டங்கள், இலங்கையின் இறையாண்மையை மட்டுமின்றி அங்கு வாழும் மக்களின் உரிமையையும் கூட மறுக்கின்றது.

இந்திய விஸ்தரிப்புவாதிகளும், தமிழக குறுந்தேசியவாதிகளும் இலங்கை மீனவர்களின் வாழ்வையே மறுத்து நிற்கின்றனர். எல்லையும் கடந்து கடல் வளத்தை அழிக்கின்ற அடாவடித்தனத்தை, அது நியாயப்படுத்துகின்றது. தமிழ் தேசியமும், இடது வேஷம் போட்ட தேசியவாதமும், இதற்கு பின்னால் நின்று குடை பிடிக்கின்றன. இந்த நிலையில் இலங்கை மீனவர்கள் அரசியல் அநாதைகளாகி, பேரினவாதத்திடமே தமக்கான நியாயத்தை கோருகின்ற அவலம்.

யுத்தம் முடிந்து இருவருடங்களாகும் இன்றைய நிலையில், இலங்கை தமிழ் மீனவர்களின் நிலையில் எந்த மாற்றமுமில்லை. கிழக்கு மற்றும் தென் தமிழ் கரையோர பிரதேசக் கடல்வளம் சர்வதேச மீன்பிடிக் குத்தகைக்காரர்களான சீனர்கள், ஜப்பானியர்களாலும், உள்ளூர் அரசுசார் கிரிமினல்களாலும் சுரண்டப்படுகிறது. யுத்தத்தாலும், சுனாமியாலும், இயற்கை அனர்த்தங்களாலும் மீன்பிடிசார் சமூகம் பொருளாதார வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளது.
பாரியளவில் இனவழிப்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர் சமூகம், இன்று இந்திய இழுவைப்படகுகளின் நாசகார மீன்பிடிமுறையால் சூறையாடப்படுகின்றனர். தேசத்தின் மீன்வளத்தை அத்துமீறி திருடுவது மட்டுமல்லாமல், மீன்வள வளர்ச்சிக்கு ஆதாரமான கடலடித்தள வளங்களையும் இந்திய இழுவைப்படகுகள் நாசப்படுத்துகின்றது. இதைத் தட்டிக் கேட்பாரின்றி நியாயப்படுத்தப்படுகின்றது.

அத்துடன் ஏதிலிகளாக, யுத்தத்தின் பின்னும், இலங்கை அரசின் கொடும் முகாம்களிலிருந்து ஊர் திரும்பிய மீனவர் சமுதாயம் சிறுகச் சிறுக முதலிட்டு உருவாக்கிய மீன்பிடி உபகரணங்களையும், வலைகளையும் கூட கடற்கொள்ளையர்கள் அழித்தொழிக்கின்றனர். இவர்கள் தமிழக மீனவர்கள் போர்வையில், கடல் கொள்ளையில் ஈடுபடும் மூலதனமாகும்.
உலக அளவில் ஐந்தாவது பெரிய மீன்பிடித்திறனை கொண்ட இந்த இந்திய இழுவைப்படகுகள், தமது எல்லைக்குட்பட்ட கரையோர வளங்களை அழித்தது. இதன் மூலம் தன்சொந்த கரையோர சிறு மீன்பிடித் தொழிலாளர்களை பட்டினியாக்கி விட்டு, இன்று துளிர்க்க முயலும் எம் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அவர்களிடமிருந்து பறிக்கின்றது.

இந்நிலைக்கெதிராக குரல் கொடுக்க வேண்டிய தமிழ்சமூகமும், இடதுசாரி இந்திய தோழர்களும், இந்நிலையை தமிழனுக்கும் சிங்களவனுக்கும் இடையிலான இன முரண்பாடாக சித்தரித்துக் காட்ட முயல்கின்றனர். இதன் அடிப்படையில், இலங்கை மீனவர்களை பலியிட்டு குறுகிய இன முரண்பாட்டை மேலும் கூர்மையடையச் செய்கின்றனர். இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், இலங்கை இராணுவம் இந்திய மீனவர்களை கொல்கின்றதென்பதாகும். கொலைகள் நிறுத்தப்படவேண்டுமென்பதில் எமக்கு எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இதில் முரண்பாடும் இல்லை. அதேவேளை இலங்கை இராணுவம், இனவெறி இராணுவம் என்பதிலும் முரண்பாடில்லை.

ஆனால் கொலைகளின் மறுபுறத்தில் இழுவைப் படகுகளால் நடாத்தப்படும் நாசகார மீன்பிடியும், அதனால் பாதிக்கப்படும் இலங்கை மீனவர் வாழ் நிலையையும், இக் கொலைகளைக் காட்டியே மூடிமறைக்கின்றனர். இந்திய அரசும், இந்தியாவை ஆளும் கட்சிகளும் இந்திய மூலதனத்தின் விஸ்தரிப்புவாதக் கொள்கைக்கு ஏற்ப பயன்படுத்துவதும், இதன் பின்னணியில் தான் அரங்கேறுகின்றது.
இதன் அடிப்படையில் நாம்:

## இலங்கை அரசே!

▶ இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணம் மூலம் மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் (இந்திய வள்ளம் உள்பட) வள்ளங்களை முடக்கு!!
▶ அதன் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடு!!
▶ கூலிக்கு வந்தவர்களை உடன் விடுதலை செய்!!!
▶ பிராந்திய மீன்பிடி மேலாதிக்கம் செலுத்தும் சீனாவுக்கும், ஜப்பானுக்கும் வளங்கப்பட்ட மீன்பிடி அனுமதியை உடனே நிறுத்து!!!
▶ கிழக்கு மற்றும் தென் இலங்கை மீன்பிடியை புனருத்தாரணம் செய்!!
▶ இறந்த தமிழக மீனவர்களுக்கும், இந்தியாவில் அத்துமீறி அழிந்த மீன்பிடி உபகரணங்களுக்கான நட்டஈடு வழங்கு!!

## இந்திய அரசே!

▶ பாக்குநீரிணையில் இழுவைப்படகு மீன்பிடியை உடனே தடை செய்!!
▶ இலங்கை தமிழ் மீனவர்களுக்கு அவர்களின் அழிந்து போன மீன்பிடி உபகரணங்களுகான ந்'டஈடு வழங்கு!!
இலங்கை அரசே! இந்திய அரசே!!
▶ மீனவர் கொலையை சர்வதேச மட்டத்தில் ஆராய ஆவன செய்!!!
▶பாக்குநீரிணையின் இருகரையிலும் கரையோர மீன்பிடியை அபிவிருத்தி செய்!! அதை பாதுகாக்கும் மீன்பிடிக் கொள்கையை வை!!!

**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**
*(துண்டுப்பிரசுரம் 16.02.2011)*

www.tamilarangam.net



# கடல் கவிதைகள்

மீரா (ரமணி – செல்வக்குமார்)

1.
அலைகள் உயர்த்தும்
ஆகர்சம் இழுத்து வீழ்த்தும்
இருப்பினும் வள்ளம் தாவியெழுந்து
வாடைக் கொண்டலை நகரும்
சுக்கான் பிடிக்கும் கைகள்
புடைத்து
நரம்புகள் விம்மும்
தொலைவில் போதலில்
தென்னைகள் ஒன்றாகிப் பச்சைக்காடு
வாடிகள் மறைந்ததன் பின்னரும்
சுடலையின் வெண்சுவர்
நெடுந்தொலை தெரியும்
அந்தி மஞ்சள் சிவப்பாய்
பின்; கறுத்தே போகும்
சுற்றிலும்
புழுதியாய் கலங்கி
நிறமற்றுப் போன கடல்
வாடை
தலையை அலைத்து ஈரமாய்க் குளிரும்
வலை விரித்து முடித்தலில்
அலையொன்று பாய்ந்து முற்றாய் நனைக்கும்
தூரத்திலெங்கோ தோன்றிய மேகம்
நிலவை விழுங்கி
குளிருடன் வீழும்
கடல் மேலே இப்படிக் கழியும்
மாரிக்கால இரவுகள்
இதுவரை எல்லாம்
வழக்கமாய் உள்ளன.
இன்னும்
நாரி கடுக்க வலை இழுத்தலும்
விழிப்பும் தான்
சில போதுகளில் மட்டும்
ஏதாவது சிக்கும்.

Munnani (ISSN:1892-6347) is published by NDPF (Org.Number: 996 514 749) and Printed at SET LINE DATA LTD, London

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்